# உதயன்


23

www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 258 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 26 வெள்ளிக்கிழமை (10/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# அமைதி முயற்சிக்கு உதவ தென்னாபிரிக்க அரசு தயார்

## கூட்டமைப்புடனான சந்திப்பில் அந்த நாட்டு அமைச்சர் உறுதி

### இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 10

மூன்று தசாப்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் தேசிய நல்லிணக்கம் மற்றும் அமைதி முயற்சிகளுக்கு முழுவீச்சில் உதவுவதற்குத் தென்னாபிரிக்கா முன்வந்திருக்கிறது. கொழும்பில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய சந்திப்பின்போது தென்னாபிரிக்க அரசின் உயர்மட்டத் தலைவர்கள் இந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்கப் பிரதிவெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் தலைமையிலான குழுவினரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழு நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியது. கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் போருக்குப் பின்னரான மக்களின் நிலைமை குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வினவியுள்ள தென்னாபிரிக்க தூதுக்குழு, போருக்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் அமைதி முயற்சிகளுக்குத் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும், இதுகுறித்து இலங்கை அரசுடனும் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் முறிவடைந்தமைக்கான காரணங்கள், அதனை மீள ஆரம்பிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் என்பன குறித்து தென்னாபிரிக்கத் தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு, மதச் சுதந்திரபறிப்பு உட்பட்ட பல விடயங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறது.

---


சிரிய இராணுவத்தின் போர்க்குற்ற ஆதாரங்களை வெளியிட்டது மனித உரிமை அமைப்புக்கள். மௌனமானது சிரியா. 9

சீனாவுடன் பேசுவதற்குத் தாம் தயாரென திபெத் அரசின் பிரதமர் லோப் சாங்சங்கே பச்சைக் கொடி காட்டியுள்ளார். 10

டெங்கு நோயை இனங்காண வருகிறது நவீன இயந்திரங்கள். சகல வைத்தியசாலைகளுக்கும் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை. 17

ஒலிம்பிக் போட்டிகளின் தீவிர ரசிகர் ஒருவர் போட்டியை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த வேளை அரங்கிலேயே உயிர்துறந்தார். 23


---

## டெல்றொக்ஷனின் இறுதிச்சடங்கு நாளை

### சடலம் நேற்றுக் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக.10

நேற்றுமுன்தினம் அதிகாலை ராகம வைத்தியசாலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான மரியதாஸ் டெல்றொக்ஷனின் இறுதிச் சடங்கு நாளை சனிக்கிழமை அவரது சொந்த இடமான யாழ்ப்பாணம் பாஷையூரில்

பார்க்க பக்கம் 4

---

## ஐ.நா. மட்டுமல்ல யாரும் வரலாம் ஆனால் ஆலோசனை வேண்டாம்

### அரசு திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஓக.10

இனப்பிரச்சினைத் தீர்விற்காக நாம் எவ்வளவு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்பதைப் பார்த்து தெரிந்துகொள்வதற்காக ஐ.நா. அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, இந்திய அரசியல்வாதிகளுக்கும் அழைப்புவிடுத்துள்ளோம் எனத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, நாட்டின் நிலைமையைப் பார்வையிடுவதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோமே தவிர, அவர்களது ஆலோசனைகளை நாம் ஏற்கமாட்டோம்; ஏற்கவும் முடியாது; அதற்கு நாம் கட்டுப்பட்டும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்விற்காக நாம் அர்ப்பணிப்புடன்

பார்க்க பக்கம் 4

---

## அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு,ஓக 10

நாட்டிலுள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் சீனி, ரின் மீன், பருப்பு, நாட்டரிசி, வெள்ளை மற்றும் சிவப்புச் சம்பா அரிசி உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருள்களின் விலை இன்று

பார்க்க பக்கம் 4

---

## இந்தியாவுக்குப் பொய்த் தகவல் தரும் பின்னணியில் புலம்பெயர் தமிழர்கள்


### அசோக் மேத்தாவுக்கு கோத்தபாய பதில்

கொழும்பு,ஓக 10

விடுதலைப் புலிகள் ஆதரவுப் புலம்பெயர் தமிழர்களும்,ஏனைய இலங்கை எதிர்ப்பு சக்திகளும் பொய்யான தகவல்களை இந்தியாவுக்கு வழங்குவதாக இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான பாதுகாப்புக் கருத்தரங்கில், இந்திய அமைதிப்படையில் முன்னர் பணியாற்றிய- ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் அசோக்

பார்க்க பக்கம் 4



---

## வரதராஜப் பெருமாளுக்கு எதிராக புதுடில்லி நீதிமன்றத்தில் வழக்கு

புதுடில்லி,ஓக 10

புதுடில்லியில் தற்போது வசிக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளை, வேறு இடத்துக்கு மாற்றுமாறு கோரி புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

---

## டெசோவில் விக்கிரமபாகு பங்கேற்க முடியாத நிலை

### விஸா அனுமதி மறுப்பு

கொழும்பு,ஓக 10

சென்னையில் தி.மு.க. நடத்தும் டெசோ மாநாட்டில் பங்கேற்பதற்கு, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவுக்கு இந்தியா விஸா வழங்க மறுத்துள்ளது.

அவர் இந்த விஸா பெறுவதற்குக் கொடுத்த விண்ணப்பத்தைக் கொழும்பி

பார்க்க பக்கம் 4

---

## இருபாலையில் தனித்திருந்த மூதாட்டி நேற்றுக் கொலை

### நகைகளும் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக 10

இருபாலை பழம் வீதியில் தனித்து வசித்து வந்த 70 வயது மூதாட்டி கொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் அணிந்திருந்த நகைகளும் திருடப்பட்டுள்ளன.

இருபாலை பழம் வீதியைச் சேர்ந்த குமாரசாமி மங்கையர்க்கரசி என்ற மூதாட்டியே கொலைசெய்யப்பட்டவராவார்.

இவரது 4 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசிக்கும் நிலையில் இவர் தனது வீட்டில் தனியே வசித்து வந்துள்ளார். கடந்த 4 ஆம் திகதி இவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் அயல் வீட்டார் குறித்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்ற போது வீட்டின் கதவு திறந்திருந்தது. வீட்டினுள் மூதாட்டி சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

மூதாட்டியின் கண்ணாடி இரத்தம் தோய்ந்த நிலையில் பெரிய கல், இரத்தக் கறையு

பார்க்க பக்கம் 4

---

## கிழக்கு மாகாண சபைக் கலைப்புக்கு எதிராகத் தாக்கலான மனு தள்ளுபடி

கொழும்பு,ஓக 10

கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. கிழக்கு உள்ளிட்ட மூன்று மாகாண சபைகள் கலைக்கப்பட்டு, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

பார்க்க பக்கம் 4

---

## இசற் புள்ளி விவகாரத்துக்காக வீதியில் இறங்கிப் போராட்டம்

கொழும்பு,ஓக 10

இசற் புள்ளி விவகாரத்தில் மாணவர்களுக்கு அரசு நீதி வழங்கச் செய்வதற்காக ஐ.தே.க. வீதியில் இறக்கத் தயார் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இப்பிரச்சினையை

பார்க்க பக்கம் 4

---

## பயிரழிவுக்கு 15 மில்லியன் ரூபா நட்டஈடு கோரும் விவசாயிகள்

### கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தத் தவறியதால் சாவகச்சேரி நகரசபைக்கு 'நோட்டீஸ்'

தென்மராட்சி, ஓக.10

சாவகச்சேரி பிரதேச சபையிடமிருந்து 15 மில்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகை கோரி சட்டத்தரணி மூலம் முன்னறிவித்தல் வழங்கியுள்ளனர் தனங்கிளப்பு கமக்கார அமைப்பினர்.

கடந்த வருடம் காலபோக நெற்செய்கையின் போது சேதங்களை ஏற்படுத்திய,

பார்க்க பக்கம் 4

# இன ரீதியான பிரசாரங்களுக்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,ஓக10

இனரீதியான தேர்தல் பிரசாரங்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காதென அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுத் தகவல் ஊடக அமைச்சில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளில் இனரீதியான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பில் உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுச் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மக்கள் இன ரீதியாகச் சிந்தித்து வாக்களிக்கக் கூடாது. கொள்கை-அபிவிருத்தி மற்றும் ஜனநாயக உரிமை ஆகியவற்றை முன்னிறுத்தியே மக்கள் தமது தீர்ப்பை வழங்கவேண்டும் என அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

சில அமைச்சர்களும் இனரீதியான தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது பற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு ஒருபோதும் பின்நிற்காது என்றார். (த)

## சக சட்டத்தரணி மீது திடீரென பெண் சட்டத்தரணி வசைமாரி

பலர் முன்னிலையில் தாம் கடமையாற்றும் இடத்தில் இளம்பெண் சட்டத்தரணி ஒருவர் இன்னொரு சட்டத்தரணி மீது பொது இடங்களில் பயன்படுத்தத்தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் சட்டத்தரணிகள் மற்றும் மக்களிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

குறித்த இரு சட்டத்தரணிகளும் தமது கடமையின் நிமித்தம் வாதத்தில் ஈடுபட்டிருந்தனர். திடீரென ஆத்திரம் கொண்டவராக அந்த இளம் பெண் சட்டத்தரணி கடமை இடத்தில் வைத்து சக சட்டத்தரணி மீது அநாகரிகமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்துள்ளார். இத்தகைய சம்பவத்தை எதிர்பார்க்காததால் அதனை நேரடியாகப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் திகைத்துப்போய் விட்டனர். கற்றறிந்த ஒருவரின் நாகரிக நடத்தையாகஇது இல்லை என்று அவர்கள் குறைப்பட்டனர்.

அது குறித்து சட்டத்தரணி ஒருவர் தெரிவித்ததாவது-

"இவ்வாறான அநாகரிகமான செயல்களில் ஒரு பெண் சட்டத்தரணி - அதுவும் பிரபலமான சட்டத்தரணி ஒருவரின் உதவியாளர்- இறங்குவது என்பது முன்னெப்போதும் நடந்திராத ஒன்று. பலர் முன்னிலையில் இவ்வாறு அவர் நடந்துகொண்டது என்னை மிகுந்த வேதனையில் ஆழ்த்தியுள்ளது. மக்களை வழிப்படுத்த வேண்டிய, துறையிலுள்ள ஒரு இளம் பெண் சட்டத்தரணி இவ்வாறு கீழ்த்தரமாக நடந்துகொண்டால் மக்கள் எப்படி இத்தகையோரை மதிப்பர்? - என்றார்.

## 15ஆவது ஆளுநர் மாநாடு முதல் முதலாக யாழில்

யாழ்ப்பாணம், ஓக.10

தேசிய ரீதியிலான 15 ஆவது ஆளுநர் மாநாடு முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மூன்று தினங்கள் நடைபெறஏற்பாடாகியுள்ளது.- இவ்வாறு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே செப்ரெம்பர் 21 ஆம் , 22 ஆம், 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கான மாநாட்டு மண்டப அமைப்புகள், இடம்பெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் யாழ். பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ங-4)

## புலி உருவத்தைப் பச்சை குத்தியிருந்த பிரான்ஸ் இளைஞன் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம், ஓக.10

இலங்கைப் படத்தினுள் புலியின் உருவத்தை கையில் பச்சைகுத்தி, நல்லூர்த் திருவிழாவுக்கு வந்த பிரான்ஸ் நாட்டு இளைஞரை யாழ். பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார்

சம்பவம்தொடர்பில்மேலும் தெரியவருவதாவது:-

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவுக்காக பிரஸ்தாப 24 வயது மதிக்கத்தக்க இளைஞர் பிரான்ஸிலிருந்து தனது தாயாருடன் வந்திருந்தார். திருநெல்வேலியில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த அவர் திருவிழாவுக்குச் சென்று வந்துள்ளார்.

அவர் தனது கைத்தோள் பட்டையில் இலங்கைப் படத்தினுள் புலியின் முழு உருவமும் அடங்கும் வகையில் பச்சை குத்தியுள்ளார்.

அவரைக்கண்ட பொலிஸார், இராணுவப் புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்துள்ளனர். பிரஸ்தாப இளைஞர் இந்துப்பாரம்பரியப்படி மேலங்கி அணியாமல் வேட்டி சால்வையுடன் ஆலயத்தினுள் நுழைந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இவர் கைது செய்யப்பட்டு ஒருநாள் பொலிஸ் தடுப்பில் வைத்து கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பிரஸ்தாப இளைஞர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் என்று குற்றஞ்சாட்டி யாழ். நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தினார்.

விசாரணையின் போது தான் பிரான்ஸ் நாட்டில் பிறந்து வளர்ந்தமை பற்றி எடுத்துக்கூறிய இளைஞர் பிரான்ஸ் நாட்டு குடியுரிமைக்கான ஆதாரமாக கடவுச்சீட்டை நீதிவானிடம் காண்பித்து தான் நிரபராதி எனத் தெரிவித்துள்ளார். அதனைப் பரிசீலித்த பின்னர் நீதிவான் இளைஞனை விடுதலை செய்தார். அந்த இளைஞன் தமிழ் மொழியை விட ஆங்கிலம் மற்றும் பிரான்ஸ் மொழிகளில் சரளமாகப்பேசினார். என்றும் கூறப்பட்டது. (ங-4)




உதயன் இணைய வானொலி

www.uthayanradio.com

தினமொரு பரிசுக் குலுக்கல்

"கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சேர்ந்த......" என்று பாடல் பெற்ற ஈழத்துத் திருத்தலத்தின் தீர்த்தமாக அமைவது எது?

1. கீரிமலை
2. பாலாவி
3. பாபநாசம்
4. முன்னேஸ்வரம்

பெயர் :....................

முகவரி :....................

வயது :.................... தொ.பே. இல :....................

சரியான விடைகளை எழுதி, பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்
2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா
3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

நேற்றைய புதிருக்கான விடை : அருணகிரிநாதர்

வெற்றிபெற்றோர் :

| 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|
| நா.தனபாலசிங்கம் | வ.பிரதீபா | P.அனோ |
| யாழ்ப்பாணம் | நல்லூர் | சாவகச்சேரி |

பரிசுத் தெரிவுக் குலுக்கல் இன்றிரவு 7.30 மணிக்கு சிறப்புக் கலையக முன்றலில்....

அனுசரணை:

Skills for Life | Gateway Language Centre | IPICT | e-Citizen

சர்வதேச தராதரத்துடன் உங்கள் உயர் கல்விக்கான வாய்ப்புக்களுக்கு.......



Gateway CfICT

Gateway Centre For ICT Education

347, Kasthuriyar Road, Jaffna

Branches : Nelliady & Chavakacheri


### இணையத்தள பதிவுக் கட்டணம் குறைப்பு

புதிய செய்தி இணையத் தளங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணத்தை ஒரு லட்சம் ரூபாவிலிருந்து 25,000 ரூபாவாககுறைப்பதற்குஅமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அத்துடன் வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் 10,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக ஊடகப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

புதிய செய்தி இணையத் தளங்களைப் பதிவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவை கட்டணமாக அறவிடுவதற்கும் இத்தகைய இணையத் தளங்களுக்கான வருடாந்த புதுப்பித்தல் கட்டணமாக 50,000 ரூபாவை அறவிடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம ளித்துள்ளதாக ஜூலை 31 ஆம் திகதி அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

### ஓட்டோ சரிந்து மூதாட்டி காயம்

அளவெட்டியில் இருந்து நல்லூர் கந்தசுவாமிகோயில் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ ஒன்று யாழ். கலட்டிச் சந்தியில் சரிந்து வீழ்ந்ததில் முதிய பெண் ஒருவர் முகத்தில் காயமடைந்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த அருந்ததி குணபாலசிங்கம் (வயது-63) என்பவரே இந்தச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். அருகே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுவதைத் தவிர்க்க முயன்றபோது ஓட்டோ சரிந்ததாக கூறப்படுகிறது. காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ். பொலிஸார் இது குறித்த விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ங-4)

### தேயிலை விலை உயர்வு

தேயிலை ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள கென்யா, இந்தியா போன்ற நாடுகளில் அதிக வறட்சி ஏற்பட்டுள்ளமையால், இலங்கையின் தேயிலைக்கான விலை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கையிலும் வறட்சி காணப்படுகின்ற போதும், ஏனைய நாடுகளின் உற்பத்திகள் குறைவடைந்துள்ள நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.ஒரு கிலோ தேயிலைக்கான விலை 4 டொலர்களை கடந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது 41 சதவீத அதிகரிப்பு என கூறப்படுகிறது. (த)

## ஆம்ஸ்ட்ரோங்குக்கு அறுவைச் சிகிச்சை



நிலவில் முதன்முதலாகக் காலடி எடுத்து வைத்த மனிதர் என்று சாதனை படைத்த விண்வெளி வீரர் நீல்ஆம்ஸ்ட்ரோங்குக்கு இதய அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தற்போது 82 வயதான நீல்ஆம்ஸ்ட்ரோங் தனது மனைவியான கரோலுடன் வசித்துவரும்போது இதய நோய்த் தாக்கத்துக்கு ஆளானமை கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை மூலம் அவரது இதய நோய்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி அப்பலோ 11 என்ற விண்கலத்தின் மூலம் சந்திரனுக்குச் சென்று முதல் மனிதக் காலடியைப் பதித்தவர் ஆம்ஸ்ட்ரோங் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-4)

# நெடுந்தீவு வடக்குக் கடற்பரப்பில் வெளியிடத்தோர் தொழில் செய்யத்தடை

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 10

நெடுந்தீவு வடக்குக் கடற்பரப்பில் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தோர் தொழில் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை தொடக்கம் இது நடைமுறைக்கு வருகிறது என்றும் கூறப்பட்டது.

நெடுந்தீவுக் கடலின் வடக்குப் பகுதியில் இரண்டு கிலோமீற்றர் பகுதியில் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஏனைய பிரதேசத் தொழிலாளர் நண்டு வலைத் தொழில் மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது பாதிக்கப்படாத வகையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கிழக்கு புனித அந்தோனியார் கோயில் பகுதியிலும் மேற்கில் பனங்காணி முனைவரைக்குமான கடற்பகுதியும் இதற்குள் அடங்கும் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் சிறு மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இடையூறு விளைவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பகுதியில் இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குள் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நயினாதீவு, குருநகர் மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் தமது பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் ப.அமிர்தநாதர் தெரிவித்திருந்தார்.

குறிப்பிட்ட இரு தினங்களிலும் நெடுந்தீவு வடக்கு கடல் பகுதியில் ஏனைய பகுதி கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதைத் தடை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியது. இதனையடுத்து நெடுந்தீவு மீன்பிடி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து குடாநாட்டின் ஏனைய பிரதேச தொழிலாளர்கள் நெடுந்தீவுக் கடலில் மீன்பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டது.

(ம-7)

# நேற்று அதிகாலை திடீர் மின்தடை உயர்தர மாணவர்கள் அதிர்ச்சியில்

வலி வடக்கு, ஓக.10

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நேற்று அதிகாலை தொடக்கம் நேற்றுக் காலை வரை முற்றாக மின் தடை ஏற்பட்டதால் உயர்தர மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கடந்த வாரம் உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபையின் உயர் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

எனினும் இடைக்கிடையில் மின் தடைப்பட்டு வருகின்றமை குறித்து மாணவர்கள் விசனம் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய பரீட்சைக்குத் தயார்படுத்தலில் மாணவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இவ்வாறு மின்தடை ஏற்பட்டமை பெரும் அதிர்ச்சியை மாணவர்களுக்கு ஏற்படுத்தியது.

இது சம்பந்தமாக சுன்னாகம் மின்சார நிலைய உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, திடீரென்று பெய்த மழையால் மின்மாற்றிகளில் படிந்திருந்த தூசுகளால் மின்மாற்றிகள் செயலிழந்துள்ளன. அதனால் மின்சாரம் தடைப்பட்டது. உடனடியாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.- என்று அவர் தெரிவித்தார்.

வீதித் திருத்தம் காரணமாக மின்மாற்றிகளில் அளவுக்கு அதிகமான தூசுகள் படிவதாகவும் இந்த நிலையில் மழை பெய்ததும் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ம-86)

# மீண்டும் அதே இடத்தில் வரவேற்கிறது யாழ்.வளைவு

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். செம்மணியில் ஏ-9 வீதியில் இருந்து அகற்றப்பட்ட 'யாழ்.வரவேற்கிறது' என்ற யாழ்.வளைவை மீண்டும் அதே இடத்தில் புதிதாக நிறுவுவதற்கான நடவடிக்கைகளை நல்லூர் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே இருந்த வளைவு ஏ-9 வீதியின் அகலிப்புப் பணிகளுக்காக இடித்து அகற்றப்பட்டது. இதன் பின்னர் அந்த இடத்தில் வீதி அகலிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது அகலிப்புப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

இதனை அடுத்து யாழ். வளைவை மீண்டும் அதே இடத்தில் அமைப்பதற்கான நிதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபை நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கியுள்ளதாக சபையின் தலைவர் வி.வசந்தகுமார் தெரிவித்தார்.

இதனை அடுத்து இந்த வளைவை அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வளைவின் புதிய வரைபடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான அனுமதி கிடைத்ததும் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(த-17)

# குடாநாட்டில் சேவையாற்ற ஏழு மருத்துவர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.10

யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளைச் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஏழு மருத்துவர்கள் சேவைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் ஒரு தொகுதி மருத்துவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக நோயாளர்களுக்குச் சிறப்பான சேவையை வழங்க முடியாத நிலைமை உள்ளமை குறித்துச் சுகாதார அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து பற்றாக்குறை நிலவும் வைத்தியசாலைகளுக்கு மருத்துவர்களை நியமிக்கும் நடவடிக்கைகளைச் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு மருத்துவர்களும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள கோண்டாவில் அரசினர் வைத்தியசாலைக்கு ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் குடாநாட்டில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-17)

# 24 மணி நேரமும் நயினாதீவுக்கு மின்சாரம் விநியோகம் நேற்று ஆரம்பம்

நயினாதீவுக்கு 24 மணிநேர மின்சார விநியோகப் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதிப் பொது முகாமையாளர் டி.பி.ஜே.கே.குண திலக வைபவரீதியாக நேற்று மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். நயினாதீவுக்கு 24 மணிநேர மின்சாரத்துக்காகப் புதிய மின்பிறப்பாக்கி கொண்டு வரப்பட்டது. எனினும் 19 மணிநேர மின்சாரமே இதுவரைகாலமும் வழங்கப்பட்டது. தற்போது நாளாந்தம் 560 லீற்றர் டீசல் பாவிக்கப்பட்டு 24 மணி நேரம் மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நயினாதீவு பிரதேசம் முழு நன்மை திட்டத்தின் முழுநேர மின்சாரத்தை நேற்று முதல் பெறுகின்றது. இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் ந.கருணாகரகுருமூர்த்தி, இலங்கை மின்சார சபை அதிகாரிகள், ஆலய தர்மகர்த்தாக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-50)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் மேலும் இரு கோட்டங்கள் உருவாக்குக

## கல்வியாளர் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.10

தென்மராட்சி கல்வி வலயத்தில் தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி மேற்கு என மேலும் இரு கல்விக் கோட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும் என்று பிரதேச கல்வியாளர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 60 பாடசாலைகளும் சாவகச்சேரிக் கல்விக்கோட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒரு கல்விக்கோட்டம் உள்ளதால் பிரதேசத்துக்குக் கிடைக்கும் பல நன்மைகளும் மட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தனர்.

60 பாடசாலைகளைக் கொண்ட தீவகக் கல்வி வலயத்தில் 4 கல்விக்கோட்டங்களும் வடமராட்சி கல்வி வலயத்தில் 3 கல்விக்கோட்டங்களும் உள்ள போதிலும் அதே எண்ணிக்கையான பாடசாலைகளைக் கொண்ட தென்மராட்சி கல்வி வலயத்தில் மட்டும் சாவகச்சேரிக் கல்விக்கோட்டம் எனும் தனி அலகு உள்ளது. இதனால் மேலும் இரு கல்விக்கோட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

அரசால் அண்மையில் அறிவிக்கப்பட்ட 5 ஆயிரம் பிள்ளைநேயப் பாடசாலைகளும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளும் தலா 5 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 4 பாடசாலைகள் மட்டும் இவ்வருடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதே வேளை தீவக வலயத்தில் 11 பாடசாலைகள் இந்தத் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளும் அதனுடன் அண்டியுள்ள 5 ஆயிரம் ஆரம்ப பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். ஒரு இடைநிலைப் பாடசாலையின் அபிவிருத்தியுடன் அதனையண்டிய ஆகக் கூடியது ஐந்து ஆரம்ப பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும்.

இந்த நிலையில் தென்மராட்சியில் ஒரு கல்விக் கோட்டம் உள்ளதால் பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி காண்பது எப்போது என்ற வினாவை எழுப்பியுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு ,தென்மராட்சி மேற்கு என மூன்று கல்விக் கோட்டங்களை உருவாக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர். (ம-9)

# தராசு படிகளில் மோசடி மூவர் வகையாக மாட்டினர்

வலி வடக்கு, ஓக.10

தராசு படிகளில் மோசடி செய்து பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் மூவர் பரிசோதனை செய்த அலுவலர்களிடம் வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் சுன்னாகம் சந்தைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சுன்னாகம் சந்தையில் பலத்த மோசடிகள் வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது மக்கள் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவருக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வருமான மேற்பார்வையாளர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து பிரதேச சபை உறுப்பினர்களுடன் இந்தச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சுன்னாகம் சந்தையில் உள்ள மரக்கறி விற்பனை நிலையத்தில் இருந்த ஒரு கிலோவுக்கு பதிலாக நூறு கிறாம் குறைவான படியைக் கொண்டு விற்பனை செய்தவரும் மற்றும் சந்தையில் உள்ள கடையொன்றில் சோதனை செய்தபோது தொள்ளாயிரம் கிறாம் கொண்ட படியை பயன்படுத்தி ஒரு கிலோ என விற்பனை மேற்கொண்ட வரும் மீன்சந்தையில் ஒரு கிலோ என 800 கிறாம் படி கொண்டு விற்பனை செய்தவரும் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பரிசோதனை தொடரும் என்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-86)

# புழுதியில் குளிக்கும் பயணிகள்

குடாநாட்டு வீதிகளில் இருந்து எழும் புழுதிப் படையால் பாதசாரிகள் பாதிக்கப்படுவதுடன் சுவாசநோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலையும் ஏற்பட்டு வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகள் பல புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகளுக்காக வெட்டப்பட்டும் கிளறப்பட்டும் காணப்படுகின்றன. அத்துடன் சில வீதிகளுக்குக் கிரவல் மண்ணும் கொட்டப்பட்டுள்ளன. இந்த வீதிகள் ஊடாக வாகனங்கள் பயணம் செய்யும் போது பெரும் புழுதிப் படலம் கிளம்புகின்றது.

இதனால் வீதிகளில் நடந்து மற்றும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் பயணம் செய்வோர் இந்தப் புழுதிப் படலத்தில் குளித்துவிடுகின்றனர். அத்துடன் இந்தப் புழுதி அவர்களுடைய சுவாசத்தின் போது உள்ளே செல்வதால் சுவாச நோய்கள் ஏற்படக்கூடிய அபாயமும் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

# நகரில் விபத்து

யாழ்ப்பாணம், ஓக. 10

மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் ஒன்றையொன்று விலத்த முற்பட்டபோது விபத்துக்குள்ளானதில் ஓட்டோ சேதமடைந்ததுடன் சாரதியும் சிறுகாயங்களுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை யாழ். கஸ்தூரியார் வீதி கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது. இருவழிப்பாதையாகவுள்ள குறித்த வீதியின் இருமருங்கிலும் வாகனங்கள் தரித்து விடப்பட்டுள்ளதால் எதிரும் புதிருமாக வந்துகொண்டிருந்த மோட்டார் ஸைக்கிள் மற்றும் ஓட்டோ என்பன ஒன்றை ஒன்று விலத்த முற்பட்டவேள்ள விபத்து இடம்பெற்றது.

இதன் போது ஓட்டோ சேதமாக்கப்பட்டதுடன் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளானார். மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. (ம-14)

# வடக்கில் கண்ணிவெடி அகற்றல்: அதிகூடிய கவனம் செலுத்துங்கள்

## இந்தியா வலியுறுத்து

கொழும்பு, ஓக.10

முழுமையான மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள வடக்கில் நிலக்கண்ணி வெடி அகற்றல் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

மீள்குடியேற்றத்திற்கு தடையாக கண்ணிவெடிகளே உள்ளனவெனின் அவற்றை அகற்றுவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படல் அவசியமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு கருத்தரங்கில், இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு 'சிறிலங்காவின் மீள்குடியேற்றம் மற்றும் மீள்கட்டுமானம்' என்ற தலைப்பில் உரையாற்றிய இந்திய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜீ.எஸ்.சேர்கில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அநேக பகுதிகளில் நிலக்கண்ணிவெடியகற்றும் பணிகள் பூர்த்தியாகியுள்ளமை தொடர்பில் வரவேற்றுள்ள அவர்,

எவ்வாறெனினும், புதைக்கப்பட்ட சகல நிலக்கண்ணி வெடிகளும் அகற்றப்பட்டுள்ளனவா என்பதனை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டியது அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கால எல்லைக்குள் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நோக்கில் எந்தவொரு நிலக்கண்ணி வெடியும் அகற்றப்படாமல் விடுபடக் கூடாது எனவும் தவறுதலாக விடுபடும் நிலக்கண்ணி வெடிகளினால் பொதுமக்கள் இழப்புக்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இருபாலையில் தனித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் வயர் என்பன வீட்டுக்கு முன்னால் உள்ள மரத்தின் கீழ் காணப்பட்டது. அத்துடன் மூதாட்டி அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்பு என்பன காணாமல் போயிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அயலவர்களால் கிராம சேவையாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டுக் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் யாழ்.நீதிமன்ற நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

உடல் கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-5)

## இசற் புள்ளி விவகாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திர ரீதியாகத் தீர்க்க முயற்சிக்கிறோம். இந்த நாட்டின் எந்த விவகாரம் குறித்தும் பேசுவதற்கான அதி உயர் சபையான நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை நாம் எழுப்பியுள்ளோம். ஆனால், அரசு அதைத் தவிர்த்து வருகிறது. நாம் இந்த விடயம் குறித்துத் தொடர்ச்சியாக ஊடகங்கள் மூலமாகப் பேசி, நாட்டு மக்களுக்கு இந்த விடயம் குறித்துத் தெளிவுபடுத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்து வழிகளையும் நாம் பயன்படுத்திவருகிறோம். மக்களை வீதியில் இறக்குவதற்கு நாம் அஞ்சமாட்டோம்.

கல்வித்துறை முழுவதும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. விரிவுரையாளர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகச் சுயாதீனமான விசாரணைக்குழுவொன்றை அரசு அமைத்துப், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்க வேண்டும் -என்றார். (த)

## டெல்றொக்ஷனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது. அவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் தம்மிடம் கையளிக்கப்பட்டதாக அவரது தந்தை மரியதாஸ் 'உதயனுக்கு' நேற்றுத் தெரிவித்தார்.

வவுனியாசிறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து மோசமாகத் தாக்கப்பட்டு கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த டெல்றொக்ஷன் நேற்றுமுன்தினம் அதிகாலை அங்கு உயிரிழந்தார்.

அவரது பெற்றோர் நேற்றுமுன்தினம் அவரைப் பார்வையிடச் சென்றபோதே இந்த விடயம் தெரியவந்தது. இதனை அடுத்து நேற்றுமுன்தினம் நீதிபதியுடன் தந்தையாரான மரியதாஸ் மகனின் உடலை பார்வையிட்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலம் நேற்று பிற்பகல் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. இன்று வெள்ளிக்கிழமை சடலம் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகிறது.

டெல்றொக்ஷனின் இறுதிச்சடங்கு நாளை சனிக்கிழமை அவரது சொந்த ஊரான பாஷையூரில் நடைபெறவுள்ளது. இறுதிச் சடங்கில் அரசியல் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பொது மக்கள் என பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொண்டு உயிரிழந்த டெல்றொக்ஷனின் உடலுக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-5)

## டெசோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள இந்தியத் தூதரகம் நிராகரித்துள்ளது. எனினும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கு எந்தக் காரணத்தையும் கூறவில்லை. அவரது கடவுச்சீட்டுக்கு விஸா வழங்க முடியாது என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் வாய்மொழியாகக் கூறியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக விக்கிரமபாகு கருணாரத்ன, டெசோ மாநாட்டு ஏற்பாட்டாளரான மு.கருணாநிதிக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை முதல் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே குறித்த அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை லங்கா சதோச நிறுவனம் இன்று முதல் குறைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இந்தியாவுக்குப் பொய்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேத்தாவின் கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, போருக்குப் பின்னர் வடக்கில் நிலைகொண்டுள்ள இலங்கைப் படையினர் தொடர்பாக இந்தியாவுக்குக் கிடைத்துள்ள தகவல்களுக்கும், இலங்கை அரசின் தகவல்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்கில் படைக்குறைப்புத் தொடர்பாக அளிக்கப்பட்ட தகவல்களில் குழப்பம் உள்ளதாகவும், குறிப்பிட்ட அவர், இதுகுறித்து இலங்கைப் பாதுகாப்புச் செயலரை விளக்கமளிக்கக் கோரினார்.

அத்துடன் இலங்கை அரசினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 383 விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ,

ஆயுதப்படைகளின் முதன்மையான கடமை நாட்டைப் பாதுகாப்பதாகும். நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் சக்திகள் மீள ஒருங்கிணைவதை ஆயுதப்படைகள் தடுக்கவேண்டியுள்ளது. புலம்பெயர்ந்துள்ள விடுதலைப் புலிகள் ஆதரவு தமிழர்களும் இலங்கை எதிர்ப்பு சக்திகளும் தான் இந்தியாவுக்குத் தவறான தகவல்களை வழங்கி வருகின்றனர்.

போருக்குப் பிந்திய சூழலில் இலங்கை அரசு பல சவால்களைச் சந்திக்கிறது. ஒரேஇரவில் எல்லாக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யமுடியாது என்று கூறியுள்ளார். (த)

## ஐ.நா. மட்டுமல்ல யாரும் வரலாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டுவருகிறோம். நாடளாவிய ரீதியில் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறோம். வடக்கு, கிழக்கிலும் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இதனை சர்வதேசத்தினர் பார்வையிட வேண்டும். அதற்காக நாம் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

அந்த அடிப்படையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு மட்டுமல்லாது, இந்தியாவின் அரசியல்வாதிகளுக்கும் நாம் அழைப்புவிடுத்துள்ளோம். அரசால் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அவர்கள் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இந்திய அரசியல்வாதிகள் நாட்டின் நிலைமையைப் பார்வையிடுவதற்கு நாம் அழைப்பு விடுத்துள்ளோமே தவிர, அவர்களது ஆலோசனைகளுக்கு நாம் கட்டுப்பட்டு செயற்படுவதாகக் கூறவில்லை. அவர்களது ஆலோசனைகளை நாம் ஏற்கமாட்டோம். அவர்களது ஆலோசனைகளைக் கேட்டு செயற்படுவதற்கு நாம் கட்டுப்பட்டும் இல்லை - என்றார்.

தம்புள்ளை, புனித பூமி எல்லைப்படுத்தல்

தம்புள்ளை, புனித பூமி பிரதேசத்தை எல்லைப்படுத்தி அதை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சரும், பிரதமருமான டி.எம்.ஜயரட்னவின் யோசனைக்கு அமையவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1981.04.17ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையிலே தம்புள்ளை, புனித பூமி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

## பயிரழிவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளைச்சலைப் பாதித்த கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தத் தவறியதாக குற்றஞ்சாட்டியே இவ்வாறு விவசாயிகள் இழப்பீட்டுத் தொகையைக் கோரியுள்ளனர்.

கடந்த வருடம் நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட 660 ஏக்கர் வயல் நிலத்தில் 369 விவசாயிகள் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். எனினும் வயல்களில் அத்துமீறி நுழைந்த கால்நடைகளால் நெற்பயிர்கள் அறுவடை செய்ய முடியாத அளவுக்கு நாசமாகின. இதனால் அனைத்து நெற்செய்கையாளர்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

''அந்தந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பான பிரதேச சபையினரே பயிர்களைப் பாதுகாக்க வேண்டும்'' எனப் பயிர்கள் பாதுகாப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டும் விவசாயிகள்இதனால் நகரசபை தமக்கு இழப்பீடு தரவேண்டும் என்று தெரிவிக்கின்றனர்.

நெல் விதைக்கப்பட்டதிலிருந்து பல தடவைகள் தமது நெற் பயிர்களைப் பாதுகாக்க கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் பிரதேச சபையிடம் முறையிட்டிருந்தனர். ஆனால் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த பிரதேசசபை தவறிவிட்டது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே, குறித்த பாதிப்புக்கான இழப்பீடாக 15 மில்லியன் ரூபாவை தென்மராட்சிப் பிரதேச சபைத் தலைவர் தமக்கு 14 தினங்களுக்குள் வழங்க வேண்டும் என்று கேட்டு விவசாயிகள் சட்டத்தரணி மூலம் 'நோட்டீஸ்' அனுப்பியுள்ளனர். இல்லாவிட்டால் நீதிமன்றின் மூலம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று தனங்கிளப்பு கமக்கார அமைப்பு அனுப்பிய அந்த 'நோட்டீஸில்' கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் பகுதியில் நெற் செய்கையில் ஈடுபட்டு பயிர் அழிவைச் சந்தித்த ப.வே.இராசரத்தினம் என்ற விவசாயியும் ஒரு லட்சம் ரூபா இழப்பீடு கோரி சட்டத்தரணி மூலம் பிரதேச சபைத் தலைவருக்கு 'நோட்டீஸ்' வழங்கியுள்ளார். (ங-9)

## வரதராஜப் பெரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள், 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஈழப் பிரகடனம் செய்து விட்டு இந்திய அமைதிப்படையுடன் வெளியேறி, இந்தியாவில் அடைக்கலம் தேடினார்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருந்ததால், அவர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், இரகசியமாக தங்கவைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தார்.

தற்போது அவர், புதுடில்லியில் சர்வோதயா என்கிளேவில் உள்ள குடியிருப்பில் வசித்து வருகிறார். மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்த அவரது வசிப்பிடத்தை அவருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த புதுடில்லி பொலிஸின் 25 காவலர்கள் தற்போது வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

வரதராஜப் பெருமாள் வசித்து வந்த குடியிருப்பின் முன்பாக இருந்த டில்லி மாநகராட்சிக்குச் சொந்தமான பூங்காவை அவர்கள் ஆக்கிரமித்துக் கூடாரம் அமைத்திருந்தனர். அதுமட்டுமின்றி, அந்தப் பூங்காவுக்குப் பொதுமக்கள் வருவதற்கும் அவர்கள் தடை விதித்துள்ளனர்.

இந்தநிலையில், வரதராஜப்பெருமாளின் பாதுகாப்புக்கு உள்ள பொலிஸாரின் நெருக்கடி தொடர்ந்ததால் அதிருப்தி அடைந்த சர்வோதயா என்கிளேவ் குடியிருப்புகள் நல சங்கத்தினர் புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

வழக்குரைஞர் விகாஸ் பதோரா மூலம் தாக்கல் செய்த மனுவில், ''சட்ட விரோதமாகப் பூங்காவை ஆக்கிரமித்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பதால் பாதுகாவலர்களுடன் வரதராஜப் பெருமாளை வேறு இடத்துக்கு மாற்ற மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்' என்று கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை நேற்று முன் தினம் பரிசீலித்த தலைமை நீதிபதி ஏ.கே. சிக்ரி, அது குறித்துப் பதில் அளிக்கும்படி இந்திய மத்திய அரசுக்கும் புதுடில்லி அரசுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார். (த)

## கிழக்கு மாகாண சபைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கிழக்கு மகாண சபையின் முன்னாள் உறுப்பினரான இராசையா துரைரட்ணம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

மாகாண சபை கலைக்கப்படக்கூடாது எனத் தெரிவித்து, கடந்த ஏப்ரல் மாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்ததாகவும் அதன்படி மாகாண சபையைக் கலைக்க முடியாது எனவும் துரைரட்ணம் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சிசிர டி.ஆப்ரூ., அனில் குணரத்ன மற்றும் ஏ.டபிள்யூ.ஏ சலாம் ஆகிய நீதியரசர்களைக்கொண்ட குழுவினால் குறித்த மனு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

மாகாண சபையைக் கலைப்பதற்கு, மாகாண ஆளுநருக்கு மாகாண சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் இணக்கம் இருந்தமை தெரியவருவதாக நீதியரசர்கள் குழு தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இதனால் அந்த மாகாண சபையைக் கலைப்பதற்கான சட்ட ரீதியான அதிகாரம் ஆளுநருக்கு இருப்பதாகவும் மனுவை தள்ளுபடி செய்த நீதியரசர்கள் குழு தெரிவித்துள்ளது. (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சர்வதேச பாதுகாப்பு மாநாடு; உள்ளார்ந்த இலக்கு என்னவோ...

சர்வதேச பாதுகாப்பு மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் இலங்கையில் ஆரம்பமாகி உள்ளது. மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த மாநாட்டில் மொத்தம் 48 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகிறார்கள். 62 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தகவல். இந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு ஒழுங்கு செய்துள்ள இரண்டாவது சர்வதேச பாதுகாப்பு மாநாடு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தினரின் போர் அனுபவங்கள், அதன் பின்னரான அனுபவங்கள் குறித்து மட்டுமன்றி போரின் பின்னர் நாடு அடைந்துள்ள அபிவிருத்தி குறித்தும் இம் மாநாட்டில் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு எடுத்தியம்பப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாநாட்டில் பங்குபற்றும் 250இற்க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் இராணுவ உயர் அதிகாரிகள், மற்றும் இராஜதந்திரிகளுக்கு போரின் பின்னர் அழிவுகளுக்கு உள்ளான பிரதேசங்களின் மீள் கட்டியெழுப்புதல் பணிகள், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம், போரில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் அமைப்பினருக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு என்பன குறித்து விசாலமாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மொத்தத்தில், நீண்டகால சமாதானம்-அதனை நிலைநிறுத்துதல் என்பது மாநாட்டின் பிரதான தொனிப் பொருள் என்றும் பிரலாபிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் முதல் நாள் அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,-

இலங்கையின் தேசியப் பிரச்சினையை (அதாவது இனப் பிரச்சினையை), உள்நாட்டு மட்டத்திலான பிரச்சினையை அனைத்துலக மயப்படுத்தி, வெளிநாடுகளின் தீர்வைத் திணிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் குற்றஞ் சுமத்தும் தொனியில் கருத்து வெளியிட்டார்.

தற்போது பொருளாதாரப் போருக்கு முகம் கொடுத்துள்ள இலங்கைக்கு, அதன் எதிரான சக்திகள், உல்லாசப் பிரயாணத்துறை போன்ற வருவாய்தரும், வளர்ச்சி கண்டுவரும் துறைகளுக்குக் குந்தகம் விளைவித்து நாட்டின் அபிவிருத்திக்குத் தடைபோட முயல்கின்றன-என்றும் அமைச்சர் சாடினார்.

அத்தோடு தரிக்காமல், எமது நாட்டின் நாடாளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் அரசியல் தீர்வே பொருத்தமானதாக அமையும் என்றும் விளம்பினார்.

அதாவது, இலங்கையின் அரச தலைவர்கள், இனப்பிரச்சினை தொடர்பாக இதுவரை பல சந்தர்ப்பங்களிலும் தெரிவித்த (13+ போன்ற) கருத்துக்களை, அறிவிப்புகளைப் புறந்தள்ளி-

அரசு இப்போது தூக்கிப்பிடிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே தீர்வு என்பதனை அனைத்துலகத்துக்கு எடுத்துக் கூறும் மேடையாக, சர்வதேச பாதுகாப்பு மாநாடு அரசினால் பயன்படுத்தப்படுகிறது என்பது தேற்றமாகிறது.

அதுமட்டுமன்றி, போருக்குப் பின்னரான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகள், கடந்த மூன்று வருடங்களில் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, வெளியார் எவரும் கருதும் வகையில்-

மாநாட்டுக்குத் தலைமை வகித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பின்வரும் விவரங்களை வெளியிட்டிருக்கிறார்:

*இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்த சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்களில் இன்னமும் 5,424 பேர்கள் மாத்திரமே மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர்.

*மீளக்குடியமர்த்தப்பட்டோருக்கென, இராணுவத்தினர் அமைத்த ஏழாயிரம் வீடுகளில் ஆறாயிரம் வீடுகள் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

*ஓமந்தை-பளை ரயில்ப்பாதை 2013 செப்ரெம்பரிலும், காங்கேசன்துறை வரையிலான ரயில்ப்பாதை 2014 ஜூன் மாதத்துக்கு முன்னரும் அமைக்கப்பட்டுவிடும்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மாநாட்டில் முன்வைத்த கருத்துக்களும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெளியிட்ட கருத்துக்களும் முறையே, தமிழர் பிரச்சினைக்கான தீர்வு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக மட்டுமே என்பதனையும்,-

பாதுகாப்புச் செயலாளர் முன்வைத்த தகவல்கள் போருக்குப் பின்னரான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்பதனையும்-

மாநாட்டில் பங்குபற்றிய சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு எடுத்தியம்பும் பாங்கிலானவை என்பதனை எவரும் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால்-

மாநாட்டில் முன்வைக்கப்பட்ட, விவரிக்கப்பட்ட விடயங்களுக்கும் இந்தியாவுக்கு வந்த அரசாங்கப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள், வாக்குறுதிகளுக்கும் இடையில் நிரம்பவும் முரண்பாடுகள் காணப்படுவதாக.-

புதுடில்லியில் இருந்து மாநாட்டில் பங்குபற்றிய முன்னாள் இந்திய இராணுவ அதிகாரியும் இந்திய பாதுகாப்பு கண்காணிப்பகத்தின் ஆலோசகருமான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா குடைந்தெடுக்கும் பாணியில் கருத்து தெரிவித்தமையும் இங்கு நோக்கற்பாலது.

மொத்தத்தில்-

எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில் ஐக்கியநாடுகள் சபையின் உலகநாடுகள் தொடர்பான பருவகால ஆய்வு (Universal Periodic Review) நடைபெறவுள்ள நிலையிலும்-

அந்த மாநாட்டில், மனிதஉரிமைகளை மேம்படுத்துவது குறித்து தான் மேற்கொண்டுவரும், செயற்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையிலும்-

அடுத்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பான முன்னேற்றநிலை ஆராயப்பட உள்ளதை மனதிருத்தியும்-

இலங்கை அரசு மூன்றுநாள் சர்வதேச பாதுகாப்பு மாநாடு ஒன்றை நடத்தித் தனது பக்கத்தை மேனி மினுக்கல் செய்யும் உத்தியின் ஓர் அங்கமே, இலங்கை அரசின் மூன்றுநாள் சர்வதேச பாதுகாப்பு மாநாடு என்று கொள்வது தப்பல்ல.

# தமிழர்களின் உரிமைகளை உறுதி செய்ய கிழக்குத் தேர்தலைப் பயன்படுத்துங்கள்

**காரைநகர் பிரதேச சபையின் துணைத் தலைவர் கோரிக்கை**

யாழ்ப்பாணம்.ஓக.10

தமிழர்களின் உரிமைகளை உறுதி செய்ய கிழக்குத் தேர்தலைப் பயன்படுத்துங்கள் என்று காரைநகர் பிரதேச சபையின் துணைத் தலைவர் ச.துர்க்கேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமகால அரசியல் நிகழ்ச்சி நிரலிலே கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு சிறுபான்மையினரின் இருப்பையும் பலத்தையும் தகர்ப்பதற்கு அரசு திட்டமிட்ட முறையில் தந்திரங்களை வகுத்து தேர்தல் வெற்றிக்கான செயற்பாடுகளை முன்னகர்த்தி வருகிறது. இதற்கு நாம் எமது வாக்குப் பலத்தை முற்று முழுதாகப் பயன்படுத்தி அரசுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்.

தற்போதைய அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கை அரசு வடபகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தி இருந்தது. இதன் மூலம் சர்வதேசத்துக்கு தனது ஜனநாயக முகத்தை காட்ட முனைந்தது. ஆனால் அச் செயற்பாடு வெற்றியளிக்கவில்லை. அத்துடன் மிகவும் கபடத்தனமாகத் திட்டமிட்ட முறையில் நில ஆக்கிரமிப்பு, பௌத்த விகாரைகளை எமது பிரதேசங்களில் விதைத்தல், பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல், நீதிபதிகள் மீதான அச்சுறுத்தல் செயற்பாடுகள் போன்றன அரங்கேற்றப்பட்டன.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசுக்கு எதிராக நீதி வேண்டி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த முற்படும் போது கூட அப் போராட்டங்களை அரசு திட்ட மிட்ட முறையில் ஆயுதப் படைகளை கொண்டு முடக்கி தனது அடக்கு முறையை எம்மக்கள் மீது கட்ட விழ்த்து விட்டது.

இன்றைய காலகட்டத்திலே நாம் எமக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு அவற்றுக்கெதிராகப் போராடக் கூடிய சக்தியைக் கூட இழந்து வருகிறோம். இந்த வேளையில் எம் கையில் உள்ள வாக்குப் பலத்தை பயன்படுத்தி நாம் எமது அரசியல் பலத்தை அதிகரிக்க வேண்டும்.

எனவே கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் எமது அரசியல் பலத்தை நிரூபித்து எமது அரசியல் உரிமைகளை வென்றிட வழியமைப்போம். - என்றுள்ளது. (ம-17)

## பாடசாலை புனரமைப்புத் திட்டம் நல்லூரில் 8 பாடசாலைகள் தெரிவு

யாழ்ப்பாணம் .ஓக.10

தேசிய நிரந்தரத் திட்டத்தில் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கங்களுக்காக ஐயாயிரம் ஆரம்பப் பாடசாலைகள், ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளுக்கான புனரமைப்புத் திட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் எட்டுப் பாடசாலைகள் தெரிவாகியுள்ளன.

கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை, கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை,யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை,செட்டித் தெரு எம்.எம் .த.க பாடசாலை, வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம், ஆனைப்பந்தி எம்.எம்.த.க.பாடசாலை, கொக்குவில் சி.சி.த.க.பாடசாலை ஆகிய எட்டுப் பாடசாலைகள் இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மின்சாரம், குடிதண்ணீர், கழிவறை எல்லைகள் அமைத்தல், வர்ணம்பூசுதல், பெயர்ப்பலகை தயாரித்தல், செயற்பாட்டறை ஒழுங்கமைத்தல், சிறுவர் விளையாட்டு முற்றம், ஆசிரியர் விடுதி புனரமைப்பு போன்றவற்றுக்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் ஐந்து லட்சம் வழங்கப்பட்டுள்ளது. விடுமுறைக் காலத்தில் வேலைகள் செய்து முடிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-7)

## கிளாலி கண்மணி மாதா பெருவிழா

19 வருடங்களின் பின்னர் கிளாலி தூய கண்மணி மாதா ஆலயப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆலயத் திருநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகிறது.

இதில் மக்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து பஸ் சேவை ஒன்று இடம்பெற்று வருகிறது. மீண்டும் 6.30 மணிக்கு இச் சேவை யாழ்.நகர் நோக்கிஇடம்பெறுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை இலங்கை போக்குவரத்துச் சபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உள்ளூராட்சி சபைகளில் ஆலோசனைக் குழுக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 10

வடக்கில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

மக்களுக்குப் பயனுள்ள சிறந்த சேவைகளை உடனுக்குடன் வழங்கவே பிரதேச சபை, நகரசபை, மாநகர சபைகள் உட்பட 34 சபைகளில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் தலைவர், செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர், சனசமூக அபிவிருத்தி அலுவலர், பொதுசனத் தொடர்பு அலுவலர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு விசேட பயிற்சி பெற்ற நிபுணர் குழு மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் வடக்கில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஆலோசனைக் குழு அமைக்கும் பணி ஆரம்பமாகும்.

இந்தக்குழுவை எவ்வாறு நியமிப்பது என்பது தொடர்பான வழிகாட்டி நூல்களும் ஏற்கனவே சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகள் மக்களுக்கான விசேட பணியை வழங்கவும், மக்கள் உள்ளூராட்சி சபைகளின் பயன்மிக்க சேவைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்வதற்காகவுமே சிறந்த ஆலோசனை சபை அமைய வேண்டிய தேவை உள்ளது என்று கூறப்பட்டது. (ம-14)

## நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரப் பரிசோதகர்

யாழ்ப்பாணம்.ஓக.10

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு அடியார்களின் சுகாதாரப் பாதுகாப்புக் கருதி யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஞானசோதி தலைமையில் சுகாதாரப் பரிசோதகர் கொண்ட குழு வர்த்தக நிலையங்கள், அன்னதான மண்டபங்கள், தாகசாந்தி நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை நடத்திவருகிறது.

கடந்த சனிக்கிழமை இந்த நிலையங்களுக்குச் சென்ற குறித்த சுகாதாரக் குழுவினர் சோதனைகளை மேற்கொண்டு அங்கிருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். அவற்றை உடன்நிவர்த்தி செய்யவும் பணித்தனர்.

பாவனைக்கு உதவாதெனக் காணப்பட்ட உணவுப்பொருள்களையும் சில இடங்களில் மீட்டு அழித்துள்ளனர். திருவிழாக்காலத்தில் தொடர்ந்து சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்புப் பணிகள் இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. (ம-7)

## தரமான பழமரக்கன்றுகள் திணைக்களம் ஊடாக விற்பனை

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பழமரக்கன்று நாற்றுமேடைகள் தரமானவையாக இருக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் அலுவலர் அ.ரமணிதரன் தெரிவித்தார்.

அத்துடன் ஒவ்வொரு நாற்று மேடையும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட நாற்று மேடைப் பழக்கன்றுகளையே விவசாயிகள் விற்பனை செய்ய முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் பழமர நாற்றுமேடை உற்பத்தியாளர்களுக்கு ஒரு நாள் தொழில்நுட்பப் பயிற்சிப் பட்டறை திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. அதன் போதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திவிநெகும திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 50 ஆயிரம் பழமரக் கன்றுகள் அவசியம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தினர் இதற்கான ஒழுங்கமைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட நாற்று மேடை உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படும் மரக்கன்றுகள் தரமானதும் நாற்றுமேடை உற்பத்திச் சட்டத்துக்கு உட்பட்டதுமாக இருப்பின் அவை விற்பனைக்கு ஏற்றது என்று கூறினார். (ம-13)

# வரட்சியால் வாடுகிறது எள்ளுப்பிட்டி கிராமம்

## தண்ணீருக்காக 2 கிலோ மீற்றர் தூரமுள்ள திருக்கேதீஸ்வரத்துக்குச் செல்லும் அவலம்

மன்னார், ஓக. 10

மன்னார், மாந்தை எள்ளுப்பிட்டிக்கிராமமக்கள்கடும்வறட்சி காரணமாக மிகப்பெரிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் குடிப்பதற்கும் தமது ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் தினமும் சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள திருக்கேதீஸ்வரத்துக்குச் செல்ல வேண்டிய அவல நிலையில்காணப்படுகின்றனர்.

விவசாயம் செய்வதற்கான நிலம் இருந்த போதிலும் அதனை மேற்கொள்ள முடியாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

இவர்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் அடிப்படை வசதிகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென இவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

மன்னார்ப் பிரதேச செயலாளர் பிரிவில் இந்த மாந்தை எள்ளுப்பிட்டிக் கிராமம் அமைந்துள்ளது. 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற உக்கிர போர் காரணமாக இவர்கள் இடம் பெயர்ந்தனர். கடந்த 2010 ஆம் ஆண்டு தமது சொந்தக்கிராமத்தில் இவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். அப்போது அந்தக் கிராமத்திலிருந்த அனைத்து வீடுகளும் உடைக்கப்பட்டுத் தரைமட்டமான நிலையில் காணப்பட்டன. 106 குடும்பங்கள் மீள்குடியமர்ந்த போதிலும் தற்போது 40 குடும்பங்கள் மட்டுமே இங்கு வசிக்கின்றன.

ஏனையவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதநிலையில்உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தம்மைப் பார்ப்பதற்கு வருவதில்லையென இந்த மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது தமக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட எந்தவித உதவிகளும் கிடைப்பதில்லையெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். பிரதேச சபையினரிடம் தமது கிராமத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகப் பலமுறை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர். தமக்குத் தற்போது முக்கியமாகத் தேவைப்படும் நிரந்தர வீட்டுத்திட்டம், மின்சாரம், குடிதண்ணீர் ஆகியவற்றை உடன்வழங்குமாறும் இவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (க-12)

## வவுனியா டிப்போவில் பள்ளிவாசல் அமைக்கும் முயற்சிக்குத் தடை

வவுனியா, ஓக. 10

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போவில் பள்ளிவாசல் அமைக்கும் முயற்சி உயர்மட்டத் தலையீட்டால் உடன் தடுத்து நிறுத்தப்பட்டது.

வவுனியா டிப்போவில் பணிபுரியும் முஸ்லிம் பணியாளர்களின் வழிபாட்டுக்கெனப் பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனையடுத்து, அங்கு பணி புரியும் ஏனைய மதப் பணியாளர்கள் இது தொடர்பாக ஜனாதிபதி பிரதமர் மற்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உட்படப் பலருக்கும் முறைப்பாடு தெரிவித்திருந்தனர். அதைத் தொடர்ந்து தற்காலிகமாக இந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் மீண்டும் இப்புதிய பள்ளிவாசலை அமைப்பதற்கு நகரமுஸ்லிம் வர்த்தகர்களிடம் பணம் சேகரிக்கப்பட்டு அவர்களின் உதவியுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய பள்ளிவாசலுக்கு அடிக்கல் நடுவதற்கான முயற்சிகள் இடம் பெற்றன.

இது தொடர்பான விடயம் இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தலைவர் தனது அனுமதியில்லாமல் வவுனியா சாலையின் எந்தப் பகுதியிலும் பள்ளிவாசல் அமைக்க அனுமதிக்க வேண்டாம் என்று அவசர தொலைநகல் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். இதனால் அடிக்கல் நடும் விழா நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா டிப்போவிலுள்ள உயரதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்ட போது இதனை உறுதி செய்துள்ளார். (க-410)

## புனரமைக்கப்படாத குளங்கள்

வவுனியா, கோவில்புளியங்குளம் பகுதியிலுள்ள எட்டுக் குளங்கள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே போரைச் சாட்டாக வைத்துக் குளங்களின் புனரமைப்புப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை. தற்போது போர் ஓய்ந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தக் குளங்கள் புனரமைக்கப்படாமையால் கோவில் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சிறுபோக பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை இந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளும் குடிதண்ணீரின்றி அலைந்து திரிகின்றன. அண்மையில் இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களும் தண்ணீர் வசதியின்றிச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது இந்தப் பகுதியிலுள்ள எட்டுக் குளங்களும் முற்றாகவற்றியமையால் மிகப்பெரிய அவலநிலை இங்கு உருவாகியுள்ளது. (க-402)



கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயக் கட்டடங்கள் அமையவுள்ள காணிக்கான வேலி அமைக்கும் ஆரம்ப வேலைகளை ஆசிரிய ஆலோசகரான எஸ்.சகாயராசா அடிக்கல்லை நட்டுத் தொடக்கி வைக்கின்றார். (க-18)

## மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது

வவுனியா, ஓக. 10

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரைக் கைது செய்த வவுனியாப் பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

இந்த மூவரும் வவுனியா தாண்டிக்குளம் மற்றும் பூந்தோட்டம் பகுதியில் உள்ள காணிகளில் திருட்டுத்தனமான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியாவில் கட்டுமான வேலைகள் அதிகரித்துள்ள நிலையில் இத்தகைய மணல் திருடும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியாவில் கடந்த மாதம் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவரெனச் சந்தேகிக்கப்படும் நபரொருவரைத் தாம் கைது செய்திருப்பதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி வவுனியா நகரப் பகுதியிலுள்ள வீடொன்றில் சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள், பணம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட வவுனியாப் பொலிஸார் குறித்த சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (க-86)

## இடர் முகாமைத்துவ அமைச்சர் முல்லைத்தீவு வருகை

இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரவீர கடந்த 5 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வருகைதந்திருந்தார். முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. இதில் பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் அனைவரையும் சந்தித்த அமைச்சர் அவர்களது குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் கூரைத்தகடுகள், சமையல் உபகரணங்கள் என்பன அமைச்சரால் கையளிக்கப்பட்டன. நிகழ்வில் இராணுவப்படைப்பிரிவின் 59 ஆவது படையணியைச் சேர்ந்த பிரிகேடியர் டயஸ், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.கனகரத்தினம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (க-435)

## குளப் புனரமைப்பு தாமதத்தால் காலபோகமும் பாதிக்கும் ஆபத்து

அக்கராயன், ஓக. 10

துணுக்காய் ஐயன்கன் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தாமதமடைவதன் காரணமாக காலபோக நெற்செய்கையில் பாதிப்புக்கள் ஏற்படலாமென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படாத நிலையிலேயே குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது குளத்தின் வேலைகளில் ஏற்படும் தாமதம் காலபோக நெற்செய்கையில் பாதிப்புகளை ஏற்படுத்துமானால் வாழ்வாதாரத்தில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கி, வறுமை நிலைக்குள் தமது குடும்பங்களைத் தள்ளிவிடுமென இந்தக்கிராம விவசாயிகள்கவலை தெரிவிப்பதுடன், குளப்புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்துமாறுக் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை துணுக்காய், ஐயன்கன் குளம் கிராமத்தில் மீள்குடியமர்வு இடம்பெற்று மூன்று ஆண்டுகள் நெருங்கும் நிலையிலும் ஒரு நிரந்தர வீடு கூட அமைக்கப்படவில்லையென இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

2009ஆம்ஆண்டுஒக்ரோபர் மாதம் மீள்குடியமர்வு இங்கு இடம்பெற்றது. 212 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. 21 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. நிரந்தர வீடுகள் வழங்கப்படாமையினால் மாரி கால மழையினை எதிர்கொள்வதில் இந்த மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளைஐயன்கன்குளம் கிராமத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

குளத்தின் புனரமைப்புக்கெனநீர் முற்றாக நிறுத்தி விடப்பட்டதன் காரணமாக, வழமையாகப் பசுமையாக காட்சியளிக்கும் இந்தக் கிராமம் தற்போது வறண்டு போய் காணப்படுகின்றது. துணுக்காய் பிரதேச சபையால் தமக்கு உடனடியாகக் குடிதண்ணீரை வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## ஆளுநரின் அடாவடிக்கு மத்தியிலே உள்ளூராட்சி மன்றப் பணிகள்

### வவுனியா நகரசபையின் உபதலைவர் ஆதங்கம்

நெளுக்குளம், ஓக. 10

வடக்கு ஆளுநரின் அடாவடித்தனங்களுக்கு மத்தியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளூராட்சிச் சபைகளில் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வவுனியா நகரசபையின் உபதலைவரான எம்.எம்.ரதன்.

வவுனியா நகரசபையால் பிளாஸ்ரிக் பொருள்கள் சுழற்சி முறையில் விடப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இன்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசு கைப்பற்றிய உள்ளூராட்சிச் சபைகளுக்குச் சட்டதிட்டங்கள் கிடையாது. தாம் நினைத்த மாதிரி ஏனையோரின் ஆலோசனைகளைப் பெறாமல், மக்களின் அனுமதியின்றிப் புறநடையான அபிவிருத்திப் பணிகளை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதாயின் ஆளுநரின் அனுமதி பெற்று அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க வேண்டும். ஆளுநரின் அனுமதி பெறுவதற்கு நீண்ட கால மாகிறது.

நாம் பழையவற்றை நினைவு கூருகின்றோம். மீண்டும் எமது பண்பாடு கட்டியெழுப்பப்படாதா என்று தவிக்கிறோம். நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற அளவில் இளம் சமூகத்தினர் தவறான வழியில் நடப்பதற்கு அரசின் செயற்பாடுகள் உதவுகின்றன. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

தமிழை வளர்த்த ஔவையார் போன்ற பல ஔவைகள் இங்கு உருவாக வேண்டும். தமிழை வளர்க்கும் இளம் தமிழ்ப்பற்றாளர்களும், கலைஞர்களும் உருவாக வேண்டும். நாம் எமது தமிழ்த் தலைவர்களை என்றும் மறந்து விட முடியாது. இதில் நமது ஊடகவியலாளர்களையும் மறந்து விட முடியாது. எமக்கு உதவும் வர்த்தகர்களை மறக்கமுடியாது. சங்க காலத்தில் இருந்து நாம் ஔவையாரைப் பார்க்கிறோம். ஔவை பின்பற்றிய கல்விச் சிந்தனையை நாம் ஏன் பின்பற்றக்கூடாது என்றும் அவர் இங்கு கேள்வியெழுப்பினார். (க-402)

# அனைத்து அரசியல் கைதிகளும் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

### பிரேம்குமார் குணரட்னம் கோரிக்கை

**இலங்கையில் வாழும் சகல இன மக்களையும் இணைக்கும் வகையில் தீர்வுத் திட்டம்அமைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

சிறைச்சாலைகளிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என முன்னணி சோசலிச கட்சியின் தலைவர் பிரேம்குமார் குணரட்னம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் வாழும் சிறுபான்மையான தமிழ், முஸ்லிம் மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

தமிழர்களுக்கு சுயநிர்ணய அதிகாரங்களை வழங்குதல் அல்லது அதிகாரப் பரவலாக்கம் வழங்குதல் ஆகிய தீர்வுத் திட்டங்களுக்கு எமக்கு உடன்பாடில்லை.

ஜனநாயகம் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட வேண்டும். பல்லின மக்களை பிளவுபடுத்தும் வகையிலான தீர்வுத் திட்டங்கள் பயனுள்ளதாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் வாழும் சகல இன மக்களையும் இணைக்கும் வகையில் தீர்வுத்திட்டம்அமைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் தங்களது நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் இலங்கை விவகாரங்களில் தேவையின்றி மூக்கை நுழைப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இனவாத அடிப்படையில் பிரதேசங்கள் பிரிக்கப்படுவதனை எமது கட்சியானது ஒருபோதும் விரும்பவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை தேசிய வெற்றியாகக் கருதப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசும் உழைக்கும் வர்க்கத்தினருக்கு எதிராக செயற்பட்டனர்.

வடக்குக் கிழக்கில் இராணுவத்தினர் காணிகளை கைப்பற்றி இந்திய மற்றும் சீன நிறுவனங்களுக்கு வழங்கி வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.



காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் சுமார் 30 மெகா வோல்ட் மின்சாரம் நாட்டின் மின்சார வலையமைப்புடன் நேற்று வியாழக்கிழமை இணைத்துக்கொள்ளப்பட்டது. புத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் மின் சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் இந்த மின்சார உற்பத்தி நடவடிக்கை ஆரம்பித்துவைக்கப்பட்டது. (த)

## மரண தண்டனைக் கைதி ஒருவர் நீதிமன்றில் தற்கொலைக்கு முயற்சி

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவர் தற்கொலை செய்துகொள்ள முயன்று, காயம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நுவரெலியாவில் நேற்று இடம்பெற்றுள்ளது.

32 வயதான ராமையா கிருஷ்ணன் என்னும் இந்த நபருக்கு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம். கபூரினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதையடுத்து மரண தண்டனை விதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்துக்குள் வைத்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். இதனால் அவரின் கழுத்தில் காயமேற்பட்ட நிலையில்பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் உடனடியாக அவரைத் தடுத்து, வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.மேற்படி நபரின் மனைவி 6 வருடங்களுக்கு முன்னர் தீக்கிரையாகி உயிரிழந்தமை தொடர்பான வழக்கிலேயே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (த)

## மரண அறிவித்தல்

### வின்சென்சியா ஜெறோசா உமாமகேஸ்வரன்



**மாதகலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வின்சென்சியா ஜெறோசா உமாமகேஸ்வரன் நேற்று (09.08.2012) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற (மாதகல்) ஆசிர்வாதம்-இராக்கினி தம்பதியரின் அன்பு மகளும், உமாமகேஸ்வரனின் அன்பு மனைவியும்,கீத்,சியானா ஆகியோரின் அன்புத் தாயும், ஜேம்ஸ் றஞ்சன் (முருங்கன்), மேரிரோகினி (கொழும்பு), பற்றிசியா ரஞ்சனி (மாதகல்), காலஞ்சென்ற மெற்றில்டா மாலினி, லூக் நிர்மலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.**

**அன்னாரின் நல்லடக்கம் 16.08.2012 வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்:
மேரி ரோகினி (சகோதரி)
011-2502989, 0773301292,
0044-7983527968, 0044-7793943217

(சி/2219)(3.14)

## 4 வயது மகனின் கண்களில் மிளகாய்த்தூள் தூவிய தாய்

கொழும்பு,ஓக. 10

தனது நான்கு வயது மகனின் காலை நெருப்பால் சுட்டு, கண்களில் மிளகாய்த்தூள் தூவிக் கொடுமைப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மேற்படி சிறுவனின் தாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று வெள்ளவாய ஹந்தபானகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை, 119 எனும் பொலிஸ் அவசர அழைப்புக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், குறித்த சிறுவனின் தாயாரைக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார். குறித்த தாயார் சிறுவனது காலில் நெருப்பால் சுட்டும் கண்ணுக்குள் மிளகாய்த் தூளை தூவியும் கொடுமைப் படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவன் வெள்ளவாய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சிறுவனின் தாயாரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (த)

## ரிஷாத் மீது வழக்குத் தொடர போதிய ஆதாரங்கள் உள்ளன

### சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகிறது

கொழும்பு, ஓக. 10

மன்னார் நீதிவானை கடந்த 18ஆம் திகதி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொலிஸார் சமர்ப்பித்துள்ள விசாரணை அறிக்கைகளில் அமைச்சர் மீது வழக்கு தாக்கல் செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் கூறுகின்றன.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மன்னாரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார் என்பதற்கும், மன்னார் மாவட்ட நீதிவான் அந்தோனிபிள்ளை ஜுட்சனை அச்சுறுத்தினார் என்பதற்கும் பொலிஸாரின் விசாரணை அறிக்கைகளை பூர்வாங்கமாக ஆராய்ந்ததில் ஆதாரங்கள்கிடைத்திருப்பதாக சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசாரணை அறிக்கைகளைச் சிரேஷ்ட சட்டவாளர்கள் தற்போது ஆராய்ந்து வருவதுடன் மிக விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

மன்னாரில் நீதிமன்ற வளாகம் கல்லொறிந்து சேதப்படுத்தப்பட்டமை தொடர்பாகவும் நீதிவானை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளதுடன் தமது விசாரணைகள் தொடர்பான அறிக்கைகளைச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு மேலதிக நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பித்துள்ளனர்.

குறித்த சம்பவங்களையடுத்து நாடு முழுவதும் சட்டவாளர்கள் பணிப்புறக்கணிப்பை நடத்தி குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தினார்கள். இந்தச் சம்பவத்தையடுத்து மன்னார் நீதிமன்றம் இன்னமும் செயல்படாமல் இருந்து வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கவலையும் ஆத்திரமும் கொண்டுள்ளார். சம்பவம் குறித்து உரிய விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருந்தது தெரிந்ததே. (த-ப)

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹனவுக்கு பதவி உயர்வு

கொழும்பு,ஓக 10

பொலிஸ் அத்தியட்சகரும் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன உட்பட 22 பொலிஸ் அத்தியட்சகர்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடந்த மாதம் தரம் உயர்த்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி 18 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதியிலிருந்து செயற்படும் வகையில் தரம் உயர்த்தப்பட்டுள்ள அதே வேளை, 4 புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்குக் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து பதவி உயர்வு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (த)

## கண்ணீர் அஞ்சலி



எனது குடும்ப மாமனார்
சின்னையா பாலசிங்கம்
(அப்பையா)
நேற்று 09.08.2012
வியாழக்கிழமை காலமான செய்தி
கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றேன்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

*பிரிவால் துயருறும்*
*மருமகன் R.தேவராசா*

(21664) (15-14)

**T Vகள் மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில்
Sony (Japan) Wega Flat T Vகள் 21", 25"-12500/=,
ரேடியோ கசெற் CD 2500/=,
சிறிய Box வகைகள் 1500/=,
தொடர்புகளுக்கு: 077 044 0570
சோனி றேட்ற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக
56, K.K.S. வீதி, சுன்னாகம். (21603) (45.6.7)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.நகருக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. நல்லூர் கோயிலுக்கு அருகில் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-0779210400
(21605) (2-6-7)

# கரைச்சி பிரதேச அபிவிருத்திக்கான நிதி பிரதேசசபை உறுப்பினர்களிடம்

கிளிநொச்சி, ஓக 10

கரைச்சிப் பிரதேசத்திலே இந்த வருடம் மேற்கொள்ளபட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கெனப் பிரதேச சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 12 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதற்கான தீர்மானம் கரைச்சிப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையிலே ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 15 உறுப்பினர்களும், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

பரந்துபட்ட கரைச்சிப் பிரதேசத்திலே பாகுபாடின்றி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டுச் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் சமனான தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது .

இந்த 12 லட்சம் ரூபா நிதியிலிருந்து 8 லட்சம் ரூபா செலவில் மயானங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றின் அபிவிருத்தி வேலைகளை உறுப்பினர்கள் மேற்கொள்ள முடியும்.

மீதியாகவுள்ள 4 லட்சம் ரூபா செலவில் மழைகாலங்களில் வெள்ள வாய்க்கால், மதகுகள் ஆகியவற்றின் சிறு திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியும்.

சபை உறுப்பினர்களிடம் நேரடியாக நிதியை வழங்குவதன் மூலம் அவர்கள் தமது பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவற்றை முதன்மைப்படுத்தி மேற்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியும் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படுமெனப் பிரதேச சபை நிர்வாகத்தினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (க-115)

## வற்றாப்பளையில் பூசகர்களுக்கு இரு வாரகால பயிற்சி நெறி

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வன்னியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அந்தணர் அல்லாத இந்து பூசகர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சியை வழங்கவெனத் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் தமிழகக் கிராம கோயில் பூசாரிகள் பேரவையைச் சேர்ந்த மூன்று விரிவுரையாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களுள் ஏ.ஜீவநாதன், எஸ்.என்.சிவராஜன், ஆர்.கார்த்திகேயன் ஆகியோரே அந்த மூவரும் ஆவர்.

முழுமையான வதிவிடப் பயிற்சியாக அமையவுள்ள இப்பயிற்சி நெறியில் இந்து சமய அடிப்படைத் தத்துவங்கள், ஆலயங்களின் அனுஷ்டான விதிமுறைகள், அர்ச்சனை முறைகள், கிரியை தொடர்பான விளக்கங்கள், முறையான மந்திர உச்சாடனங்கள்,தியானப் பயிற்சிகள், எளிய முறையிலான யோகாசனப் பயிற்சிகள், திருமுறைப் பஜனைப் பாடல்கள் மற்றும் இந்து ஆலயங்களில் பேண வேண்டிய அடிப்படைக் கிரியைகள், அனுட்டானங்கள் தொடர்பான விரிவுரைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தப் பயிற்சிக்கெனவிண்ணப்பித்த முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பூசகர்களுக்கு திணைக்களம் மூலம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(க)

---

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



மலர்வு
15.12.1999

உதிர்வு
12.07.2012

"நம்புவோர் வாழ்வு பெறுவோர்"
"இறுதிநாள் உயிர்த்தெழுதலின் போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்குத் தெரியும்"
யோவான்: 24

அமரர்
**அஃயூட் ரவீந்திரா**

எமது அன்புச் செல்வத்தின் அகால மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து உள்ளங் களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக 11.08.2012 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு சாவகச்சேரி புனித விகோரியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் தொடர்ந்து வீட்டிலே நடைபெறும் தேநீர் விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
இரணைப்பாலை,
ஆனந்தபுரம்.

ஜோன்சன் ஜெனீவா
குடும்பம்.
077 126 7272

(18141) (5,6,7)

---

**கண்ணீர் அஞ்சலி**



எழுவைதீவு வைத்தியசாலையில் முதன் முதலாக கடமையாற்றிய **அமரர் Dr.குமாரசாமி சண்முகராசா** அவர்கள் 08.08.2012 (புதன்கிழமை) இறைபதம் அடைந்ததையிட்டு எழுவையூர் மக்களும், புனித தோமையார் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எழுவையூர் புனித தோமையார்
கடல்தொழிலாளர் கூட்டுறவு சங்கம்,
எழுவைதீவு.

(21609)(5-6-7)

---

**27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி
**கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை - றோ.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)
திதி: 11.08.2012



மண்ணில்
10★02★1956

விண்ணில்
10★08★1985

ஆண்டுகள் இருபத்தி ஏழு கடந்தாலும்
எம் உயிரோடும் உணர்வோடும்
கலந்து விட்ட தங்கள் நினைவுகள்
என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

என்றும் நினைவில்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி முன்பு,
கோப்பாய் மத்தி.

கணவர்: லயன் வயிரமுத்து சுப்பிரமணியம்,
உறுப்பினர் வலி.கிழக்கு பிரதேசசபை,
கோப்பாய் மத்தி.
லயன் சு. சுதர்ஷன் (மகன்- பொறியியலாளர்.)

(21420) (45.6.7)

---

**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு
14
.
03
.
1947



உதிர்வு
10
.
08
.
2007

**அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்- ஊர்காவற்றுறை, பருத்தித்துறை.)

அன்பு மொழி பகர்ந்து இப்பாரினில்
எமை அரவணைத்த எம் தந்தையே
இவ்வுலகில் நீர் மறைந்து
ஆண்டு ஐந்து ஆனாலும்
நிலைத்திடுவீர் எம் நெஞ்சமதில்
என்றென்றும்

நீங்காத உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

'தனிகை'
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(21478) (45-6-7)

---

**மரண அறிவித்தல்**

**அருணாசலம் பத்மநாதன்**

(ஓய்வு பெற்ற இ.போ.ச கிளிநொச்சி மேற்பார்வையாளர் D.S )



மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பத்மநாதன் 07.08.2012 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி மகாலட்சுமியின் (ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, திசைவீரசிங்கம், சிவபாக்கியம் மற்றும் இராஜமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரி, சோமஸ்கந்தராசா, கணேசன் மற்றும் கமலாம்பிகை (கொழும்பு), காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் வாடிவாம்பிகை (தாதிய உத்தியோகத்தர், டெல்மன் வைத்திய சாலை,கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் லோகதாஸ் (நோர்வே), பிரதீபா (கனடா), மைதிலி (நோர்வே), காலஞ்சென்ற மலர்விழி மற்றும் வதன்தாஸ் (நோர்வே), கேதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகிலபாரதி, யோகலிங்கம், அகலிகை, விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயன், நிவேதிதா, யஸ்வினி, வாசவி, காலஞ்சென்ற சர்மினி மற்றும் ஆகவி, கம்சிகா, கவியரசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில்அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.

"தீப வாசா"
மீசாலை வடக்கு, மீசாலை.

(சி/2194)(2.6.7)

---

**6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
21* 05* 1938

மறைவு
10* 08* 2006

**அமரர் யோசப் பற்றிக் (ராசா)**

உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றும் சாகமாட்டார் யோ:- 11:26

இன்னல்கள் பல சுமந்து எம்மை உயர்த்திச்
சென்ற தந்தையே
ஆண்டு ஆறு ஆகியும் எம் அருகே
இருப்பதுபோல் எம் முணர்வு உள்ளது
எம் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல குழந்தை யேசுவை
வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

149/2, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

(21471) (2.6.7)

# படையினருக்கான விடுதி ஏதும் யாழ். ஆஸ்பத்திரியில் இல்லை

## பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.10

யாழ்.போதனா வைத்தியசாலையில் படையினருக்கு மருத்துவ விடுதி அமைப்பது தொடர்பில் கூறப்படும் கருத்துக்களில் எதுவித உண்மையுமில்லை. அவ்வாறான ஒரு திட்டமும் இல்லை.

வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா இவ்வாறு கூறியுள்ளார்.

போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாடிக்கட்டடத் தொகுதியில் படையினருக்கு என தனியான மருத்துவவிடுதி அமைப்பது தொடர்பாக வெளியாகியிருக்கும் தகவல் குறித்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் ஜெய்க்கா திட்டத்தின் கீழான மாடிக் கட்டடத் தொகுதியில் சத்திரசிகிச்சைப் பிரிவுகளே அதிகமாக இருக்கும்.**

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில மருத்துவ விடுதிகளில் நோயாளர்களுக்கு ஏற்ப இடவசதிகள் இல்லை. பிறமாவட்டங்களிலிருந்தும் நோயாளர்கள் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள்.

தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் ஜெய்க்கா திட்டத்தின் கீழான மாடிக்கட்டடத் தொகுதியில் சத்திரசிகிச்சைப் பிரிவுகளே அதிகமாக இருக்கும். இதுதவிர ஏனைய பிரிவுகளையும் அங்கு ஆரம்பிக்க முடியும். அது குறித்து ஆரா யப்பட்டு வருகிறது.

கட்டட வேலைகள் நிறைவுறும் தறுவாயில் உள்ளன. உள்ளக வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. அவற்றுக்கான உபகரணங்கள் கொண்டுவரப்பட்டு பொருத்தி உரியவர்களுக்குப் பயிற்சி அளித்து அங்கு வைத்திய சேவைகள் ஆரம்பமாகும்.

அங்கு படையினருக்கு என்று விடுதிகள் எதுவும் அமைப்பது தொடர்பில் தமது திட்டத்திலும் இல்லை. அதுபற்றிய கருத்துக்களும் தவறானவை- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## அரச வைத்தியசாலைகளுக்கு 2 ஆம் காலாண்டுக்கான மருந்து

யாழ்ப்பாணம், ஓக.10

யாழ்.குடாநாட்டில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இரண்டாம் காலாண்டுக்கு தேவையான மருந்துப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த மருந்துப் பொருள்கள் யாவும் முழுமையாக எடுத்து வரப்பட்டதை அடுத்து வைத்தியசாலைகளுக்கான மருந்து விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் காலாண்டுக்கான மருந்துப் பொருள்கள் இரண்டு கட்டங்களாக எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. (த-17)

## ஊர்காவற்றுறை கீரிக்குளம் அபிவிருத்திக்கு மதிப்பீடு

வலி.தென்மேற்கு, ஓக.10

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தம்பாட்டியிலுள்ள கீரிக்குளம் பகுதி அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் நலன் கருதி இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் மேற் கொண்டுள்ளார்.

மழை காலங்களில் கடலை நோக்கிச் செல்லும் மழை வெள்ளத்தை கீரிக் குளத்தில் தேக்கி வைப்பதன் மூலம் வெப்ப காலத்தில் நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைக்க முடியும். அத்துடன் மக்களின் தேவைக்கும் குளத்துத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். அத்துடன் கால்நடைகளின் குடிதண்ணீர் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்.

இந்தப் பகுதி மக்களின் நலன் கருதி இந்தக் குளத்தை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகளை இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து தற்பொழுது மதிப்பீட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-115)

## வடிகால்களை மழைக்கு முன் துப்புரவு செய்யக் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.9

சாவகச்சேரி நகர்ப் பகுதியின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களை மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் துப்புரவு செய்யுமாறு வர்த்தகர்கள் கேட்டுள்ளனர்.

வீதி அகலிப்புக்காக இரு மருங்கிலும் வடிகால்கள் அமைக்கப்பட்டு அதற்கு பாதுகாப்பு மூடி கள் போடப்பட்டுள்ளன. எனினும் அதனுள் வீழ்ந்த கற்கள் உட்பட கழிவுகள் இன்னமும் துப்புரவு செய்யப்படாமல் உள்ளன.

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த வடிகால்கள் துப்புரவு செய்யப்படாவிடின் வடிகாலுக்குள் விழும் மழை வெள்ளம் பாய்ந்தோட முடியாமல் தேங்கி நின்று டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை வடிகாலுக்கு கொங்கிறீற் மூடிகள் போடப்பட்ட போதிலும் சில இடங்களில் இடைவெளிகள் நிரப்பப்படாமல் சிறிய இடைவெளிகள் காணப்படுவதால் அதனுள் கால் சிக்கி வீழ்ந்து பலர் காயமடைந்து வருகின்றனர். இந்த நிலையில் நிரப்பப்படாமல் உள்ள இடங்களுக்கு பாதுகாப்பு மூடி அமைக்குமாறு கேட்டுள்ளனர். (ம-9)

## மந்துவில் வாசிக்கு ஒரு வருட சிறை

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய திருவிழாவின் போது மோட்டார் சைக்கிள் திருடிய மந்துவில்வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இந்த நபருக்கு ஏற்கனவே சரசாலையில் இடம்பெற்ற தாலிக்கொடி அறுத்த வழக்கில், குறைந்த வயதுடையவர் என்பதால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து முன்னர் வழங்கப்பட்ட தண்டனையையும் சம காலத்தில் அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது. (ம-9)

## எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் பெண்

சமையலில் ஈடுபட்டிருந்த வேளையில்ஆடையில்தீப்பற்றிக் கொண்டதில் குடும்பப் பெண் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த வைரமுத்து கண்மணி (வயது 57) என்பவர் எரிகாயங்களுக்கு ஆளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## கள்ளுத் தவறணையை இடம்மாற்றக் கோரிக்கை

நவாலி, ஓக.10

நவாலி கிழக்குப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணையை குடியிருப்பு இல்லாத பகுதிக்கு இடம்மாற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் கேட்டுள்ளனர்.

தற்போதுள்ள இந்தத் தவறணை ஆனைக்கோட்டை நவாலி பிரதான வீதிக்கு மிகச் சமீபமாகவும் ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயம், நவாலி முருகமூர்த்தி ஆலயம் என்பவற்றுக்கு அண்மையில் பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைந்துள்ளது.

ஆனைக்கோட்டை பள்ளக்காடு மூன்றாம் கட்டையடியிலுள்ள கள்ளுத்தவறணையும் கடந்த வாரம் பொதுமக்களின் எதிர்ப்பினால்மூடப்பட்டதைத்தொடர்ந்து அங்கு செல்லும் மதுப்பிரியர்களும் இங்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் அந்தப் பகுதி பகல், இரவு நேரங்களில் ஒரே கூட்டமாக உள்ளது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் பயணம் செய்ய முடியாமல் அந்த வீதி தடைப்படுகிறது.

இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உரியவர்கள் முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் மேலும் கூறியுள்ளனர். (ம-100)

## போதையில் மோட்டார் சைக்கிள் ஓடியவர் இழந்தார் ரூ.20 ஆயிரம்

வலி.தென்மேற்கு, ஓக.10

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளைஞர் ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து, 20 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாகச் செலுத்தினார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரை ஆனைக்கோட்டையில் மறித்துச் சோதனை செய்த போது அவர் மதுபோதையில் இருப்பது தெரிய வந்தது.

இவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸார் இவர் மீது, மது போதையுடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமை உட்பட எட்டுக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது குறித்த இளைஞர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் இவருக்கு 20 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். (ம-115)

## தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி,ஓக. 10

தொலைத் தொடர்புக் கம்பத்தில் இணைப்பு வேலை மேற்கொண்டிருந்தவர் தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்றது.

இருபாலை, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த தம்பிமுத்து பவனேசன் (வயது 24) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## சோலர் மூலம் தீவகத்துக்கு ஒளி

யாழ்ப்பாணம், ஓக. 10

மின்பெறப்படாத தீவகப் பிரதேச வீதிகளுக்கு சோலர் மின்குமிழ் மூலம் ஒளியேற்றப்படவுள்ளது.

முதற்கட்டமாக தீவகத்தில் உள்ள 4 உள்ளூராட்சி சபைகள் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேச சபைகளே இவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை நிதியை பயன்படுத்தி சோலர் மின் விளக்குகளை பொருத்தவுள்ளன.

இதன் முதற்கட்டப் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சபைத் தலைவர்கள் கூறினர். (ம-41)

## மண்டைதீவுக்கு மின்சாரம் முதற் கட்டப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.10

இரண்டு தசாப்தங்களின் பின்னர் மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக மின்சாரக் கம்பங்கள் இடுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் இருந்து கடலுக்கு ஊடாக உயர முத்த மின்சாரக் இணைப்பைப் பெற்று இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்று ஏற்கனவே இடம்பெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் எந்திரி ஐ. குணசீலன் கூறியிருந்தார். இதற்கமையவே நேற்று மண்டைதீவுக்கான மின்சார இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட 30 கிராம அலுவலர் பிரிவுகளில் மண்டைதீவு, செட்டிபுலம், புங்குடுதீவில் அதிசய வைரவர் வீதி மற்றும் வேலணை கோபுரத்தடி வீதி ஆகியன உட்பட14 கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை.

மண்டைதீவு இருளில் மூழ்கியுள்ளமை தொடர்பாக மக்கள் வேலணை பிரதேச சபைக்குக் கொடுத்த பல முறைப்பாடுகளை அடுத்தே தற்போது மண்டைதீவுக்கான மின்சார விநியோகப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் மண்டைதீவுக்கான மின் இணைப்பு வேலைகள் முற்றுப் பெற்று மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பை இப் பகுதி மக்கள் பெறுவர் என்று பிரதேச சபைத் தலைவர் கூறினார். (ம-50)

# 11 லட்சத்து 41 ஆயிரம் ரூபா சாவகச்சேரி அபிவிருத்திக்கு

தென்மராட்சி, ஓக.10

தென்மராட்சி பிரதேசத்தில் இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 13 அபிவிருத்தி வேலைகளுக்கு 11 லட்சத்து 41 ஆயிரத்து 700 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கு மயான அபிவிருத்திக்கு 49 ஆயிரம் ரூபாவும், கைதடி கிழக்கு கலைநகர் துர்க்கை சனசமூக நிலைய கட்டட வேலைக்கு 73 ஆயிரத்து 500 ரூபாவும், மட்டுவில் வடக்கு வின்சன் சனசமூக நிலைய அபிவிருத்துக்கு 98 ஆயிரம் ரூபாவும், கைதடி கிழக்கு துர்க்கா சனசமூக நிலையத்துக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 49 ஆயிரம் ரூபாவும், வெள்ளாம் போக்கட்டி சனசமூக நிலைய கட்டட திருத்தத்துக்கு 88 ஆயிரத்து 200 ரூபாவும், சரசாலை வடக்கு சனசமூக நிலைய புனரமைப்பு வேலைக்கு 49 ஆயிரம் ரூபாவும், கைதடி கிழக்கு கலைநகர் துர்க்கா சனசமூக நிலைய புனரமைப்பு வேலைக்கு 49 ஆயிரம் ரூபாவும், கரம்பைக் குறிச்சி சனசமூக நிலைய கட்டட திருத்த வேலைக்கு 98 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரணி பொது நூலகத்துக்கு நூல்கள் கொள்வனவு செய்ய 98 ஆயிரம் ரூபாவும், மாசேரி கிழக்கு காப்புலம் வீதி புனரமைப்பு வேலைக்கு 98ஆயிரம் ரூபாவும், சரசாலை தெற்கு ஆலடி மயானமும் வீதியும் புனரமைப்புக்கு 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், கைதடி தெற்கு விநாயகர் சனசமூக நிலைய புனரமைப்பு வேலைக்கு 49 ஆயிரம் ரூபாவும், எழுதுமட்டுவாழ் தெற்கு மயான மீள் குடியமர்ந்தோர் புனர்வாழ்வு சங்க அபிவிருத்திக்கு 98 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேசசபையின்அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள 13 வேலைத் திட்டங்களுக்குமாக மொத்தம் 11 லட்சத்து41 ஆயி ரத்து 700 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## ஊர்காவற்றுறையில் பஸ் நிலையம்

வலி.தென்மேற்கு, ஓக.10

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பயணிகளின் நலன் கருதி உட்கட்டுமான அமைச்சின் நிதியுதவியுடன் 10 லட்சம் ரூபா செலவில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகத்தால் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபைச் செயலாளர் சுதர்சன் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-115)

# பாபா ராம்தேவ் மீண்டும் ஆரம்பித்தார் போராட்டம்

## கறுப்புப் பணத்துக்கு எதிராக


டில்லி, ஓக. 10

வெளிநாடுகளில் பதுங்கிக் கிடக்கும் கறுப்புப் பணத்தை மீட்க வலியுறுத்தி பாபா ராம்தேவ், தமது ஆதரவாளர்களுடன் டில்லி ராம் லீலா மைதானத்தில் 3 நாள் உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்தார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் இதே மைதானத்தில் ஆதரவாளர்களுடன் தொடர் போராட்டம் நடத்திய போது பொலிஸார் நள்ளிரவில் அத்துமீறி அனைவரையும் அகற்றினர். இதில் நடந்த தடியடியில் பல தொண்டர்கள் காயமுற்றனர்.

இந்தநிலையில் பாபா ராம்தேவ் தனது 2ஆவது கட்ட போராட்டத்தை நேற்று டில்லி ராம் லீலா மைதானத்தில் தொடங்குவதாக அறிவித்திருந்தார். அது ஆர்ப்பாட்டமா உண்ணாவிரதமா என்பதை ராம்லீலா மைதானத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு அறிவிப்பதாக தெரிவித்தார்.

அதையடுத்து அங்கு ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் திரண்டு இருந்தனர். இதற்காக காலை 9.20 மணிக்கு பாபா ராம்தேவ் தான் தங்கி இருந்த இடத்தில் இருந்து டில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி சமாதிக்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.



பின்னர் ராம்லீலா மைதானம் திரும்பி அங்கு திரண்டிருந்த ஆதரவாளர்களிடையே உரை நிகழ்த்தினார். அப்போது ஊழல் ஒழிப்பு, கறுப்புப் பணம் மீட்பு கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருப்பதாகவும், அதே சமயம் இது கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் அல்ல என்றும், 3 நாள் அடையாள உண்ணாவிரதம்தான் என்றும் பாபா ராம்தேவ் அறிவித்தார்.

நான் இப்போது நாட்டு மக்களுக்காக மட்டும் போராடவில்லை. இந்த நாட்டையே காப்பாற்றத்தான் போராடுகிறேன். எனக்கு அரசியலில் குதிக்கும் திட்டம் எதுவும் இல்லை. - என்றார் ராம்தேவ்.

### ஹசாரேவுக்குக் கூடாத கூட்டம்

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் திரண்டுள்ளனர்.

அண்மையில் ஹஸாரே லோக்பால் பிரேரணையை வலியுறுத்தி டில்லி ஜந்தர் மந்தர் மைதானத்தில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு இல்லாமல் போன நிலையில், பாபா ராம் தேவின் போராட்டத்துக்கு ஆதரவாக பல ஆயிரக் கணக்கானோர் திரண்டுள்ளது டில்லி வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மெட்ரோ ரயில் பணிகளின்போது உடைந்து வீழ்ந்தது கிரேன்

### இருவர் சாவு; 6 பேர் காயம்



சென்னை கீழ்ப்பாக்கம் அருகே மெட்ரோ ரயில் பணிகளின் போது கிரேனின் நடு அச்சுப்பகுதி முறிந்து வீழ்ந்ததில் இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.

சென்னையில் மெட்ரோ ரயில் அமைப்பதற்கான பணிகள் மிகவும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்தப்பணியில் ராட்சத கிரேன் பயன்படுத்தப்படுகின்றது. நேற்று முன்தினம் இரவு சென்னையில் மழை பெய்து கொண்டிருந்த போது மெட்ரோ ரயில் பணிகள் தடையாகவிலை.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவுதான் இந்த கோர விபத்து ஏற்பட்டது. இரும்புக்கம்பிகளை மொத்தமாக கட்டி 25 மீற்றர் பள்ளத்தாக்கில் இறக்கும் பணி நடந்து கொண்டிருந்த போது கிரேனின் நடு அச்சுப்பகுதி முறிந்து தொழிலாளர்கள் மீது விழுந்ததில் இருவர் உயிரிழந்தனர்.

காயமடைந்த அனைவரும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரது நிலைமை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.



சென்னை உயர்நீதிமன்றத்தின் 150 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள வருமாறு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் தலைமை நீதிபதி எம்.வை. இக்பால் நேரில் சந்தித்து அழைப்பிதழ் வழங்கினார்.

## கூட்டணிக் கூட்டத்தை புறக்கணித்தார் மம்தா

டில்லி, ஓக. 10

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், திரிணமுல் காங்கிரஸ், தலைவர் மம்தா பானர்ஜி பங்கேற்கவில்லை.



அண்மையில், காங்கிரஸ் கட்சிக்கும், மத்திய கூட்டணி அரசில் பங்கேற்றுள்ள தேசியவாத காங்கிரஸ் கட்சிக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இதுதொடர்பாக நடந்த பேச்சில், பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க, ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப் பட்டது. இதன் முதல் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதுகுறித்து, மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்ததாவது:

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் பொருளாதார அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், ஒவ்வொரு மாதம், கடைசி வெள்ளிக்கிழமை நடைபெறும்-என்றார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா தலைமையில் நடந்த இந்தக்கூட்டத்தில், திரிணமுல் காங்கிரஸ், கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி பங்கேற்கவில்லை. அவர், மற்றொரு நிகழ்ச்சியில் பங்கேற்க சென்றதால், பங்கேற்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## 'அக்னி – 2' ஏவுகணை பரிசோதனை வெற்றி

அணு ஆயுதங்களை தாங்கிச்செல்லும் வலிமை வாய்ந்த அக்னி- 2 ஏவுகணைப் பரிசோதனை வெற்றியளித்துள்ளது.

ஒரிசா மாநிலம் பாலாச்சூர் ஏவுகணை தளத்திலிருந்து அக்னி- 2 ஏவுகணையை இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வெற்றிகரமாகப் பரிசோதித்தனர்.

இந்த ஏவுகணை 2 ஆயிரம் கிலோமீற்றர் வரை அணு ஆயுதங்களை சுமந்து சென்று இலக்கை துல்லியமாகத் தாக்கும் சக்தி படைத்தது.

அக்னி ரக ஏவுகணைகள் முதன் முதலாக 1999ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்தியாவில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

இந்தியா இராணுவத்தில் அக்னி ரக ஏவுகணைகள் முக்கிய பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## கைதுக்கு எதிரான ஜெகன் மோகனின் மனு நிராகரிப்பு

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஆந்திர மாநில வை.எஸ்.ஆர். கட்சியின் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி, தான் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஜெகன் மோகன் தாக்கல் செய்த பிணை மனு மீது பதிலளிக்க மத்திய புல னாய்வுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது. (வ)

## 100ஆவது செயற்கைக்கோள் ஏவத் தயாராகிறது இஸ்ரோ

இந்திய அறிவியல் தொழில் நுட்பத்துறையின் மைல்கல்லாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டா ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து 100 ஆவது செயற்கைக்கோள் ஏவப்பட உள்ளதாக இஸ்ரோவின் இயக்குநர் ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1975 ஆம் ஆண்டு இந்தியாவின் சார்பில் செலுத்தப்பட்ட ஆர்யபட்டா செயற்கைக்கோள் முதற்கொண்டு இதுவரையில் சுமார் 99 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. தற்போது பி.எஸ்.எல்.வி.சி.21 என்ற செயற்கைக் கோள் மூலம் வர்த்தக ரீதியாக விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இந்த செயற்கைக் கோளில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சிறிய வகை செயற்கைக்கோளும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்பாட் -6 என்ற 750 கிலோ எடை கொண்ட செயற்கைக் கோளும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இவை வெற்றிகரமாகச் செயற்படும் பட்சத்தில் இந்தியாவின் செயற்கைக்கோள் ஆராய்ச்சி நிலையத்துக்கு ஒரு மைல்கல்லாக அமையும்- என்றார். (வ)

## மு.க. ஸ்டாலின் மீது அவதூறு வழக்கு

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் மீது, சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி வெளியான 'ரைம்ஸ் ஒப்' இந்திய பத்திரிகையில், தி.மு.க., பொருளாளர் ஸ்டாலினின் பேச்சு வெளியாகியிருந்தது. சென்னை நகர மக்கள் துன்பப்பட்டு கொண்டிருக்கும் போது (கொலராவால்), ஒரு முதல்வர் எப்படி விடுமுறையில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என ஸ்டாலின் பேசியதாக, அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியானது.

அதையடுத்து, ஸ்டாலின்; ரைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகை வெளியீட்டாளர், ஆசிரியருக்கு எதிராக அவதூறு வழக்கை, தமிழக அரசு சார்பில் நகர அரசு குற்றவியல் சட்டத்தரணி ஜெகன், சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

மனுவில் கூறியிருப்பதாவது:-

முதல்வர் விடுமுறையில் இருக்கிறார் என கூறியிருப்பதில் எந்த அடிப்படையும் இல்லை. இது அவதூறானது. முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கில் அடிப்படையற்ற செய்தியை வெளியிட்டுள்ளனர். எனவே, இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து, தண்டிக்க வேண்டும்-என்று அதிலுள்ளது.

## 80 அடி பள்ளத்தில் உருண்டது பஸ்

### 31 பேர் சாவு; 27 பேர் காயம்

திரிபுரா மாநிலத்திலிருந்து அஸாம் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று 80 அடி பள்ளத்தில் விழுந்து உருண்டதில் 31 பேர் உயிரிழந்தனர்.


திரிபுரா தலைநகர் அகர்தலாவிலிருந்து அஸாமின் கவுகாத்திக்குச் சென்று கொண்டிருந்த இந்த பஸ், நேற்று அதிகாலை 4 மணியளவில் அஸாம் எல்லையில் உள்ள தாம் செங் என்ற மலைப்பாதைக் கிராமத்தில் உள்ள பள்ளத்தாக்கில் தலைகுப்புற கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 31 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 27 பேர் படுகாயமடைந்தனர்.

பின்னர் இந்த விபத்து குறித்து மீட்புக் குழுவினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் விரைந்து வந்து பயணிகளை மீட்டனர். அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே சாவு எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.



## அசாத்தை கைவிடாது ஈரான்



திடீரென தலைமறைவான சிரிய ஜனாதிபதி அசாத் சில நாள்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் தொலைக்காட்சியில் தோன்றினார். அவருடன் ஈரானின் சிறப்புத் தூதர் சயீத் ஜலீலியும் இருந்தார்.

இவர் ஈரானின் தலைவர் அயதுல்லா அலி கொமெனியின் சார்பில் சிரியா வந்து ஜனாதிபதி அசாத்தை சந்தித்தார். அப்போது அவர் சிரியா ஜனாதிபதி அசாத்துக்கு ஈரான் ஆதரவு தருவதாக அறிவித்தார்.

சிரியாவில் நடப்பது உள் நாட்டுப் பிரச்சினை. அதில் மற்ற நாடுகள் தலையிடுவது சரியானதல்ல. தற்போது அரசை எதிர்த்துப் போரிடும் புரட்சிப் படைக்குத் துருக்கி, சவுதிஅரேபியா போன்ற நாடுகள் ஆயுதம் வழங்கி வருகின்றன. இவர்களுக்கு அமெரிக்கா பின்னணியில் இருந்து இயக்கி வருகின்றது. அவர்களின் இந்த செயல்பாடுகள் நல்ல நடவடிக்கை அல்ல.

சிரியாவில் மக்கள் ரத்தம் சிந்துவதற்கு இவர்கள் தான் காரணம். இதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். சிரியா வந்த ஈரான் யாத்திரிகர்கள் 48 பேர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளனர். இதற்கு அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் இங்கு அவர்கள் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர். எந்த சூழ்நிலையிலும் சிரியா ஜனாதிபதிக்குத் தான் ஈரான் துணை நிற்கும். எங்களது நட்பு அவருடன் தொடரும் எனத் தெரிவித்தார். இதற்கு பதில் அளித்து சிரியா ஜனாதிபதி அசாத் பேசினார். அப்போது, நாட்டில் தீவிரவாதத்தை வேரறுத்து 17 மாதகாலமாக நடைபெறும் உள்நாட்டுப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவேன் என உறுதி அளித்தார்.

## சிரிய ராணுவத்தினரின் போர்க்குற்றங்கள் வெளியீடு



சிரியாவில் பொதுமக்கள் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பான காட்சிகளை மனித உரிமை அமைப்புக்கள் வெளியிட்டுள்ளன.

அலெப்போ நகரில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான காட்சிகள் தமக்கு செய்மதி மூலம் கிடைக்கப் பெற்றுள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஷெல் வீழ்ந்து வெடித்ததாகக் கருதப்படும் 600 க்கும் அதிகமான இடங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

சிரிய துருப்பினர் மற்றும் கிளர்ச்சியாளர்கள் என இருதரப்பினரும் குற்றமிழைத்துள்ளமை தெரியவருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தக் கருத்து தொடர்பில் சிரியா எந்தவிதமான கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை.

# ஒரே நாளில் ஆறுமாத மழை

## பிலிப்பைன்ஸில் தொடர்கின்றது இடர்

மணிலா, ஒக.10

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் பெய்த கன மழையால் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ், சீனா உள்ளிட்ட நாடுகளில் கடந்த வாரம் 'சாயோலா' என்ற புயல் தாக்கியது. இதில் பிலிப்பைன்ஸில் மட்டும் 50க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில், கடந்த இரண்டு நாள்களாக மணிலாவில் கன மழை பெய்து வருகின்றது. ஆறு மாத காலத்திற்குப் பெய்ய வேண்டிய மழை அளவு ஒரே நாளில் பெய்ததால், மணிலாவில் பெரும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. இதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீடுகளை வெள்ளம் சூழ்ந்ததால் பெரும்பாலானோர் கூரைகளின் மீது ஏறி தங்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் தீயணைப்புப் படையினர் மற்றும் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். வீட்டை விட்டு சென்றால் பொருள்கள் திருட்டுப் போய்விடும் என்ற பயத்தால் மக்கள் வீட்டுக் கூரை மீது அமர்ந்துள்ளனர். 80 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மணிலாவில் நான்கு பகுதிகளில் மோசமான அளவுக்கு வெள்ளம் பாதித்துள்ளதால் அந்தப் பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் மின் கம்பிகள் அறுந்து தண்ணீரில் விழுந்துள்ளதால், சிலர் மின் ஒழுக்கினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பாடசாலைகளும், வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.



வீடுகளை வெள்ளம் சூழ்ந்ததால் பெரும்பாலானோர் கூரை மீது தங்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் தீயணைப்புபடையினர் மற்றும் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

## முக்கிய அரசியல் பிரமுகர் மீது துப்பாக்கிச் சூடு

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவரான சையத் தலீப் ஹுசைன் ஷா இனந்தெரியாத சிலரால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் தனது நண்பரின் செங்கல் சூளைக்கு அருகே இருந்தபோது காரில் வந்த இனந் தெரியாத சிலர் அவரை சுட்டுக்கொன்றுவிட்டு தப்பித்துவிட்டனர். இதனைப் பாகிஸ்தான் பொலிஸின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கு அரசியல் ரீதியான முன்பகையே காரணம் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவத்துக்கு அந்த நாட்டு ஜனாதிபதி சர்தாரியும், பிரதமர் அஷ்ரப்பும் கண்டனம் தெரிவித்துள் ளனர். கொலையாளிகளைக் கைது செய்யுமாறு அவர்கள் பொலிஸாருக்கு உத்தரவிட் டுள்ளனர். பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தின் குஜராத் மாவட்டத்தின் மக்கள் கட்சித் தலைவராக அவர் இருந்து வந்தார். அந்த நாட்டு மத்திய மின்துறை அமைச்சர் சௌத்ரி அகமது முக்தாருக்கு மிகவும் நெருக்கமானவராகவும் ஷா இருந்து வந்தார்.

## குருத்வாரா கொலையாளியின் நண்பியும் பொலிஸாரால் கைது

வொஷிங்டன், ஒக.10

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள குருத்வாராவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 6 சீக்கியர்களைச் சுட்டுக்கொன்ற கொலையாளி வேட் மைக்கேல் பேஜின் பெண் நண்பியான மிஸ்டி எம். குக்கைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வேட் மைக்கேல் பேஜை சுட்டுக் கொன்றனர். அவரது பெண் நண்பி குக்கின் வீட்டிலிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது. குக் தற்போது பணிப்பெண்ணாகப் பணிபுரிந்து வருகிறார்.

அவரது வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிக்கு லைசென்ஸ் இல்லை என்பதால், சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருந்தது தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் என பொக்ஸ் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

தெற்கு மிலிவிகி பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வந்துள்ளார் குக். வெள்ளையர் இன ஆதரவு முன்னணிக் குழுவுடன் மிஸ்டி குக்கிற்குத் தொடர்புள்ளதால், அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவர் மீது 2002ஆம் ஆண்டு ஒரு வழக்கு உள்ளது. போக்குவரத்து விதிகளை மீறியதோடு, போக்குவரத்துக் காவலரிடமிருந்து தப்பியதாகவும் வழக்கு உள்ளது.



மைக்கேல் பேஜிடமிருந்து தான் பிரிந்து விட்டதாகக் குக் கூறிவருகின்றார். ஆனால் ஆத்திரக்காரராகத் திரிந்த பேஜுடன் வெகு காலம் குக் தங்கியிருந்ததாக அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசிக்கும் டேவிட் பிரென் என்பவர் தெரிவித்தார்.

குடியிருப்பில் காதுகள் செவிடாகும் அளவுக்குப் பாடல் கேட்பது மற்றும் உடற்பயிற்சிக்கான உருளைகளை உருட்டுவது உள்ளிட்ட செயல்களில் பேஜ் ஈடுபட்டிருப்பார்.

ஆனால் குக் இருக்கும் போது அமைதியாக இருப்பார் என்று அவர் குறிப்பிட்டார். முன்னாள் ராணுவத்தினனான பேஜ், இத்தகைய தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டதன் பின்னணி என்ன என்பது தெரியாமல் புலனாய்வு அதிகாரிகள் திணறி வருகின்றனர். அவரது நடவடிக்கை மற்றும் அவருடன் தொடர்புடையவர்கள் உள்ளிட்ட பல விடயங்கள் விசாரணைக்குப் பின்னர் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாகிஸ்தான் பிரதமருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிக்கத் தவறியதற்காக, எதிர்வரும் 27ஆம் திகதி நீதி மன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் அளிக்கும் படி, அந்தநாட்டு உயர்நீதிமன்றம், பிரதமர் பர்வேஸ் அஷ்ரப் புக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் தற்போதைய ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி. இவரது மனைவி பெனசிர் பூட்டோ பிரதமராக இருந்த காலத்தில், ஏராளமான ஊழல் பணத்தை சுவிஸ் வங்கிகளில் பதுக்கியதாக வழக்குத் தொடரப்பட்டது. முஷாரப் ஜனாதிபதியாக இருந்தபோது, அவசர கால சட்டத்தின் மூலம், இந்த ஊழல் வழக்கு ரத்துச் செய்யப்பட்டது.

எனினும், இந்த அவசர கால சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாததால், சர்தாரி மீதான வழக்கை, மீண்டும் விசாரிக்கும்படி, பிரதமராக இருந்த யூசுப் ரசா கிலானிக்குப் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

சர்தாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத காரணத்தால், கிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றம் சாட்டப்பட்டு, அவரது பதவி தகுதி நீக்கம் செய்யப்பட்டது. அதையடுத்து, புதிய பிரதமராக அஷ்ரப் பதவி ஏற்றுள்ளார்.

சர்தாரி மீதான ஊழல் வழக்கைப் புதிய பிரதமர் அஷ்ரப் விசாரிக்க வேண்டும் என, உயர் நீதிமன்றம் வற்புறுத்தியுள்ளது. இந்த வழக்கை அவர் விசாரிக்காவிட்டால், கிலானியைப் போல இவரும் பதவி இழக்க நேரிடும்.

எனவே, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தலைவர்களைப் பாதுகாக்கும் வகையிலான பிரேரணை, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்த புதிய சட்டத்திருத்தத்தை ஏற்க உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் வழக்கில், புதிய பிரதமர் அஷ்ரப் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஜனாதிபதியாக உள்ளவர் மீது விசாரணை மேற்கொள்ள முடியாது என, அரசு தரப்பில் கூறப்பட்டு வந்தது.

ஜனாதிபதி மீதான ஊழல் வழக்கை விசாரிக்காதது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் என, கூறியுள்ள உயர்நீதிமன்றம், எதிர்வரும் 27ஆம் திகதி, அஷ்ரப், நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் அளிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.


## வரன் கேட்டுச் சென்ற பெண்களை நிர்வாணமாக்கி மானபங்கம்

### பாகிஸ்தானில் காட்டு மிராண்டித்தனம்

தங்கள் மகனுக்கு வரன் கேட்டுச் சென்ற பெண்களை நிர்வாணப்படுத்தியவரை, பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தானின் லாகூரில் உள்ள முசாபர்கர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சகினா, சமீனா. இங்குள்ள கான்கர் என்ற பகுதியைச் சேர்ந்தவர் இர்பான் அகமது. சகினாவின் மகன் ஷாயப்பும், அகமதுவின் மகள் நபீலாவும் காதலித்து வந்தனர். எனவே, முறைப்படி இவர்கள் திருமணத்தை நடத்தி வைக்கும் பொருட்டு சகினாவும், சமீனாவும், அகமது வீட்டுக்குச் சென்று பெண் கேட்டுள்ளனர். இதனால், அகமது கோபமடைந்தார். இருதரப்பினருக்கும் வாக்குவாதம் முற்றியது. ஒரு கட்டத்தில், சகினா மற்றும் சமீனாவும் நிர்வாணப்படுத்தப்பட்டுத் தெருவில் அழைத்துச் செல்லப்பட்டனர். இதை அங்குள்ளவர்கள் தொலைபேசியில் படம் எடுத்துள்ளனர். பெண்களை நிர்வாணப்படுத்திய அகமது மற்றும் அவரது உறவினர்கள் எட்டு பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அகமது கைது செய்யப்பட்டுள்ளார்; மற்றவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# மியன்மார் அகதிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்



இஸ்லாமாபாத், ஓக. 10

மியன்மாரில், ரகின் மாகாணத்தில் ஏற்பட்ட கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு, உரிய பாதுகாப்பை அளிக்கும் படி அந்த நாட்டு அரசை, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி கேட்டுள்ளார்.

மியன்மாரில், வங்கதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ள ரகின் மாகாணத்தில், கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது. ரகின் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில், வங்கதேசத்திலிருந்து குடிபெயர்ந்த, 8 லட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இவர்கள், மியன்மாரில் குடியுரிமை கேட்டுப் போராடி வருகின்றனர். சட்ட விரோதமாகக் குடிபெயர்ந்தவர்களுக்கு, குடியுரிமை அளிக்க, மியன்மார் அரசு மறுத்து விட்டது.

இதற்கிடையே, கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களின் குடிசைகளைத் தீ வைத்து கொளுத்தி விட்டதாகக் கூறி, பெரிய அளவில் கலவரம் மூண்டது. இதுவரை 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, மவுங்தா பகுதியில், அவசர நிலை அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் கருதி, ஏராளமான முஸ்லிம்கள், அயல் நாடான வங்கதேசத்துக்குள் தஞ்சம் அடைந்து வருகின்றனர். அகதிகள் வந்த வண்ணம் உள்ளதால் அவர்களை எல்லையோர காவல் படையினர் விரட்டியடித்து வருகின்றனர். இன்னும் நிலைமை சீராகாத நிலைமை குறித்து வருத்தம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து தவிக்கும் ரகின் பகுதி முஸ்லிம்களை மீளக் குடியமர்த்தும் பணியை மியன்மார் அரசு விரைந்து எடுக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் பாதுகாப்பான வாழ்க்கையை நடத்த முடியும் என, தெரிவித்துள்ளார்.

# சீனாவுடன் பேசத் தயார்

## திபெத்திடமிருந்து பச்சைக் கொடி



திபெத் பிரச்சினை தொடர்பாக சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம் என்று நாடு கடந்த திபெத் அரசின் பிரதமர் லோப்சாங் சங்கே தெரிவித்துள்ளார்.

சீனாவிடம் இருந்து விடுதலை பெறுவதற்காகத் திபெத் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றது. இந்தப் போராட்டத்தை புத்த மதத் தலைவர் தலாய் லாமா, இந்தியாவில் இருந்தபடி வழிநடத்தி வருகின்றார். அவரது முயற்சியின் பேரில், நாடு கடந்த திபெத் அரசு கடந்த ஆண்டு, இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தர்மசாலாவில் அமைக்கப்பட்டது. இந்த அரசு அமைந்ததன் ஓராண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் அங்கு கொண்டாடப்பட்டது. அப்போது, நாடு கடந்த திபெத் அரசின் பிரதமர் லோப்சாங் சங்கே கூறியதாவது:-

பரஸ்பர நலனின் அடிப்படையில் திபெத் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். சீனாவின் புதிய தலைமையுடன் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துவதற்காகத் திபெத் நிபுணர் குழு கடந்த எட்டு மாதங்களில் இரண்டு முறை கூடியுள்ளது. இந்தக் குழு டிசம்பர் மாதம் மீண்டும் கூட உள்ளது. திபெத் விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தையைத் தொடரும்படி ஹிலாரி கிளின்ரன் உள்ளிட்ட முக்கிய உலகத் தலைவர்கள் சீனாவைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நாடு கடந்த திபெத் அரசு ஓராண்டை நிறைவு செய்துள்ளது. இந்தப் பொறுப்பை நாம் இதுவரை சிறப்பாகக் கையாண்டுள்ளோம். இதற்கு திபெத்துக்கு உள்ளேயும் வெளியிலும் வாழும் திபெத்தியர்கள் மற்றும் நமது நண்பர்கள் அளித்த ஆதரவும், காட்டிய ஒற்றுமையுமே காரணம். திபெத் மக்களுக்கு விடுதலை மற்றும் திபெத்துக்குத் தலாய்லாமா திரும்புவது ஆகிய நமது இலக்குகளை நிறைவேற்றுவதில் நமது ஆட்சிக்குழு தொடர்ந்து உறுதியுடன் இருப்பதை திபெத்தியர்களுக்கும், நமது நண்பர்களுக்கும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நமது குறிக்கோள்களை வலியுறுத்தி சீனாவில் உள்ள திபெத்தியர்கள் தீக்குளிக்கும் சம்பவங்கள் தொடர்வது கவலை அளிக்கிறது. இது போன்ற வன்மையான போராட்ட முறைகளை அவர்கள் பின்பற்றக் கூடாது. தீக்குளிப்புப் போன்ற துயரச் சம்பவங்களுக்கு சீன அரசின் அடக்குமுறைக் கொள்கைகளே காரணம். 2011ஆம் ஆண்டு மார்ச் முதல் இதுவரை திபெத்தில் 46 தீக்குளிப்புச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. எனது அரசு, பணியாளர் சீர்திருத்தம், கொள்கை ஆராய்ச்சி, மனித ஆற்றலைத் திரட்டுவது, அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது உள்ளிட்ட துறைகளில் பணியாற்றியுள்ளது என்று லோப்சாங் சங்கே கூறினார்.

## அலெப்போவுக்குள் நுழைந்தது இராணுவம்

போராட்டக்காரர்கள் வசமுள்ள அலெப்போ நகரத்துக்குள் சிரிய அரசு இராணுவ டாங்கிகள் நேற்று முன்தினம் நுழைந்தன. அதைத் தொடர்ந்து புதிய தாக்குதல்கள் அங்கு உருவாகியுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 13 பேர் உயிரிழந்தனர். இதனை சுதந்திர சிரியா இராணுவம் அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் இராணுவம் கவச வாகனங்களுடன் அல்-மலாப் தெரு வரை முன்னேறியுள்ளது. இப்போது சலாஹுதீன் மாவட்டம் வரை போர் பரவியுள்ளது என்று ஜனாதிபதிக்கு எதிரான படையின் தளபதி வாசல் அயூப் தெரிவித்தார்.

அலெப்போ நகரின் வட மேற்கே பல்வேறு மாவட்டங்களில் ஜனாதிபதியின் இராணுவம் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தாக்குதலில் நேற்று முன்தினம் அதிகாலை 12 பேர் உயிரிழந்தனர்.

## 20 தீவிரவாதிகள் சாவு; பதிலடி கொடுத்தது எகிப்து

எகிப்தின் சினாய் பிராந்தியத்தில் தீவிரவாதிகளின் வாகனங்கள் மீது எகிப்திய இராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என எகிப்திய அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய எல்லையிலுள்ள இந்தப் பகுதியில் கடந்த ஞாயிறன்று எகிப்திய எல்லைக்காவல் இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி 16 பேரைக் கொன்றதுடன் இரு கவச வாகனங்களையும் கடத்திக்கொண்டு இஸ்ரேலிய எல்லைக்குள் தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

பின்னர், இவற்றில் ஒரு வாகனம் தானாக வெடிப்பிற்குள்ளானது. மற்றொரு வாகனம் இஸ்ரேலிய இராணுவத்தினரால் அழிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் தேடி அழிக்கப்படுவார்கள் என எகிப்திய ஜனாதிபதி சூளுரைத்திருந்தார்.




அகவை அறுபதில் கடமையில் உயர்ந்து இளைப்பாறும்
கல்விச் சிறப்பாளனை வாழ்த்துகின்றோம்

உயர்திரு பூரணானந்தம் குகதாசன்

ஆரம்பக்கல்வி உதவிப்பணிப்பாளர்



கல்விக்கு ஒளி ஊட்டிய நல் ஆசானாய்
கடமை தவறாத ஊழியனாய்
எல்லோரின் மனத்துள்ளும் இனித்திருக்கும்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
உயர் திரு பூரணானந்தம் குகதாசன் அவர்கள்
நாற்பது வருடங்கள் கல்விப் பணியாற்றி
நம்மவரின் கற்றல் கற்பித்தல் வளம் சிறக்க
வல்லதொரு காரணராய் திகழ்ந்தவர்
அகவை அறுபது நிறைவில்
அவர் ஆற்றிய சேவை நலம் கண்டு
உளம் பூரித்து நிற்கின்றோம்
இன்று போல் என்றும் அவரும்
அவரது குடும்பத்தினரும் சீரோடும் சிறப்போடும்
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/2191)(6.7.8) ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், யாழ்ப்பாணக் கல்வி வலயம்

வேலும் மயிலும் துணை

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம் (மட்டுப்படுத்தப்படாதது)
J/1791 - 18.09.1986

25 ஆவது வருட நிறைவு வெள்ளிவிழா நிகழ்வும் மலர் வெளியீடும் - 2012

இடம் : கூட்டுறவுச்சங்க மண்டப அரங்கு
காலம் : 11.08.2012 சனிக்கிழமை காலை 9.30 மணி
தலைவர் : திரு. க. தங்கராசா (சங்கத்தலைவர்)

பிரதம விருந்தினர்
திரு. வி.கே. அருந்தவநாதன் அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

நிகழ்ச்சி நிரல்:
- மங்கள விளக்கேற்றல் / மங்கள இசை
- கூட்டுறவு கொடியேற்றல் / சங்கக் கொடியேற்றல்
- இறைவணக்கம் / தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை / ஆசியுரை
- தலைவர் உரை / விருந்தினர்உரை
- சிறப்புரை - திரு. வி.பி. சிவநாதன் அவர்கள்
- மலர் வெளியீடு / வெளியீட்டுரை / ஏற்புரை
- பிரதம விருந்தினர் உரை
- சமூக சேவையாளர் கௌரவிப்பு
- மூத்தோர் கௌரவிப்பு
- பரிசில் வழங்கல்
- பட்டி மன்றம்
- நன்றியுரை

(சி/2183)(6.7.8)

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
குலேன் களஞ்சியம், சதாவதானி கதிரை வேற்பிள்ளை வீதி, தம்பசெட்டி.
சக்தி கேபிள் T.V. கல்லூரி வீதி, பருத்தித்துறை.

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(18)

எந்த ஓர் இலக்கை அடைவதற்கும் இதுதான் வழி என்று எவரும் நிர்ணயித்துவிட முடியாது. ஒவ்வொருவருக்கும் வெற்றிப் பாதை வெவ்வேறாக இருக்கலாம். நமது சரியான பாதை எது என்று கண்டறிவதுதான் முக்கியம்.

சில சமயம் நமக்கும் தெரியாமல் நாம் தவறான பாதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு விடலாம். நீண்ட தூரம் பயணம் செய்த பிறகும் நாம் சேர வேண்டிய இலக்கு நம்முடைய கண்ணுக்குத் தெரியவில்லை என்றால், தேர்ந்தெடுத்த பாதை தவறானது என்றுதானே அர்த்தம்?

தவறான பாதையைத் தேர்ந்தெடுத்தவன் இலக்கை அடைவதில் தோற்றுவிட்டதாகச் சொல்வது எப்படி நியாயமாகும்?

அதனால்தான் முயற்சிகள் வெற்றி பெறாத போது, அதற்குத் தோல்வி என்று பெயர் சூட்டி விடாமல், வெற்றி கிடைக்காமல் போனதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டும்.

அவ்வாறு ஆராயும் போது சரியான பாதை எது என்று நமக்குத் தெரிந்துவிடும். அந்தப் பாதையில் பயணம் செய்தால், இலக்கைச் சென்றடைந்து வெற்றி பெற்று விடலாம்.

இந்த வழியில் சிந்தித்தால், நாம் முன்னர் தோல்வி என்று கருதியதுகூட உண்மையில் வெற்றிப் பாதையில் நாம் சந்திக்க வேண்டிய ஒரு நிலை என்பது தெளிவாகும்.

தோல்விகள் என்பது வெறும் கற்பனையே. முயற்சிகளை இடையில் நிறுத்திக் கொள்ளும் போது அது தோல்வியாகி விடாது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், வெற்றியை நோக்கிப் புறப்படும் நாம் இடையில் தளர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டு, அதையே தோல்வி என்று கற்பனை செய்து கொள்ளுகிறோம். இன்னும் சிலர் அதையே உறுதிப்படுத்திக் கொள்வதும் உண்டு.

நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் நமக்கு ஏற்படுகின்ற களைப்பு தோல்வியாகி விடாது. வேண்டுமானால் இளைப்பாறிக் கொள்ளுங்கள். எக் காரணம் கொண்டும் பயணத்தை மட்டும் நிறுத்தி விடாதீர்கள்.

இன்னொன்றையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் ஐந்து ஆறு இடங்களில் உங்களுடைய வியாபார அமைப்புக்களையோ, அல்லது தொழில் நிறுவனங்களையோ ஏற்படுத்த விரும்புவதாக வைத்துக் கொள்வோம். ஐந்து இடங்களிலும் ஏற்படுத்த முடியாமல் போய் மூன்று இடங்களில் மட்டும் தான் ஏற்படுத்த முடிவதாக வைத்துக் கொள்வோம். இது வெற்றியா? தோல்வியா? நான் தோல்வி என்று சொல்ல மாட்டேன். முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

அதாவது, தோல்வி என்று நாம் சொல்வது கூட சில சமயங்களில் முழுமையான வெற்றி பெறாத நிலையைக் குறிப்பதாகிறது. பலரும் தங்களுடைய முயற்சியின் சில கட்டங்களைத் தோல்வி என்று வர்ணிக்கும் பழக்கத்திற்கு ஆளாகி விடுகின்றார்கள்.

நெப்போலியன் சொன்னான் 'முடியாது' என்கிற வார்த்தை என்னுடைய அகராதியில் இல்லை என்று. தோல்வி என்கிற வார்த்தை நெப்போலியனின் அகராதியில் இருக்க வழி இல்லை. ஆனால் வாட்டர் லூ சண்டையில் நெப்போலியன் தோற்றுப் போய், எஞ்சிய வாழ் நாள்களை செயிண்ட் ஹெலினா தீவில் கழித்தாரே, அது தோல்வியில்லையா என்று நீங்கள் கேட்கலாம்.

வாட்டர் லூ சண்டை மட்டும் நெப்போலியனின் முழு வாழ்க்கையாகி விடாது. சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த நெப்போலியன், படையில் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து, இராணுவத் தளபதியாகி, பின்னர் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியானது வெற்றிகளின் அணிவகுப்பு என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

வாட்டர் லூ சண்டையில் நெப்போலியன் வெற்றி பெறாமல் போனதும், பின்னர் ஒரு தீவில் தனியாக வசிக்க நேர்ந்ததும் உண்மையே. நெப்போலியனின்

வாழ்க்கை என்று பார்த்தால் அது வெற்றிபெற்ற வாழ்க்கை என்பதில் சந்தேகம் இல்லை. சிறு வயதில் நெப்போலியன் எதை இலட்சியமாகக் கொண்டிருந்தானோ அதை அடைவதில் முழு வெற்றி பெற்றான். ஆனால் அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய விபத்தைச் சந்தித்தான். அது கூட அவனுடைய வெற்றி வாழ்க்கையின் ஒரு மகத்தான அத்தியாயம் தான்.

நெப்போலியன் சக்கரவர்த்தியாக இருந்த காலத்தில் அவன் வருகின்ற பாதையில் எல்லோரும் அவனுக்கு வழிவிட்டு விலகிவிடுவார்கள். செயிண்ட் ஹெலினா தீவில் அவன் கைதியாக இருந்த போது ஒரு நாள் மாலை வயல் வெளிகளில் தன்னுடைய காவலாளியோடு உலாவச் சென்றான்.

எதிரிலே குடியானப் பெண்ணொருத்தி வந்து கொண்டிருந்தாள். நெப்போலியனுக்கு வழி விடாமல் அவள் வருவதைப் பார்த்த காவலாளி ''ஏய் பெண்ணே, நெப்போலியன் வருவது உனக்குத் தெரியவில்லையா? வழிவிடு!'' என்றான்.

உடனே நெப்போலியன் காவலாளியைத் தடுத்து நிறுத்தி ''சக்கரவர்த்தி நெப்போலியனுக்கு மற்றவர்கள் வழிவிட வேண்டும் என்பது சரிதான். இப்போது நான் இந்தப் பெண்ணைப் போலவே ஒரு சாதாரண மனிதன். அவள் எனக்கு வழிவிட வேண்டுமென எதிர்பார்ப்பது என்ன நியாயம்?'' எனக் கேட்டுவிட்டு, அந்தப் பெண்ணுக்கு வழிவிட்டு விலகிச் சென்றான்.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# சிறுகதை, கவிதையில் நாட்டமில்லை தொலைக்காட்சியிலேயே ஆர்வம்

## இந்த நிலை மாறவேண்டும் என்கிறார் எழுத்தாளர் சிற்பி

உமாபதி சர்மாவின் சிறுகதைகள் மக்களை ஒருவகையில் விழிப் படையச் செய்யும்

**ஒரு கலைஞன் தன் மனதில் சொல்லி அடக்க முடியாத நிலையில், தன்னாலே இனி மேலும் பொறுக்கமுடியாது மனதில் வைத்திருக்க முடியாது என்பதை துல்லியமாக எடுத்து விளக்குகிறார் நூலாசிரியர்.**

பாரதியார் தனது கவிதை திறமையால், மக்களை விழித்தெழச் செய்தார். கவிஞர் கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்துமதம் எனும் நூலை எழுதி ஆன்மீகத்தை மக்கள் மத்தியில் பரப்பினார். எமது மக்களுக்கு தற்போது சிறுகதைகளோ அல்லது பண்டைக்கால சரித்திரக் கதைகளோ மற்றும் ஆழ்ந்த கருத்துக்களை உடைய கவிதைகளோ தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தே காலத்தை வீணடித்து வருகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். இவ்வாறு கூறுகிறார் மூத்த எழுத்தாளர் சிற்பி சி. சிவசரவணபவன்.

சித்தன்கேணி, சபா. உமாபதி சர்மா எழுதிய ''சொல்லத்துடிக்கிற மனசு '' சிறுகதைதொகுதி நூலின் வெளியீட்டு விழா கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய போதே சிவசரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நல்லதோர் தலைப்பு ''சொல்லத் துடிக்கிற மனசு '' ஏதோ காதல் சம்பந்தப்பட்ட சிறுகதைகள் என நினைத்து நூலை வாசித்தால் அவ்வாறான எதுவும் நூலில் இல்லை. ஒரு கலைஞன் தன் மனதில் சொல்லி அடக்கமுடியாத நிலையில், தன்னாலே இனி மேலும் பொறுக்கமுடியாது மனதில் வைத்திருக்க முடியாது என்பதை துல்லியமாக எடுத்து விளக்குகிறார் நூலாசிரியர். இந்தத் தலைப்பின் மூலம் தமிழ்நாட்டின் மூத்த எழுத்தாளர் கல்கி, சிறுகதைகள் என்றால் சிறியதாக இருக்கவேண்டும். அதே நேரம் கருத்தாழமிக்கதாக இருக்க வேண்டுமென சிறுகதைகளுக்கு வியாக்கியானம் கொடுத்தார். அதே போல் இந்த நூலில் உள்ள அனைத்து சிறுகதைகளும் ஏதோ ஒரு வகையில் மக்களை விழிப் புணர்வடையச் செய்யக் கூடியவையே என்றார். (எ- 29)



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 140 ஆவது ஆண்டுவிழாவில் அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களாகவும் ஆசிரியர்களாகவும் 35 ஆண்டுகளாக அரும் சேவையாற்றிய ஆ.சபாரத்தினம், செ.கதிர்காமத்தம்பி, வண.பிதா.ஜேசுதாசன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி யாழ்.ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகத்தால் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்டவர்களுடன் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகமும் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண.பிதா.சிங்கராஜரும். (அ)

# நியமனம்

தென்மராட்சி, ஓக.10

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் விளையாட்டு உத்தியோகத்தராக எஸ்.அனுரகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் உயர் கல்வி பயிற்சி நெறியை தொடர்வதற்காக சென்றுள்ளதையடுத்தே கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் வாரத்தில் இரு தினங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

* * *

குருநகர், ஓக.10

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பல் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பல் வைத்திய உத்தியோகத்தராக கடமையாற்றிய டாக்டர் திருமதி சயந்தி நந்தகுமாரே நியமிக்கப்பட்டுள்ளார். (எ-51)

# இலக்கியத்திறன் பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சை முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவரம் வருமாறு:-

**ஊக்கப்பரிசில் பெறுவோர்**

மை.மதுபாலன், இ.பவித்திரன், செ.தமிழினி, ச.திவ்யா, இ.யுவானி, சோ.திகழினி, பா.றயீபா, த.டிதுசன், ச.துவச்டா- (மத்திய கல்லூரி), பா.பவித்திரா, த. நிதர்சன்-(புனித பற்றிமா றோ.க.த.க.பா), இ.சங்கவி, கோ. பவனுயா, சி. அனோயா-(உருத்திரபுரம் உ.நி.ப), ச.மதுமினா, இ. கயல்விழி, ம. டோசிகா, பா.தனுசிகா, சி. துசாசிகா-(திருவையாறு உ.நி.ப), உ.சஞ்சிகா, ச.மிசைவாணி -கிளி.இந்துக் கல்லூரி, பா. துச்டிகன்- பரந்தன் இந்து உ.நி.ப, செ.புவன்யா-சிவநகர் அ.த.க பாடசாலை, சி.தர்சா, சி.தர்சி, வி.மிதுசியா, பு.மிகானா, உ.சாரதா-(புனித திரேசா பெண்கள் கல்லூரி), வி.துலாஞ்சவி, நி.துசாந்தினி, வே.பிரணவி -(பிரமந்தனாறு உ.நி.ப)

**பிரிவு ''உ''**

1ஆம் இடம்-பா.சிறீதரன்-(திருவையாறு உ.நி. ப), 2 ஆம் இடம் - தி.யேகன்- (உருத்திரபுரம் உ.நி.ப), 3ஆம் இடம்-கே.அபியுகா-(திருவையாறு உ.நி.ப)

**ஊக்கப்பரிசில் பெறுவோர்**

ப.சரலன், கி.பிரியந்தன், பூ.பிரியநிலா, ஜெ.மயூரிகா, சி.துசாலிகா-(திருவையாறு உ.நி.ப), யெ.யாழினி, ப.சாம்பவி, ம.எட்வேட்கெயின்-(வட்டக்கச்சி உ.நி.ப), ச.பிரவீணா-(புனித பற்றிமா றோ.க.த.க.ப), ஞோ.லோயன், தக்சிவதனா-(உருத்திரபுரம் உ.நி.ப), நி.சுபானு-(பரந்தன் இந்து உ.நி.ப), தா.அபிசாளினி-(பிரமந்தனாறு உ.நி.ப), சி.பிரவிந்தனி, இ.கோபிகா, வ.அபிராமி, க. கீர்த்தனா, பு.மிகானா, கு.சாரதா-(புனித திரேசா பெண்கள் கல்லூரி) (எ)

# கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.10

சிவஸ்ரீ.த.ஞானபண்டிதக் குருக்களின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள கட்டுரைப் போட்டிக்கு சங்கானை கோட்ட பாடசாலை மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் தரம் 6 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றலாம். ஆர்வமுடைய மாணவர்கள் ''சமயக் கல்வியின் அவசியம்'', ''விரதங்களும் விழாக்களும்'', ''இசைவழி இறை இன்பம்'', ''மருத்துவமும் எமது சமயமும்'' எனும் தலைப்பில் கட்டுரைகளை எழுதி பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள், சிவன்கோயில், சித்தன்கேணி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(எ-14)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா ஆலய முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 0212262395
சாவகச்சேரி கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சுதா போன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'சீ.... கனாலன' – கண்டி வீதி, சீராலை தெற்கு: 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொதகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எல்லை மீறும் வணிகம்

ஈழத் தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டை பிரதிபலிக்கும் மையங்களுள் நல்லூர் முதன்மையானது. சமயம் சார் கலாசார மரபு ஒன்றின் தொடர்ச்சியைப் பேணுவதில் அந்தத் தலத்திற்கு என்றுமே மாறாத மகிமையுண்டு. இந்த புனித மையம் பற்றிய வரலாற்றுக் கதையாடல் தெளிவற்ற பக்கங்களைக் கொண்டிருந்தாலும், வட இலங்கையில் தமிழர் பண்பாடு சுயம்பெற்ற தருணத்தில் காத்திரமான பங்களிப்பை இந்தத் தலம் வழங்கியிருந்தது. ஈழத்தில் முக்கிய அறிஞர்கள், பேரலையாய் அடித்த காலனிய கலாசார சிதைப்பை நல்லூரின் பின்புலத்தில் நின்றே எதிர்த்தனர். அதனாலேயே தனித் தமிழ் பண்பாட்டில் நல்லூருக்கு என்று தனிச்சிறப்பு ஒதுக்கப்படுகிறது.

இத்தகைய தமிழ் பண்பாட்டோடு இரண்டறக் கலந்து நிற்கும் நல்லூர் இந்த வேளையில் கோலாகலம் பெற்றிருக்கிறது. ஆங்காங்கே தமிழ் பண்பாட்டைத் தாங்கிய மனிதர்களை எதிர்கொள்ள நேரிடினும், தொடர்ச்சியான தூரத்து பண்பாட்டு வாசனைகளும் வரத்தான் செய்கின்றன. அவை தமிழரின் புனித மையமான நல்லூருக்கு புதிய ஒரு வணிகவாடையை வழங்கியிருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் கச்சான் கடைகளும், ஐஸ்கிறீம் கடைகளும், விளையாட்டுப் பொருள் கடைகளும் தமிழர்களுக்கு மட்டுமே உரித்தானதாய் இருந்தன. ஆனால் இப்போது அங்கு அதனைக் காணமுடியாது. ஆலயக் கலாசார சூழல் எவ்வாறு மாற்றம் பெற்றிருக்கின்றதோ அவ்வாறானதொரு மாற்றத்தை வணிக ரீதியில் நல்லூர் பெற்றிருக்கின்றது.

போர் ஓய்வின் பின்னர் வடக்கின் மிகமுக்கிய சுற்றுலா மையமாக நல்லூர் கருத்தில் எடுக்கப்பட்டது. தெற்கில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் கதிர்காமத்திற்கு போகும் நினைப்போடு நல்லூருக்கும் வந்தனர். அவர்களுக்கு நல்லூரானும் தம் சொந்தக் கடவுளாகவே காட்சியளித்தார். அந்த உரிமையால்தான் அவர்கள் தமது கலாசார நடைமுறைகளோடும் நல்லூரை சுற்றினர்.

இதேபோல தென்னாசியாவின் ஒரு மூலையில் இருக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழினம் பற்றிய தேடலை மேற்கொள்ளும் வெள்ளைக்காரர்கள், தமிழ் பண்பாட்டை உணர்வுபூர்வமாக அறிய நல்லூரைத்தான் தேர்ந்தெடுத்தனர்.

இவ்வாறு நல்லூர் நோக்கி விரிந்த சுற்றுலா தரிசனமானது, அந்தத் தொழிலின் அடுத்த கட்டத்தையும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கற்றுக்கொடுத்தது. லட்சக் கணக்கான பக்தர்கள் திரளும் ஒரு சூழலை பிரமாண்டமான வணிக மையமாக்கத் தவறிய இந்தப் பிராந்திய மக்களை நோக்கி அவர்கள் ஏளனம் செய்தனர். தமது வணிக புத்தியை நல்லூரின் சூழலில் விரிவுபடுத்த முயற்சித்தனர். வடக்கு இப்போது திறந்த வீடாக இருப்பதனால் அவர்கள் இலகுவாகவே தமது வணிகக் கதவுகளை நல்லூரில் திறந்தனர்.

அதன் விளைவாக எம்மவர் கடைகள் அருகின. கச்சான் கடைகள் கூட தெற்கில் இருந்து பயணப்பட்டு நல்லூரில் தம் வணிக மடையைத் திறந்தன. அனைத்துமே வணிகமயப்பட்டுப் போன இன்றைய சூழலில், தமிழரின் பண்பாட்டு எச்சமான நல்லூரும் மூழ்கிப் போனமை கவனத்திற்கு உரிய ஒன்று. எதுவும் அளவோடு இருக்கும் வரைக்கும் மட்டிலுமே அதன் புனிதத் தன்மையை தக்க வைத்துக்கொள்ள முடியும். அளவுக்கு மீறிய வணிகமயம் நம்மிடமிருக்கும் தலைமைத்துவ பண்பாட்டு மையத்தையும் நஞ்சாக்கி விடாமல் காப்பது அனைவரினதும் கடமையாகும். என்றுமில்லாத கலாசார இழப்புக்கும் சீரழிவுக்கும் உள்ளாகியிருக்கும் தமிழர்கள் இதனை முன் வந்து செய்ய வேண்டிய காலம் இதுவாகும்.

# வடக்குக்கு வரும் ஜே.வி.பி.

உசிலமணி

அரசியலில் தமக்கான ஆதரவுத் தளம் தென்னிலங்கையில் குறைவடைவதைத் தொடர்ந்து வட பகுதிக்குத் தனது அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றது. 2005 ஆம் ஆண்டு இலங்கை அரசில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்தும், மஹிந்தவினால் மக்கள் விடுதலை முன்னணி இரண்டாகப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் அந்தக் கட்சியின் தென்னிலங்கை ஆதரவுத் தளம் வீழ்ச்சியை எதிர்நோக்கியிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணி இனவாதக் கருத்துக்களால் தென்பகுதியில் தனது செல்வாக்கை சரியவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தது. இருப்பினும் தொடர்ச்சியான பிளவுகளும், மஹிந்தவின் தந்திரோபாய அரசியல் நகர்வுகளும் மக்கள் விடுதலை முன்னணியின் குரலை தென்பகுதியில் பெரிதாக எடுத்துக் காட்டவில்லை. இதனால் அந்தக் கட்சி 2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்தது. தென்னிலங்கையில், ஏன் இலங்கையில் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக உருவெடுத்து வந்த மக்கள் விடுதலை முன்னணி, 2010 ஆம் ஆண்டுத் தேர்தலுடன் தனது இருப்பே கேள்விக்குறியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதன் பின்னரே அந்தக் கட்சி தனது வடக்கிற்கான படையெடுப்பை மேற்கொண்டது. எளிதில் எதையும் மறந்து விடும் தமிழ் மக்களை, இலகுவில் தமது அனுதாப உணர்வலைகளால் கைப்பற்றலாம் என்ற எண்ணத்துடன் களமிறங்கியது.

இலகுவாகத் தமிழ் மக்களின் உணர்வுகளை ஈர்க்கக் கூடிய காணாமல் போனோர் என்ற பதத்தின் பின்னணியில் தனது அரசியல் விரிப்புக்களைத் தொடங்கியது. மக்கள் விடுதலை முன்னணி எதிர்பார்த்ததை விட அதிகளவிலான ஆதரவை இராணுவப் புலனாய்வு பிரிவினர் திரட்டிக் கொடுத்தனர். 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொள்ளப்படவிருந்த ஆர்பாட்டத்திற்கு முன்னதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி இராணுவப் புலனாய்வாளர்களால் தாக்கப்பட்டார். இதுவும் அவர்களது வடக்கின் மீதான அரசியல் வீச்சுக்கு ஆதரவைத் தேடிக் கொடுத்தது.

இதன் பின்னர் கடந்த ஆண்டு இறுதியில் மீண்டும் அதே காணாமல் போனோர் கோஷத்துடன் மக்கள் விடுதலை முன்னணி தனது அரசியலை மீண்டும் தொடக்கியது. இதன் போது மக்கள் விடுதலை முன்னணியின் இரு உறுப்பினர்கள் காணமல் போயினர். இவ்வாறு வருடத்துக்கு ஒரு தடவையாவது தனது அரசியல் இருப்பை வடக்கில் நிலை நிறுத்த சிங்களப் பேரினவாதம் பேசிய மக்கள் விடுதலை முன்னணி முயன்று வருகின்றது.

இந்த வகையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு, - வடமாகாணத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் வருகை தந்தது. இந்த முறை தனியே தமிழ் மக்களுக்கான போராட்டமாக அல்லாமல் நாட்டில் தேசிய பிரச்சினைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. விலைவாசி உயர்வு, இசற் புள்ளிப் பிரச்சினை போன்றவற்றை முன்வைத்து இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. தென்பகுதியின் தெய்வேந்திர முனையிலிருந்து ஆரம்பித்த போரட்டம், பருத்தித்துறை முனையுடன் நிறைவுக்கு வந்தது. யாழ். நகரின் மையப் பகுதியில் தமது பேரணியை நடத்திய மக்கள் விடுதலை முன்னணி அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியிருந்தது. அத்துடன் இந்த மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தது.

> தமிழர்கள் உரிமை கேட்டு இந்த நாட்டில் போராடினால் அது தவறு. அதே சிங்கள மக்கள் போராடினால் அது தவறில்லை. தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தமது வாழ்வுரிமையைக் கேட்டு நடத்தும் போராட்டம் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சிக்கு வித்திடும். ஓர் அரசை விரட்ட மேற்கொள்ளப்படும் போராட்டம் எந்தப் பிரச்சினையையும் உருவாக்காது.
>
> வீதியை மறித்து யாழ். நகரின் மையத்தில் நின்று கொண்டு ஒரு மணிநேரப் போக்குவரத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் ஸ்தம்பிக்கச் செய்திருந்தனர். மக்கள் விடுதலை முன்னணிக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டு யாழ். நகரப் பொலிஸ் அத்தியட்சகர் சமன்சிகேரா கட்டளை வழங்கிக் கொண்டிருந்தார். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவிடம் விரைவாகப் பேசி முடிக்குமாறு பொலிஸார் கெஞ்சினர். ஒட்டுமொத்தத்தில் மக்கள் விடுதலை முன்னணி பொலிஸாரின் ஆதரவுடன் யாழ். நகரில் தனது போராட்டத்தை முன்னெடுத்தது.
>
> இதேபோன்றதொரு மக்கள் விடுதலை முன்னணி, தனது கட்சியின் பெயரில் தமிழ்த் தேசிய என்ற பதத்தைச் சேர்த்திருந்ததால், முன்னொரு தடவை அந்தக் கட்சியின் போராட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.
>
> இதுதானா எல்லோருக்கும் ஒரே நீதி வழங்குகின்ற ஜனநாயக நாடு?

கடந்த சில மாதங்களுக்கு முன்பு யாழ். நகரில் தமிழ் தேசிய மக்கள் விடுதலை முன்னணியால் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் நிலங்கள் இராணுவத்தால் பறிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அந்த மண்ணில் தங்களை மீளக்குடியமர்த்துமாறும் கோரி ஆர்பாட்டம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், ஆர்ப்பாட்டம் காரணமாக, மீண்டும் ஆயுதக் கலாசாரம் தோற்றுவிக்கப்படும் என்று பொலிஸார் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியமையால், குறித்த ஆர்ப்பாட்டம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இடைநிறுத்தப்பட்டது.

யாழ். நகரின் மையத்தில் தமது அடிப்படை உரிமையான வாழ்வுரிமையை ஜனநாய வழியில் கேட்க முயன்றவர்களுக்கு பொலிஸார் முட்டுக் கட்டை போட்டனர். அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் வேறு வழியில்லாமல் கலைந்து சென்றனர்.

இதன் பின்னர் தெல்லிப்பழையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் அமைதியான வழியில் ஜனநாயக ரீதியில் (இந்த நாட்டில் இல்லாததொன்று) தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். தமது சொந்த நிலத்தை - தாங்கள் பரம்பரையாக வாழ்ந்த நிலத்தை - தாங்கள் ஆண்ட நிலத்தை - தமக்கே தருமாறு கேட்டனர். அதற்குப் பரிசாகக் கழிவு ஒயில் வீசப்பட்டது. இன்று வரையில் அந்தக் குற்றவாளிகள் பொலிஸாரின் கண்ணில் அகப்படவில்லை.

குறித்த ஆர்ப்பாட்டத்தை அடக்கும் வகையில் பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகள் சகிதம் தயாரக இருந்தனர். ஆர்பாட்டக்காரர்களை வீதிக்கு ஏறவிடாது தடுத்தனர். வீதிப் போக்குவரத்துப் பாதிக்கப்படும் என்று தெரிவித்து மக்களைத் தடுத்தனர். ஆனாலும் பொலிஸார் தமது வாகனத்தை வீதியின் குறுக்கே நிறுத்தியிருந்தனர். அதனால் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படாதாம்.

1971 ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணியால் அப்போதைய இலங்கை அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. சோஷலிச இலங்கையை நோக்கி என்னும் தொனிப் பொருளுக்கு அமைவாக அந்தப் புரட்சி முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கிளர்ச்சியின் போது ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் பலியாகினர். இறுதியில் இலங்கை அரசு பல்வேறு நாடுகளின் துணையுடன் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியை அடக்கியது.

இதன் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் பொது மன்னிப்பு என்ற இலங்கை அரசின் ஒற்றைச் சொல்லில் 1977 ஆம் ஆண்டு வெளியில் வந்தனர்.

1980 ஆம் ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இலங்கை அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழர்கள் தமது நிலத்தில் சுகந்திரமாக வாழ வேண்டும் என்ற நோக்குடன் அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தப் போராட்டமும் இலங்கை அரசினால் பல்வேறு நாடுகளின் உதவியுடன் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இதன் போதும் பல்லாயிரக்கணக்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்தனர். பலர் சிறைச்சாலைகளுக்குள் அனுப்பப்பட்டனர். மேலும் விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆயிரக்கணக்கானவர்கள் இன்றும் சிறைக்குள் வாடுகின்றனர். விடுதலை என்பது அவர்களுக்கு வெகு தூரத்தில் நின்று கொண்டிருக்கின்றது.

# மாணவர்களைப் பழிவாங்கும் இசற் புள்ளிகள்

கல்பனா

நாட்டில் நிலவும் பல் வேறுபட்ட பிரச்சினைகளுக்குநடுவில் இன்று புதிதாக ஒரு அத்தியாயம் இணைந்துள்ளது. இலங்கையில் நீண்டகாலம் வழக்கிலிருந்த கொடையாகிய இலவசக்கல்வி முறைமைக்கும் சோதனை ஏற்பட்டுள்ளது. அதனைக் கற்று பட்டப்படிப்பை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கும் அடி மேல்அடி விழுந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில், 2011 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் இசற் புள்ளிச் சர்ச்சை முடி வில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த மாணவர்களின் போராட்டங்களுக்கு அடிபணிந்த அரசு, கடந்த22ஆம்திகதிமீள்திருத்தப்பட்ட புதிய இசற் புள்ளிப் பெறுபேற்றை வெளியிட்டது. அந்தப் பெறு பேறு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பேரிடியாய் அமைந்தது. இதில் இரண்டாவது, மூன்றாவது தடவையாகப் பழைய பாடத்திட்டத்தில்தோற்றிய மாணவர்களின் மாவட்ட மற்றும் தேசிய மட்ட நிலைகள் நம்ப முடியாத அளவுக்குபின்னடைவைக் கண்டிருந்தன.


இசற் புள்ளிப் பெறுபேற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எந்தத் தீர்வுகளை வழங்குவது என சிந்தித்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, ஓர் நவீனதிட்டத்தைக் கண்டுபிடித்துள்ளார். அதாவது புதிய பல்கலைக் கழகத்தை நிறுவி அதில் இசற் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று வேடிக்கை யான, நகைச்சுவையான பதிலை மாணவர்களுக்கு வழங்கியுள்ளார்.

அதாவது "மூஞ்சூறு தான் போக வழியைக் காணவில்லை.. விளக்குமாயும் எடுத்துச் செல்லும்" கதையைப்போன்று கோமாளித்தனமாக அமைந்துள்ளது எஸ்.பியின் கருத்து. தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் பிரச்சினைகளைக் கூட தீர்க்க முடியாது திண்டாடும் அரசு, எப்படி புதிய பல்கலைக் கழகத்தை உருவாக்கி மாணவர்களுக்கு உயர்கல்வியை வழங்கப் போகின்றது என்பதுதான் வேடிக்கை.

புதிய இசற் புள்ளி வெளியிடப்பட்ட பின்னர் மாணவர்களிடமிருந்து ஆயிரத்து 750 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எவ்வாறான பதிலை வழங்குவது எனசமயோசிதமாக ஆராய்ந்த மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் உயர்நீதி மன்றத்தில் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு ஆலோசனையை வழங்கியுள்ளது.

இசற் புள்ளிப் பெறு பேற்றால் அதிக மன உளைச்சலை எதிர் கொண்ட மாணவர்களில் கொழும்பு, களுத்துறை, கம்பஹா போன்ற இடங்களைச் சேர்ந்த 33 பேர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திகள் பெற்றும் பல்கலைக் கழகம் செல்ல அனுமதி கிடைக்காவிட்டால் கல்வியில் உள்ள நியாயத்தை எவ்வாறு விளங்கிக் கொள்வது என மாணவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மாத்தறையில், தெரேசா திஸனி




என்ற மாணவி மூன்று 'ஏ' சித்தி பெற்று மாவட்ட நிலையில் 232 ஆவது இடத்தைப் பிடித்திருந்தார். ஆனால் தற்போதைய புதிய இசற் புள்ளி வெளியான பின் அவரது மாவட்ட நிலை 523 ஆக மாறியுள்ளது. இதனால் அவர் பல்கலைக் கழக அனுமதியைப் பெறமுடியாது. இதுதான் மஹிந்த அரசு வழங்கும் இலவசக் கல்வியா? என எண்ணத் தோன்றுகிறது.

இந்த முறை நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சைக்கு சில நாள்களுக்கு முன்னதாக, இசற் புள்ளியில் திருப்தி இல்லாத மாணவர்கள் இந்த முறை பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம், என்று கல்வி அமைச்சு திடீர் அறிவிப்பு விடுத்திருந்தமையானது, பரீட்சைக்குத் தோற்றிய, இப்போது தோற்றிக் கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு உள ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற போரின் வடுக்களையும் தாங்கி "கல்வியே தமது சொத்து" என நினைத்துக் கற்ற மாணவர்களுக்கு அரசு இசற் புள்ளியில் குளறுபடிகளைச் செய்து அவர்களை துயரத்தில் மூழ்கடித்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளை மீளக் கணிப்பது என்பது கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சுக்கு ஒரு சாதாரண விடயமாகத் தோன்றலாம். ஆனால் கடந்த வருடம் பரீட்சை எழுதிய இரண்டு லட்சத்து 43 ஆயிரம் மாணவர்களுக்கு அது அவர்களுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற விடயமாகக் காணப்படுகின்றது. இதனால் பொறுப்புக்கூறும் அரசு என்ற வகையில் அந்த மாணவர்களுக்குப் பதில் கூறியே ஆகவேண்டும்.

இசற் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாது, தேசிய வேலைத்திட்டங்களைத் தயாரிப்பதிலேயே அதிக அக்கறை காட்டிவருகிறது. கல்வி, உயர்கல்வி அமைச்சின் அசமந்தப் போக்குகளைக் கண்டித்து மாணவர்களும், பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரும் பரவலாக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆனால் அதற்கு எந்தத் தீர்வும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் வழங்கப்படவில்லை. அதிகாரிகளால் உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட தயங்கப் போவதில்லை என்று மாணவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மாணவர்களின் கண்ணீருக்கும் தாக்கத்திற்கும் எதிர்கால வாழ்க்கைக்கும், அரசு என்ன விடை கூறப்போகிறது?

இசற் புள்ளி விவகாரம் தீர்வுக்கு வரும் வரை புதிதாகப் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கப் போவதில்லை என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. ஏற்கனவே பல்கலைக் கழக ஊழியர்களின் தொடர் போராட்டத்தினால் பல்கலைக் கழக மாணவர்கள் தமது கல்வியில் என்றுமில்லாத வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த புகுமுக மாணவர்கள் இன்னமும் முதல் அரையாண்டுப் பரீட்சையைக் கூட முடிக்காத நிலையில் நீண்ட ஓய்வில் இருக்கின்றனர். இந்த நிலையில் புதிதாகப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானவர்களுக்கான அனுமதி வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதமும், அவர்களை பல்கலைக் கழகத்துக்கு அனுமதிப் பதும் இப்போது முதலாம் அரையாண்டில் கல்விகற்கும் மாணவர்களின் கற்றலை வெகுவாகப் பாதிக்கும் என அந்த மாணவர்கள் அஞ்சுகின்றனர்.

இந்தநிலையில், இலங்கையில் உயர்கல்வி கற்பதானது இப்போது மிகுந்த துயரத்துக்குள்ளான விடயமாக மாறிவருகின்றது. கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விக்கும் இந்த அரசு முட்டுக்கட்டை போட்டு வருவது அனைத்துத் தரப்பினரையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

# வேதனை தரும் பரிசுகள்

விண்ணன்

**இந்த விடயம் பாராட்டப்பட வேண்டியதும், மெச்சப்பட வேண்டியதும் ஆகும். இதற்கு அடுத்த கட்டம் மன வேதனையையும் விமர் சனத்தையும் ஏற்படுத்தியதையும் கூட கூற வேண்டியதாகவே உள்ளது.**

விளையாட்டு வீர, வீராங்கனைகளிடையே மனச் சோர்வையும், விமர்சனங்களையும் உண்டாக்கும் நடவடிக்கைகளை விளையாட்டுடன் தொடர்புடைய அலுவலர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில், அண்மையில் நடந்த சம்பவம் பிரதேச வாதத்தைக் கூட உருவாக்கும் நிலமையைத் தோற்றுவித்துள்ளது.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் மற்றும் வலைப் பந்தாட்டப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளின் நிறைவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டதுடன் முதலாம் இடம் சம்பியனான அணிகளுக்கு ரீசேர்ட்டும், றக்சூட்டும் (Track Shood) வழங்கப்பட்டன.

வீரர்களுக்கு வழங்கப்பட்டதுடன் மட்டும் நின்று விடாது மாவட்ட விளையாட்டு அலுவலர், பயிற்றுவிப்பாளருக்கும் வழங்கப்பட்டது.

இந்த விடயம் பாராட்டப்பட வேண்டியதும், மெச்சப்பட வேண்டியதும் ஆகும். இதற்கு அடுத்த கட்டம் மன வேதனையையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியதையும் கூட கூற வேண்டியதாகவே உள்ளது.

வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட அணிக்குப் பொறுப்பெனக் கூறி மேலும் ஒருவருக்கு வழங்கப்பட்டது. இதனை அவதானித்த மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட ஆண்கள் அணி, தமது மாவட்ட அலுவலர், பயிற்றுவிப்பாளர், உதவிப் பயிற்றுவிப்பாளருக்கும் குறித்த பொருள்கள் வழங்கப்படும் என எதிர்பார்த்து அவற்றைப் பெறுவதற்கு சென்ற வேளையில் மூன்றாவது நபருக்குரியது வழங்கப்படவில்லை.

இவ்வாறு செய்யப்பட்ட செயல் உடனடியாகவே சர்ச்சையானதுடன் விமர்சனங்களுக்கும், பிரதேச வாதக் கதைகளுக்கும் வித்திட்டது.

யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றால் ஒரு செயல்பாடு, ஏனைய அணிகள் வெற்றி பெற்றால் மற்றொரு செயல்பாடு என்ற விமர்சனமும், முரண்பாடுகளும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவலர்கள் மற்றும் விளையாட்டுத் திணைக்கள செயலாளரின் முன்னிலையிலேயே ஏற்பட்டது.

இத்துடன் நின்று விடாது கடந்த ஆண்டு தமக்குக் கிடைக்க வேண்டிய பொருள்கள் கிடைக்கவில்லையென்ற முறைப்பாடும் முன்வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு வர்ண இரவு நிகழ்வில் பரிசு வாங்க வந்த வவுனியா மாவட்ட வீராங்கனை மேடையில் நீதி கேட்டதும், அதனால் விருந்தினர்கள் தலை குனிவுக்கு உள்ளாகியதும், நெருக்கடிக்குள் தள்ளப்பட்டதும் கூட இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

அதே போன்று, அன்றைய நிகழ்விலும் குறிப்பிட்ட பரிசளிப்பு நிகழ்வில் நீதி கேட்டதும், செயலாளர் கஷ்டத்துக்கு உள்ளாகியதும் கூட திட்டமிடல், செயல்பாடுகளில் ஏற்பட்ட தவறாகும்.

வெறுமனே வாய்வீச்சினால் இதனை தட்டிக் கழித்து விடலாம் என யாரும் கருதக் கூடாது. அதிகாரிகளைப் பொறுத்த வரையில் சிறிய விடயம், ஆனால் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்குத் தன்மானப் பிரச்சினையாகும்.

இதில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். வட மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் நடத்தப்பட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் நிறைவு பெற்று பரிசளிப்பு நிகழ்வும் கூட நிறைவு பெற்றுள்ளன.

இதே போன்று வட மாகாண ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகளும் கூட நிறைவு பெற்றுள்ளன.

ஆனாலும் கடந்த வாரம் இடம்பெற்ற உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட பரிசளிப்பு விழாவில் வைத்து ஆண்கள், பெண்கள் கூடைப் பந்தாட்ட அணிகள் அழைக்கப்பட்டு றக்சூட் மற்றும் ரீசேர்ட்டுக்கள் வழங் கப்பட்டுள்ளன.

ஏற்கனவே நிறைவடைந்த ஹொக்கி, எல்லே, கபடி, கிரிக்கெட் உட்படப் பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்ற அணிகளுக்கு இத்தகைய பரிசுகள் எவையும் தனிப்பட்ட முறையில் வழங்கப்படவில்லை.

எந்த ஒரு வீர, வீராங்கனையும் தமக்குக் கிடைக்க வேண்டிய பரிசுகள், சான்றிதழ்கள் உரிய மேடையில் வழங்கப்பட வேண்டும். கௌரவிக்கப்பட வேண்டும் என்றே விரும்புகின்றார்கள்.

உரிய அதிகாரிகள் இன்றும் தமக்குத் தாமே நினைவுப் பரிசில்கள் என்ற பெயரில் மாறி மாறி பெறும் போது, உண்மையான விளையாட்டு வீர, வீராங்கனைகள் தம்மைக் கௌரவப்படுத்தவில்லை, உரிய காலத்தில் கிடைக்கவில்லை என கொதித்து எழுவதிலும் நூறுவீதமான நியாயம் உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்திலேனும் விருந்தினர்களாக வருபவர்கள் நீதி கேட்டு நெருக்கடிகளுக்குள் செல்லாது, கௌரவமாகப் பரிசில்களைக் கொடுத்து விட்டுச் செல்வதற்கும், விளையாட்டு வீர, வீராங்கனைகள் மன நிறைவுடன் சமமாக பரிசில்களைப் பெறுவதற்கும் உரிய வழி வகைகளை செய்ய வேண்டியதும் திட்டமிட வேண்டியதும் உரிய திணைக்களங்களினதும் உயர் அதிகாரிகளினதும் கடமையும் பொறுப்புமாகும்.

நல்லூர் கந்தனின் 17ஆம் நாள் வீதியுலாக் காட்சி



கிருபா லேணர்ஸ்



(அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
இப்பொழுது பருத்தித்துறை 1 ஆம் கட்டைச் சந்தியில்
T.P : 021 4923201,
071 4546958, 077 7225292
தலைமைக்காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353
(சி/1948)(6-7-2)


## கார்த்திகை மைந்தனே களைந்திடுவாய் கர்மவினை!



நல்லைக் நகர் வீற்றிருந்து
நலங்காக்கும் நாயகனே
கல்மனதையும் கனிய வைக்கும்
கார்த்திகேயனே
பல்லுயிர்க்கும் பாங்காய்
வரம் அருள்பவனே
வல்லமை தந்திடுவாய்
வழமாய் வாழ்வதற்கே
தமிழ் என்ற சொல்லின்
தத்துவமே முருகா
தமிழ் மன்னர் ஆண்ட
இராசதானியில் உனை
தஞ்சம் என்றோரைத்
தக்க வைத்திடுவாய்
பஞ்சம் பகை பறந்தோட
வந்திடுவாய் வீதியுலா

தெல்லியூர்த் தேவி

## கார்த்திகை கந்தனைப் பணி மனமே



கார்த்திகைத் திங்கள்
கார்த்திகைத் திருநாள்
கந்தன் மகிழ்வுறும் அவதாரம்
கதியெனக் கதறிடும்
அடியவர்க்கெல்லாம்- கந்தன்
அருள்பொழிவதும்
இன்நாளே!
மங்கல நாத மந்திரம்
ஒலிக்கும் நல்லை
சண்முகன் புகழ்பாடி!
மாந்தர்களெல்லாம்
கடலெனத் திரண்டு
கந்தன் திருவடி
பணிந்திடும் திருநாளே
கார்த்திகைத் தீபம்
கவலையைப்
போக்கும் என்றும்
கார்த்திகைக் கந்தனைப்
பணிமனமே

தொல்புரத்தூர்
க.லோகேஸ்வரன்

## அலங்காரக் கந்தனே!




ஆனைமுகன் தம்பியே
ஆறுபடை வீடவனே
அலங்காரக் கந்தனே
அருணகிரியின் அற்புதனே
கெங்காதரன் புத்திரனே
கேடுகளை அறுப்பவனே
சிவபெருமானின் திருமகனே
தாருமையா திருவருள்

வி.ருத்திரன், நெடுந்தீவு–13



RG RG TRADERS
HONDA
HERO HONDA
No -291, STANLEY ROAD, JAFFNA
(C/1962)(2-6-7)

# அற்புதங்களால் அருளாட்சி செய்யும் இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்



ஞானி

உழுதுண்டு உயிர் ஓம்பிய ஒப்பிலாத்துறவி படிமத்தார் வேலரிடம் தன் பசி தீர்க்க மதிய நேரம் வந்த வெள்ளைத்துகில் உடுத்த மூதாட்டி "எனக்கு பசிக்கிறது அமுது பொங்கித்தா'' எனக்கேட்டாள். படிமத்தார் வேலர் உடனே நல்லிக்கப்பன் வயலில் விளைந்த புதுநெல்லில் குற்றிய அரிசியில் அமுது பொங்கி வயல் நடுவே அமைந்த குளக்கரையில் வடலி நிழலில் வடலி ஓலையில் செய்த தட்டுவங்களில் படைத்து அன்னைக்கு நிவேதித்தவேளை, அமுதுண்ட அன்னை தன் மடியில் வைத்திருந்த சிவலிங்கத்தையும், செம்பினால் செய்யப்பட்ட சிலம்பையும், கல்லால் உருவாக்கிய அம்மன் சிலையும் படிமத்தாரிடம் கொடுத்து "எனக்குத் தண்ணீர் தா குடிக்க" எனக் கேட்டு தான் அமுது உண்ட தட்டுவத்தைக் கொடுத்தாள். படிமத்தார் வேலரும் அரு கில் உள்ள கிணற்றில் நீர் எடுத்து தட்டுவத்தில் கொண்டு வந்த வேளை அந்த மூதாட்டி மறைந்து விட்டாள்.

தெய்வீக மூதாட்டியை நான்கு திசைகளிலும் தேடிய படிமத்தார் வேலர் நீர் அருந்தக் கொடுக்கவில்லையே என்ற கவலையில் கண்ணீர் விட்டு கதறி அரற்றி தெய்வீக மூதாட்டியாக தனக்கு தரிசனம் தந்து அமுதுண்டது அம்மன் தான் எனத்தேறி மூதாட்டியின் கால்பட்ட இடங்களில் விழுந்து வணங்கித் தேறினார். அந்த இடத்திலேயே இரவு படுத்து உறங்கினார் அன்று இரவு படிமத்தார் வேலரின் கனவில் தோன்றிய அம்பாள் "நீ கவலை அடையாதே நீ அமுது தந்த இடத்தில் அரசும், வேம்பும் இணைந்த விருட்ச நிழலில் நான் உன்னிடம் தந்த மூன்று மூர்த்தங்களையும் வைத்து எனக்கு நித்திய பூசை செய்து வா'' எனத் திருவாய் மலர்ந்தருளினாள்.

அன்று படிமத்தார் வேலரினால் பிரதிஷ்டை செய்து வழிபட்ட குடிசைக் கோயில்தான் இன்று பெரும் ஆலயமாக விளங்கும் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் ஆலயம். கோயில் வாசலில் நின்று வடகிழக்குத் திசையில் நோக்கினால் அன்னதானக் கந்தன் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில் பசுமையான சூழலில் அமர்ந்து அற்புதங்கள் பல செய்து அருளாட்சி புரியும் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கோயில் அச்சுவேலி-தொண்டமானாறு நெடுஞ்சாலையில் அச்சுவேலி பஸ்நிலையத்தில் இருந்து வடக்கே மூன்று கிலோமீற்றர் தூரத்தில் வீதிக்கு மேற்குப் புறத்தில் அமைந்துள்ளது.

ஆரம்பத்தில் இருந்து படிமத்தார் வேலர் மற்றும் அவரின் வழி வந்த சந்ததியினரினால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஆலயம் 22.09.1982 ஆம் திகதியில் இருந்து படிமத்தார் வேலரின் சந்ததி வாரிசு சு.ஞானசபேசனால் பொதுமக்களை கொண்டு அமைக்கப்பட்ட ஆலய பரிபாலன சபையிடம் சட்ட ரீதியாகப் பொறுப்பளிக்கப்பட்டது. அன்றில் இருந்து ஆலய நிர்வாகத்தினை "இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை'' பரிபாலித்து வருகின்றது.

1801 ஆம் ஆண்டில் இருந்து ஆலய மகோற்சவம் ஆடி மாதத்தில் 15 தினங்கள் நடைபெற்று வருகின்றன. 1839 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதியில் சிவகாமி அம்பாள் கோயில் என எழுதப்பட்டுள்ளது. 1872 ஆம் ஆண்டு யாழ்.கச்சேரியில் செய்யப்பட்டுள்ள கோயில் பதிவு இடாப்பில் கைலாசநாத புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1882 ஆண்டு, 1892 ஆண்டுகளில் யாழ்.கச்சேரியின் கோயில்கள் மடங்கள் பதிவு இடாப்பில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

1801 ஆம் ஆண்டில் இருந்து ஆலய மகோற்சவம் ஆடி மாதத்தில் 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது. 1839 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதியில் சிவகாமி அம்பாள் கோயில் என எழுதப்பட்டுள்ளது. 1872 ஆம் ஆண்டு யாழ். கச்சேரியில் செய்யப்பட்டுள்ள கோயில் பதிவு இடாப்பில் கைலாசநாத புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

படிமத்தார் வேலர் அன்னையின் அருளால் குறிப்பிட்ட தினங்களில் சன்னதம் ஆடி அருள்வாக்கு சொல்வதால் அடியார் கூட்டம் நாளும் பொழுதும் அதிகரிக்கத் தொடங்கியதோடு அம்மனின் அருள் வியாபகம் ஊரெல்லாம் பேசப்பட்டது. அன்னையின் கட்டளைப்படி அவர் கொடுத்த சிவலிங்கத்தை சிவனாகவும்; செப்பினால் செய்யப்பட்ட சிலம்பை கற்புத் தெய்வம் கண்ணகி அம்பாளாகவும்; கல்லிலால் செய்யப்பட்ட உருவத்தை அன்னை புவனேஸ்வரியாகவும் பிரதிஷ்டை செய்து ஆரம்பத்தில் இருந்து வழிபாடு செய்யப்படுகின்றது.

படிமத்தார் வேலர் இறைபதம் அடைந்த பின்னர் அவரது தம்பியார் தனிமை தீர்த்தார் அண்ணன் செய்த திருத்தொண்டை அணுவளவும் பிசகாமல் மேற்கொண்டு வந்தார். தனிமை தீர்த்தார் வயோதிபம் அடைந்த பின்னர் வல்லியார் பூசகராக இருந்து ஆலயக் கடமைகளை நிறைவு செய்தார். வல்லியார் உடையார் பதவியை குறித்த காலப் பகுதியில் வகித்தமையினால் உடையார் வல்லியார் எனவும் அழைக்கப்பட்டார். வல்லியாருக்கு பின்னர் சுப்பர், ஞானர் என்போரும் பரம்பரை பரம்பரையாகப் பரிபாலனம் செய்தனர்.

உடையார் வல்லியார் காலத்தில் ஓலைக் கொட்டில் அம்மன் கோயிலாக இருந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு சுண்ணாம்பும் கல்லும் கொண்டு நிரந்தர கட்டுமானங்களுடனான ஆலயமாகக் கட்டப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் திருக்குளமும் நிர்மாணிக்கப்பட்டது.

ஊர் பொது மக்கள் வருடந்தோறும் தமது தோட்டங்களில் விளைந்த விளை பொருள்களான வெங்காயம், புகையிலை, மிளகாய், மற்றும் தானிய வகைகளை ஆலயத்துக்குக் காணிக்கையாக செலுத்தி வருவது வளமையாக இருந்து வந்தது. இந்தக் கருமத்தை வருமான அடிப்படையில் நிறைவு செய்யாமல் ஆலயத்தை வழிபடும் மற்றும் ஆலய பரிபாலன எல்லைப் பரப்பில் வாழ்வோர் அனைவரும் பிசகாமல் ஆண்டுதோறும் மேற்கொண்டு வருவது "ஊர்வழமை'' இதன் மூலம் பெறப்பட்ட நிதியையும், மற்றும் ஊரவர் வழிபடுவோரிடம் திரட்டப்பட்ட நிதியையும் பயன்படுத்தி 1920 ஆம் ஆண்டு ஆலயம் விரிவுபடுத்தப்பட்டு கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆலயத்தின் மூல மூர்த்தியாக புவனேஸ்வரி அம்பாளுக்கும், பரிவார மூர்த்தங்களாக சந்தான கோபாலர், கண்ணகை அம்பாள் ஆகியோருக்கும் தலவிருட்சத்தின் கீழ் நாகதம்பிரானுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டன.

1974 ஆம் ஆண்டு ஆலயத்திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1974.05.03 ஆம் திகதி மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1979 காவல் தெய்வமாகிய வைரவருக்கும் தனிக் கோயில் அமைக்கப்பட்டது. (முற்றும்)

# வடக்கு, கிழக்கு இணைந்தால் முஸ்லிம்கள் நடுத்தெருவில்

## பயமுறுத்துகிறார் ஐ.ம.சு.மு. வேட்பாளர்

மட்டக்களப்பு,ஓக.10

கிழக்கில் தமிழ் முதலமைச்சர் வந்தால் வடக்குக்கான தேர்தலின் பின்னர் வடக்கில் வருகின்ற தமிழ் முதலமைச்சரும் இணைந்து கையொப்பமிட்டால் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அமைய இலகுவாக வடக்கு, கிழக்கை இணைத்துவிடலாம். இவ்வாறு நடந்தால் முஸ்லிம்கள் நடுத்தெருவில் விடப்படுவார்கள் என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் எஸ்.நிஜாமுதீன் தெரிவித்தார்.

பொத்துவில் கடற்கரைப் பள்ளிவாசல் புனர்நிர்மாணத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்துவிட்டால் வடக்கு, கிழக்கு இணைப்பு சாத்தியமாகிவிடும். அவ்வாறு இணைத்துவிட்டார்கள் என்றால் மன்னாரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கதியே ஏனையோருக்கும் ஏற்படும்.

மாகாணசபையின் அதிகார எல்லைக்குள் எமது அன்றாட நிர்வாக விடயங்கள் பல இருந்தும் அவற்றை உரியவாறு நிவர்த்திசெய்வதில் எந்த மாகாணசபை உறுப்பினர்களின் பங்களிப்பு எமது மக்களுக்கு திருப்தியாகக் கிடைத்திருக்கின்றது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள்.

மாகாணசபையின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும், நிர்வாகத் தேவைகளையும் நிறைவேற்ற முடியாத மக்களாகவே நாம் இருக்கும்படி எமது முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் செயற்பட்டார்கள் என்பது மிகவும் வேதனை தருகின்ற ஒரு விடயமாகும். அத்தகையவர்களை ஓரங்கட்டுகின்ற ஒரு தேர்தலாகவும் மக்கள் இந்தத்தேர்தலைப் பயன் படுத்தவேண்டும் - என்றார். (ச)

# நமுனுகுல தோட்ட மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துக

## ஜனாதிபதி பணிப்பு

பதுளை,ஓக.10

பதுளை மாவட்ட நமுனுகுல பெருந்தோட்ட நிறுவனங்களுக்குக் கீழுள்ள தோட்ட மக்களின் உரிமைகளையும் நலன்புரித் திட்டங்களையும் உறுதி செய்து தோட்ட நிர்வாகத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு, நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பெருந்தோட்டக்கைத்தொழில்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரை, இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கைத்தொழில்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரை, இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்

பதுளை மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதுளை மாவட்ட நமுனுகுல பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற பிங்கராவ, கந்தஹேன, கோணகலை, கனவரல்ல, இந்துகலை, கினலன் ஆகிய தோட்டங்களில் நிலவிவருகின்ற பிரச்சினைகள் அனைத்தும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இதனையடுத்தே ஜனாதிபதி குறித்த உத்தரவை விடுத்[illegible]ளார் என்று அவர் கூறினா[illegible]. (ச)

# தேர்தல் அமைதியாக நடக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## மட்டு. மாவட்ட அரச அதிபர் கோருகிறார்

மட்டக்களப்பு,ஓக.10

அமைதியான தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற இப்தார் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதியான தேர்தல் ஒன்றின்போது தமது வாக்குரிமைகளை ஜனநாயக ரீதியாகப் பிரயோகிக்க வேண்டும்.

அமைதியான, ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்த இந்த மாவட்டத்திலுள்ள அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னரும் எந்த வித வன்முறைகளும் பிரச்சினைகளும் வந்து விடாமல் நடந்துகொள்ள வேண்டும்.

தேர்தல் சட்ட திட்டங்களுக்கு ஊடாக மக்கள் தங்கள் வாக்குரிமையை நேர்மையாகவும் சுதந்திரமாகவும் பிரயோகிக்கவும் தேர்தலின் ஊடாக மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அனைவரும் உறுதி பூண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அமைதியான, ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்த இந்த மாவட்டத்திலுள்ள அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.



எந்த மதமும் தீயவழியில் செல்லுமாறு யாரையும் கூறவில்லை. மதங்கள் மக்களை நல்வழிப்படுத்துவதுடன் ஆன்மீக ரீதியான வழியையும் காட்டுகின்றது.- என்றார். (ச)



பதுளைக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரலாற்றுப் பிரசித்தி பெற்ற போகொட மரப்பாலத்தை பார்வையிட்டார்.

# எழுச்சிபெற்று வருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

## வேட்பாளர் சல்மா அமீர் ஹம்சா தெரிவிப்பு

எருவில்,ஓக.10

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதுபோல முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஒன்றுபட்டு ஆதரிக்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் சல்மா அமீர் ஹம்சா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

மண்முனைப்பற்று பிரதேசத்திலுள்ள ஒல்லிக்குளம், காங்கேயனோடை ஆகிய கிராமங்களிலுள்ள பெண்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பக்கம் அணிதிரண்டு வருகை தருகின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸ் எழுச்சி பெற்று வருகின்றது.

கிழக்கு மாகாணசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு இல் லாமல் எவரும் முதலமைச்சராக வரமுடியாது.

முஸ்லிம் முதலமைச்சரைப் பெறவேண்டு மானால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் மாத்திரம்தான் முடியும். கிழக்கு மாகாண அடுத்த முதலமைச்சராக மீண்டும் சந்திரகாந்தனையே நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

எனவே, நாம் முஸ்லிம் முதலமைச்சரைப் பெற வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையே ஆதரிக்கவேண்டும். முஸ் லிம்களின் குரலாக முஸ்லிம் காங்கிரஸ் இன்று திகழுகின்றது.

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கெதிராக நடக்கும் அநியாயங்களை எந்தவித அச்சமுமின்றி தட்டிக்கேட்கும் ஒரு கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே இருக்கின்றது.

தம்புள்ளயில் பள்ளிவாசல் உடைக்கப்பட்டபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசில் இருந்துகொண்டே அரசின் நடவடிக்கையை பகிரங்கமாக விமர்சித்ததுடன் பள்ளிவாசலுக்காக சர்வதேசரீதியாகக் குரல் கொடுத்தார்.

முஸ்லிம்களின் புனித பள்ளிவாசல்கள் இன்று பௌத்த பேரினவாதிகளால் ஆக்கிரமிக்கப்படும் நிலையில், நாம் நமது வாக்கை எவருக்கு வழங்கப்போகின்றோம் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ச-31)

# ஆற்றில் மூழ்கி குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு,ஓக.10

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்திவெளி ஆற்றில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் திகிலிவெட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குபேந்திரன் (வயது 31) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

மேசன் தொழில் செய்யும் இவர், வேலை முடிந்து படகில் ஆற்றைக் கடந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது நீராடுவதற்காக ஆற்றில் குதித்துள்ளார்.

நீண்டநேரமாகியும் கரைசேராத இவரை படகில் சென்று தேடியபோது சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீரில் மூழ்கியதால் சுவாசம் தடைப்பட்டு மரணம் இடம்பெற்றுள்ளதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ரூ.10,000 அபராதம்

அம்பாறை,ஓக.10

மத்தியமுகாம் பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு 10,000 ரூபா அபராதம் விதித்து கல்முனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.றிஸ்வி நேற்றுமுன்தினம் புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து கடந்த திங்கட்கிழமை மாலை மத்தியமுகாம் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 15 கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன், சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்ததாக மத்தியமுகாம் பிரதேச பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கல்முனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிபதி குறித்த அபராதத்தை விதித்துள்ளார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விவேகமாகவும், வேகமாகவும் செயற்படுவீர்கள், இருப்பினும் மன உறுதியை குலைக்கும் வகையில் நிகழ்ச்சிகள் சில இருக்கும். உறவினர்கள் சிலர், உங்களிடம் அவசர உதவி கேட்டு நிர்ப்பந்தம் செய்யலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து, பாசம் அதிகரிக்கும்.

**இடபம்:** நேரம் பார்க்காமல் தொழிலில், அக்கறையோடு செயற்படுவீர்கள். உறவினர்கள் சிலர், மனம் உவந்து உங்களைப் பாராட்டுவர். இழுத்தடிக்கலாம் என்று நினைத்த வேலை ஒன்று, சுலபமாக முடியலாம். பெண்கள் சிலர் வழியில், சிறு உதவிகள் கிடைக்கலாம்.

**மிதுனம்:** கடும் முயற்சிக்குப் பின்னர், சில காரியங்கள் முடிவுக்கு வரும். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களின் உதவிகள் நாடி வரலாம். வெளியூர் பயணங்கள் செல்வதற்கான முன்னேற்பாடுகளைத் தவிர்க்கவும். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** உறவினர்கள் தொடர்பான விவகாரங்களில் தலையிட்டு, வீண் குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். சக ஊழியர்கள் சிலர், உங்களிடம் யோசனை கேட்டுச் செயற்படலாம்.

**சிங்கம்:** உங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம், சிறிய பிரச்சினைகளுக்காக பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். சிலரை விமர்சனம் அல்லது குறை சொல்வதன் மூலம், பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். மறதியால் அவதிக்கு ஆளாகலாம்.

**கன்னி:** நினைத்தது நடப்பதன் மூலம், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடி கொள்ளும் நாள். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு. பிறரை நம்பி, மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டாம்.

**நாளை**

ஆடி 27 சனிக்கிழமை 11.08.2012
திதி: நவமி பி.ப. 04.29 வரை
நட்சத்திரம்: கார்த்திகை, மு.ப. 11. 05 வரை
சுபநேரம்: 03.04 - 04.34 வரை
ராகு காலம்: 09.04-10.34 வரை

**துலாம்:** யாரைச் சந்திக்க வேண்டும் என்று நினைத்தீர்களோ, அவர்களை எதிர்பாராமல் சந்திக்கலாம். காலையில் வந்த பணவரவுக்கு, மாலையில் செலவு ஏற்படலாம். நீங்கள் சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் பெருமையான செயல் ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். யாராவது உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். நண்பர்கள் சிலர், உங்களுக்கு அவசர உதவி செய்யலாம்.

**தனுசு:** சோர்வின்றி சுறுசுறுப்பாகச் செயற்பட்டு, உங்களின் திறமையை வெளிக்காட்டுவீர்கள். சக ஊழியர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிட்டும். பெண்கள் உடல் நலக்குறைவுகள் நீங்கி, தெம்பு, உற்சாகம் பெறுவர். தொழில் ரீதியான பணவரவுகள் உண்டு.

**மகரம்:** நீங்கள் மலைபோல் நம்பிய ஒருவர், உங்களுக்கு உதவ முடியாத சூழல் நிலவும். சுயதொழில் புரிவோர், கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், சில வேலைகளைச் செய்வீர்கள்.

**கும்பம்:** என்னதான் பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும், ஏதாவது ஒரு வழியில், சிலர் குறை சொல்வர். மற்றவர்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். ஊழியர்கள் எடுக்கும் திடீர் விடுமுறையால், கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்.

**மீனம்:** அவசரமாக முடிக்க வேண்டிய வேலைக்காக, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய வேண்டியிருக்கும். உறவினர்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறுவீர்கள். விருந்தினர்கள் வருகையால், வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | | 8 | | 7 |
| 5 | 7 | | 6 | | 9 | 4 | | 3 |
| | | | | 1 | 5 | | | 6 |
| 1 | | | | 7 | 6 | | 9 | |
| | 6 | | | 2 | | | 4 | |
| | 3 | | 5 | 4 | | | | 8 |
| 3 | | | 8 | 5 | | | | |
| 8 | | 4 | 1 | | 7 | | 3 | 2 |
| 6 | | 1 | | | 3 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 8 | 2 | 9 | 6 | 5 | 1 | 4 |
| 9 | 2 | 4 | 5 | 1 | 3 | 8 | 6 | 7 |
| 6 | 1 | 5 | 4 | 8 | 7 | 2 | 3 | 9 |
| 2 | 8 | 6 | 9 | 3 | 1 | 4 | 7 | 5 |
| 5 | 9 | 3 | 6 | 7 | 4 | 1 | 8 | 2 |
| 1 | 4 | 7 | 8 | 5 | 2 | 3 | 9 | 6 |
| 8 | 6 | 2 | 3 | 4 | 9 | 7 | 5 | 1 |
| 7 | 5 | 9 | 1 | 2 | 8 | 6 | 4 | 3 |
| 4 | 3 | 1 | 7 | 6 | 5 | 9 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
18.09.1946

மறைவு
11.07.2012

திதி: அபரபக்க அட்டமி



சின்னத்தம்பி பத்மநாதன்
(பப்பு -பிரான்ஸ்)

வாடிய மலரில் போகாத வாசமாய்
இன்னமும் உங்கள் பிரிவை
ஏற்க மறுக்கும் எம் இதயத்தில்
என்றும் உங்கள் நினைவுகள்.....

தபாற் கந்தோர் வீதி,
முதலாம் ஒழுங்கை,
சாவகச்சேரி.

(18140)(5-6-7)

மைத்துனிமார்,
மருமக்கள்.



# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27.05.1959

மறைவு
01.08.2002



அமரர்
விமலா நட்சத்திரம்

பத்து மாதம் சுமந்து பெற்று
பாரினிலே எமை வாழவைக்க
அன்னையாய் தந்தையாய்
அல்லும் பகலும் உழைத்து வழிகாட்டி
நல்ல பண்புதனை எமக்கு ஊட்டி
உம் உதிரம் தந்து நின்றீர்

சிறப்புடனே எமை வாழவைக்க
என்றென்றும் உமை உருக்கி
வாழ்வு தந்த உங்கள் அன்பை
என்றென்றும் மறவோம் அம்மா!
தங்களின் ஆன்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

எமது குடும்பத்தலைவியின் 10ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று (10.08.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்தி நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[21423][5-6-7]

குடும்பத்தினர்.


## தனங்களப்பில் பாலர் பாடசாலை திறப்பு

சுவிஸ் நாட்டு அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினரால் தனங்களப்பில் நிர்மாணிக்கப்பட்ட பண்டிதமணி பாலர் பாடசாலைக் கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நிறுவனப் பிரதிநிதி மார்ட்டின் லூதர் முதன்மை விருந்தினராகவும், சாவகச்சேரி நகராட்சி மன்ற எதிர்க்கட்சித்தலைவர் சூ. அலெக்ஸாண்டரும் கலந்து கொண்டனர். (வ-9)

## அழகுக் கலை பயிற்சி நெறி

கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தலை அலங்காரம், முக ஒப்பனை, மனையியல் போன்ற மூன்று மாத காலப் பயிற்சி எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி நெறியில் சேர விரும்புபவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(வ-100)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1966★03★14

மறைவு
2012★07★11



அமரர் பொன்னையா சுதாகரன்

அன்பு மொழி பேசி எமக்கு அறிவூட்டி
பண்புடனே நாம் வாழ நல் வழிகாட்டி
இன்பமுடன் வாழ்கையில் எமை விட்டுப் பிரிந்தீரே !
என்றும் நாம் மறவோம் உம் நினைவில் வாழ்ந்திருப்போம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்ததும் ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் செய்த, கண்ணீர் அஞ்சலி, ஆறுதல் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

இன்று (10.08.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக் குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

துரைராஜா வீதி,
பத்தமேனி , அச்சுவேலி.

[சி/2192][6.7.8]

குடும்பத்தினர்

## சிறைச்சாலை காவலாளிகள் அறுவர் கைது

கொழும்பு,ஓக.10

அநுராதபுரம் சிறைச்சாலையின் காவலாளிகள் ஆறு பேர் மஹவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் - குருநாகல் வீதியின் தலதாகம பகுதியில் பஸ் சாரதி மற்றும் கொன்ஸ்டபிள் ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ்ஸை நிறுத்தாததன் காரணமாக சிறைச்சாலை காவலாளிகள் சாரதி மீது தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. சுப நிகழ்வொன்றுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த இவர்கள் மதுபோதையில் இருந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

# 2010, 2011ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு இன்றேல் ஆர்ப்பாட்டம்

### எச்சரிக்கிறது பட்டதாரிகளின் கூட்டுறவுச் சங்கம்

கொழும்பு,ஓக.10

2010, 2011ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில்லை என்ற புதிய விதியானது வேலையற்ற பட்டதாரிகள் சங்கங்கள், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையில் மோதலுக்கு வழி வகுத்துள்ளது.

பட்டதாரிகள் வேலை வாய்ப்பு தொடர்பான புதிய விதி இரத்துச் செய்யப்படாதுவிடின் கோட்டை ரயில் நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப்போவதாக தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளின் கூட்டு சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டங்கள் யாவருக்கும் ஒரே மாதிரி நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களில் 2010ஆம், 2011ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியாது என்று குறிப்பிடப்படவில்லை என்று சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்மிக முனசிங்க கூறினார்.

நீண்ட காலமாக வேலையின்றி இருந்த பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்காகவே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்று அமைச்சு கூறியுள்ளது.

இதை ஏற்க முடியாது என கூறிய வேலையற்ற பட்டதாரிகள் சங்கங்கள் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில்பட்டம்பெற்ற சிலர் ஆறுமாத பயிற்சிக்காக அழைக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளன.

இதேவேளை ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளாக வேலையில்லாதிருக்கும் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

2010ஆம், 2011 ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு 2013ஆம், 2014ஆம் ஆண்டில் வேலை வழங்கப்படும் என்று அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரட்ன கூறினார். ஆறுமாத பயிற்சியின் வேலை வழங்கவென 15 ஆயிரம் வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இவர்களை நேரடியாக அரச சேவையில் நிரந்தரமாக இணைப்பது சாத்தியமில்லை.

ஆனால், பட்டதாரிகள் யாவருக்கும் வேலை கிடைப்பதை நாம் உறுதி செய்வோம்என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)

## வெளிநாடுகளில் 4½ லட்சம் பணிப்பெண்கள்

கொழும்பு,ஓக.10

கடந்த நான்கு வருடங்களில் வீட்டுப் பணிப்பெண்களாக 4 லட்சத்து 51 ஆயிரத்து 897 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ணர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு நேற்றுமுன்தினம் புதன்கிழமைநாடாளுமன்றில் தெரிவித்தது.


குறித்த ஆண்டுகளில் வெளிநாடு சென்ற பெண்களில் காணப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 48 ஆயிரத்து 492 என்றும் அந்த அமைச்சு குறிப்பிட்டது.

2008ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 486 பெண்கள் வெளிநாடுகளுக்குப் பணியாளர்களாகச் சென்றுள்ளனர். 2009ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 508 பேரும், 2010ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 807 பேரும், 2011ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 96 பேரும் இவ்வாறு பணிப் பெண்களாக வெளிநாடு களுக்குச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-சி)

# டெங்கைக் கண்டறிய நவீன இயந்திரங்கள்

### வைத்தியசாலைகளுக்கு வழங்க சுகாதார அமைச்சு முடிவு

டெங்குநோயால் பாதிக்கப்பட்டவர்களை இனம் காண்பது இதுவரை சிக்கலான விடயமாகவே இருந்து வருகின்றது.



கொழும்பு, ஓக.10

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களை சரியாகவும் உடனடியாகவும் அடையாளம் காண்பதற்காக நாட்டில் உள்ள பிரதான வைத்தியசாலைகளுக்கு டெங்கு நோயைக் கண்டறியும் நவீன இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் டெங்கு நோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துவருகிறது. சாதாரண காய்ச்சல் போல தோன்றும் இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், தகுந்த சிகிச்சை வழங்கி இதன் மூலம் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும். எனினும் டெங்குநோயால் பாதிக்கப்பட்டவர்களை இனம் காண்பது இதுவரை சிக்கலான விடயமாகவே இருந்து வருகின்றது.

ஒருவருக்கு டெங்குநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய குருதிப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பரிசோதனை முடிவுகள் வெளியாவதற்கு நீண்ட காலதாமதம்ஏற்படுவதால், ஏறக்குறைய 48 மணித்தியாலங்கள் தேவைப்படுவதால் அதற்கிடையில் பாதிக்கப்பட்ட நோயாளரின் நிலை மோசமடைந்த நிகழ்வுகளும் இலங்கையில் நடந்துள்ளன.

எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நோயாளர் ஒருவருக்கு டெங்குநோய் உள்ளதா? இல்லையா? என்பதை நவீன இயந்திரத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்திற்குள் கண்டுபிடிக்க முடியும். அத்தகைய நவீன இயந்திரங்களை கொள்வனவு செய்து நாடெங்கிலும் உள்ள பிரதான வைத்தியசாலைகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது - என அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வகையான டெங்கு நோயை துரித கதியில் கண்டறியும் நவீன இயந்திரம் முதல்முறையாக கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்திய சாலைக்கு சுகாதார அமைச்சால் நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது. (ங)

# வேட்பாளர்களைப் பிரபல்யப்படுத்த ஆசிரியரைப் பயன்படுத்த வேண்டாம்

### ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அதிபர்கள் மற்றும் கல்விப் பணிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதாகக் கூறி அவர்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது

கொழும்பு,ஓக.10

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அதிகளவில் ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுவதாக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்துகின்றது.

இந்த நடவடிக்கைக்கு தமது கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

கடமை நிறைவேற்றுப் பதவிகளை வகிக்கும் அதிபர்கள் மற்றும் கல்விப் பணிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவதாகக் கூறி அவர்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் நிலை காணப்படுவதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சங்கம் இதனை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கூறினார்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர்களைப் பிரபல்யப்படுத்தும் பணிகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுவார்களாயின் அது குறித்து முறையிடுமாறு தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் கலை நிகழ்வின் போது...

# பிரசாரங்களின்போது கட்சிகள் கொள்கைகளை முன்வைக்க வேண்டும்

### கண்காணிப்பாளர்கள் அறிவுரை

அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் தமது கொள்கைகளை முன்வைக்கத் தவறுகின்றனர் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் விமர்சித்துள்ளனர். தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளநடத்தைக் கோவையில் கொள்கைகளை முன் வைப்பதும் நிபந்தனையாக்கப்பட வேண்டும் என்று கண்காணிப் பாளர்கள் கூறியுள்ளனர்.

வேட்பாளர்கள் வாக்குறுதிகளைப் பற்றித்தான் அடிக்கடி பேசுகிறார்களே தவிர, கொள்கைகளைப் பற்றியல்ல. ஆனால், அவர்கள் கொள்கைகளைப் பற்றிப் பேசவேண்டும். அத்துடன் நீதியான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்த விடயம் நடத்தைக் கோவையில் உள்ளடக்கப்படுவது அவசியம் என்று தேர்தல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார்.

வாக்குகளுக்காக ஆயிரக்கணக்கான ரூபாவை மதுபானத்துக்கும், மதிய உணவுப் பொதிகளுக்கும் செலவிடுவதைத் தவிர்ப்பதும் நடத்தைக்கோவையில் உள்ளடக்கப்பட வேண்டும். அவர்கள் சட்டபூர்வமான அல்லது சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருக்கவும் கூடாது என்று அவர் தெரிவித்தார்.

இன, மதங்களை தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தக்கூடாது. தாம் குறித்த இனக்குழு அல்லது மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வாக்குகளை வழங்குமாறு சில வேட்பாளர்கள் கூறியுள்ளதாக நாம் கேள்விப்பட்டுள்ளோம். இத்தகைய சுலோகங்களை அரசியல்வாதிகள் பயன்படுத்தக்கூடாது. பொலிதீன் போன்றவற்றை வேட்பாளர்கள் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. தேர்தல் விதிகளை அவர்கள் மதிக்க வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ச)

# உங்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா ?

## இந்த அறிவிப்பு பொதுமக்களின் கவனத்திற்காக வெளியிடப்படுகிறது.

1. பணத்தை வைப்பிலிடும் போது, வைப்புக்களை ஏற்கும் நிறுவனம் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான அனுமதியைக் கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், வைப்புக்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

   கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்:
   - வருடாந்த வட்டி வீதம் மற்றும் வருடாந்த பயன்தரும் வட்டி வீதம்
   - வட்டிக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி அல்லது கணக்கில் வட்டி வரவு வைக்கப்படும் திகதி
   - வட்டி வழங்கப்படாத சந்தர்ப்பங்கள்
   - நிலையான வைப்புக்கள் தொடர்பில், வைப்புக்காலம் மற்றும் முதிர்வுத் திகதிக்கு முன்னதான மீளப்பெறுகை தொடர்பான நியதிகள் என்பன
   - மேலதிக சேவைக் கட்டணங்களும் அறவீடுகளும்

2. கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது, அக்கடன்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

   கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்:



   - செலுத்த வேண்டிய மாதாந்த அல்லது வருடாந்த வட்டி
   - வட்டி வீதம் நிலையானதா அல்லது மாறக் கூடியதா என்பது
   - வட்டி கணிப்பீட்டு முறை
   - கடனின் காலம்
   - தவணைக் கட்டணங்களின் எண்ணிக்கை
   - தவணைக் கட்டணத் தொகை
   - தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய திகதிகள்
   - பிணைகள் மற்றும் உத்தரவாதமளிப்பவர்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
   - தவணைக் கட்டணங்களின் கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படின் அது தொடர்பான நிபந்தனைகள்
   - உரிய திகதிக்கு முன்பதாக கடன்கள் மீளச் செலுத்தப்பட்டால் அது தொடர்பான நிபந்தனைகள்
   - மேலதிக சேவைக் கட்டணங்களும் அறவீடுகளும்

3. ஒரு அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்துடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.
   - எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்ள முன்னர், அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய உங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளல்.
   - விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை கவனமாக வாசித்து அறிந்த பின்னர் அவற்றை பூர்த்தி செய்தல்.
   - எந்தவொரு வெற்றுப் படிவங்களிலும் கையொப்பமிடாது இருத்தல்.
   - கணக்குகள் தொடர்பான தனிநபர் அடையாள இலக்கங்கள் மற்றும் கடிதப் போக்குவரத்துக்களை பாதுகாத்தல்.
   - அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்திற்கு உண்மையான தகவல்களை வெளிப்படுத்துதல்.
   - முகவரி மாற்றங்களை அறிவித்தல்.
   - சந்தேகத்திற்கிடமான அல்லது மோசடியான கொடுக்கல்வாங்கல்களை அறிவித்தல்.
   - எந்தவொரு பிரச்சினையையும் முதலில் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கு முடியுமானவளவு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

**மேற்குறிப்பிட்ட முறையில் பிரச்சினைகள் தீர்க்கப்படாது போனால் கீழ்கண்டவற்றுடன் தொடர்பு கொள்ள முடியும்:**

➤ நிதிசார் குறைகேள் அதிகாரி, இல. 143ஏ, வஜிர வீதி, கொழும்பு 5.
தொலைபேசி: 011 2595624-5, மின்னஞ்சல்: forsril@sltnet.lk

➤ கடன்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாத்திரம்:
கடன் ஆலோசனை நிலையம், இல. 58, சிறி ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய.
தொலைபேசி: 011 2887006, மின்னஞ்சல்: upadeshana@gmail.com

**மேற்கூறப்பட்டவை உங்களது நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான முக்கிய தகவல்கள் மாத்திரம் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். உங்களது கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மேலதிக விபரங்களை கேட்டறிதல் முக்கியமானதாகும்.**

இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1
தொலைபேசி: 0112477100, 0112398539, 0112477115
தொலைநகல்: 0112477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk, இணையத்தளம்: www.cbsl.gov.lk

## அதிபர்களுக்கு இடமாற்றம்

அக்கராயன், ஓக.10

கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலை அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் த. கண்ணபிரான் புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கும்,புதுகுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் எஸ். ஸ்ரீதரன் திருவையாறு மகாவித்தியாலயத்துக்கும் திருவையாறு மகாவித்தியாலய அதிபர் எஸ். மதுரநாயகம் அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.

(க-18)

## பாழாகிப் போய்விட்டது சிறுபோக நெற்செய்கை

அக்கராயன் பிரதேசத்திலுள்ள பாலங்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை முற்று முழுதாக அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடும் வறட்சி காரணமாகக்குளம் முற்றுமுழுதாக வற்றியதன் காரணமாகப் பயிர்கள் நீரின்றி அழிவடைந்துள்ளன.

மிகவும் வறிய நிலையிலுள்ள ஆரோக்கியபுரம் கிராம மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் குறைந்த அளவிலான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் எல்லாமே ஒழுங்காக இடம்பெற்றன. மழைபெய்யுமென்ற நம்பிக்கை விவசாயிகளிடம் இல்லாததால் குளத்து நீரைப் பயன்படுத்தித் தமது சிறுபோக நெற்செய்கையைப் பூர்த்தி செய்துவிடலாமென்ற நம்பிக்கையில் அவர்கள் இருந்தனர்.

பாலங்குளம் புனரமைக்கப்படுமாயின் சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும். அத்துடன் நீருக்கும் தட்டுப்பாடு ஏற்படாதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் எதுவுமே ஒழுங்காக இடம்பெறாததால் மழையின் போது போதிய நீரைக் குளத்தில் சேமிக்க முடியவில்லை. அத்துடன் கடும் வெப்பமும் வரட்சியும் நிலைமையை மோசமாக மாற்றிவிட்டன.

தற்போது பயிர்ச் செய்கைக்கெனக் கையிலிருந்த பணத்தையும் செலவழித்து விட்டு எதனையும் பெற முடியாத அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## அபிவிருத்தி செய்யப்படவுள்ள 14 ஆரம்பப் பாடசாலைகள்

5ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள 14 ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 5 ஆயிரம் ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கெனப் பின்வரும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் இருந்து ஆசிக்குளம் அ.த.க. பாடசாலை, கல்லாண்டகுளம் அ.த.க. பாடசாலை, சமளன் குளம் அ.த.க. பாடசாலை , மற்றும் வவுனியா ஸ்ரீநாக ராஜ வித்தியாலயம் என்பனவும்-

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து பழையவாடி அ.த.க பாடசாலை, தனிநாயகம் அடிகளார் வித்தியாலயம் என்பனவும்-

வவுனியா தெற்கிலிருந்து மகாமைலங்குளம் அ.த.க. பாடசாலை, குடகச்சகோட்டை வித்தியாலயம், அரம்பகஸ்ட அ.த.க பாடசாலை என்பனவும்-

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவிலிருந்து பாவற்குளம் பிரிவு 03 இல 9 கனிஷ்ட உயர் பாடசாலை, நொச்சிக்குளம் அ.த.க. பாடசாலை, சின்னத்தம்பனை அ.த.க பாடசாலை, கற்காரயன் குளம் இளங்கோவித்தியாலயம் ஆகிய 14 பாடசாலைகளுமே அபிவிருத்திக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.


## மரண அறிவித்தல்

### அமிர்தநாதர் இராசையா (சித்தப்பா)

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாழ் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் இராசையா கடந்த வியாழக்கிழமை (02.08.2012) அன்று காலமானார்.

அன்னாரது இறுதி ஆராதனைகள் இல.250, 5 ஆம் ஒழுங்கையில் ஆச்சிபுரம், வவுனியாவில் இன்று (10.08.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக சமணங்குளம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 075 5053635
ஆச்சிபுரம் , வவுனியா

தகவல்:
ஜெயந்தி ஜெயராசர் (மகள்)

(21661)(6-7-8)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
13*05*1942

உதிர்வு
18*07*2006

அமரர்
### கணேசலிங்கம் செல்லம்மா

திதி: அபரபட்ச அட்டமி
10.08.2012

**ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டன
அகலவில்லை உம் நினைவுகள்
அவனியில் உங்கள் நினைவால்
அனுதினமும் நாம் வாடுகின்றோம்
நினைவுகள் எம்மைவிட்டு
அகலவில்லை.**

இல.11, திருவள்ளுவர் லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(21655)(3.6.7)

## 31 ஆம் நாள் ஞாபகார்த்த நிகழ்வும் நன்றி நவிலலும்

அமரர்
### குட்டித்தம்பி பாலகிருஷ்ணன்



எமது குடும்பத்தலைவர்
**அமரர் குட்டித்தம்பி பாலகிருஷ்ணன்** அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்த செய்தியறிந்து எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் 31 ஆம் நாள் ஞாபகார்த்த நிகழ்வுகள் நாளை (11.08.2012) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்தியை வேண்டி நிற்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்
சந்தியக்கிணறு, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தோற்றம் 01.02.1945
மறைவு 12.07.2012

(18715)(2-6-7)

## மாடி வீடு வாடகைக்கு

யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள மாடி வீடு முழுமையாக வாடகைக்கு விடப்படும் (தனியார் நிறுவனங்கள், கம்பனிகளுக்கு மட்டுமே கொடுக்கப்படும்)
தொலைபேசி- 077 248 9903.

(21663)(9.14)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



கோப்பாய் வடக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசரத்தினம் (ஓய்வு பெற்ற தபாலதிபர், கோப்பாய் வடக்கு) நேற்று (09.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் சரவணபவநந்தா
வித்தியாசாலை அருகில்,
கோப்பாய் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ். தென்மராட்சியில்

## யாழ். ரோட்டறிக் கழக அனுசரனை மற்றும்

உதயன் சுடர் ஒளி நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

# புலமைச்சுடர் நடாத்தும்

## தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

தென்மராட்சி கலைகலாசார மண்டபம் (சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி)

வளவாளர்கள்
திரு. N. S. தீபன் (வவுனியா)
B.A, PG Dip in Edu, Dip in Teach
திரு. Y. தயாளன் (கண்டி)
Dip in Teach

காலம் 12.08.2012 (ஞாயிற்றுக்கிழமை)


நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

புலமைசாலி அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு :
071 6850005,
071 6182182

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24.11.1952

உதிர்வு
02.08.2002

திதி : 10.08.2012

அமரர்
## சின்னப்பு நாகேந்திரன் [நடராசா]

மௌனங்கள் நிலையாகிப் போய்விட
சோகமே எம் வாழ்வில் ஆழ்ந்தது
உண்மை அன்பின் உருவமொன்று
எம்மை விட்டுச் சென்ற கணங்கள்
தினம் தினம் நெஞ்சை வாட்டுதே அப்பா

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

பிரிவால் துயருறும்
மகன் நா. ரஞ்சித்குமார்.

(21659)(5-6-7)

---

## அற்றோனி தத்துவத்தை இரத்துச் செய்தல் பற்றிய அறிவித்தல்

இத்தால் சகலருமறிக,

சந்தை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்தவர்களும் கொடிகாமம் மகா ஸ்ரீ லாவண்ய காளி அம்பாள் திருக்கோயிலின் உரித்துக் காரருமாகிய சிதம்பரப்பிள்ளை துரைராசாவும் பெண் தவமணியும் ஆகிய நாங்கள் இத்தால் வெளியரங்கப்படுத்தி அறிவித்தல் செய்வதாவது.

எங்களின் தனிப்பட்ட ஆதனத்தில் அமைந்துள்ளதும் வழி வழியாக எமது உரித்தாக நிர்வகிக்கப்பட்டு வருவதுமான கொடிகாமம் மகா ஸ்ரீலாவண்ய காளி அம்பாள் திருக்கோயிலின் பராமரிப்பையும் நிர்வகிப்பையும் எங்கள் சார்பாக செயற்படுத்துவதற்கும் மற்றும் அவசியமான கருமங்களை ஆற்றுவதற்குமாக எங்கள் சார்பிலான அற்றோனிகாரராக கைதடி நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த கயிலாயநாத ஐயர் ஜெயந்திநாதன் என்பவரை ஏற்படுத்தி 2011ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 01ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு மு.செ.இராசையா அவர்கள் முகாவில் 4581ஆம் இலக்கத்தில் விஷேட அற்றோனித் தத்துவ பத்திரம் நிறைவேற்றி நியமனம் செய்து இருந்தோம் என்றும், தற்போது மேற்படி அற்றோனிதத்துவகாரர் தொடர்ந்தும் எமது சார்பாக செயற்படவேண்டிய அவசியம் இல்லாததாலும், குறித்த அற்றோனித் தத்துவத்தை நாங்கள் மீளப்பெற விரும்புவதாலும் மேற்படி கோவில் விடயமாக எம்மால் குறித்த கயிலாயநாத ஐயர் ஜெயந்திநாதன் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோனி தத்துவத்தையும் சகல அதிகாரங்களையும் இத்தால் நாங்கள் இரத்துச் செய்தும் கைவாங்கியும், வெற்றும் வெறிதுமாக்கி விடுகிறோம் என்றும்,


எனவே இன்று முதல் கொண்டு குறித்த கயிலாயநாத ஐயர் ஜெயந்திநாதன் என்பவர் எங்களின் அற்றோனி தத்துவகாரர் அல்ல என்றும், அவர் மேற்படி ஆலயம் தொடர்பாக எமது சார்பாக செயலாற்ற முடியாதென்றும் வெளிப்படுத்தி குறித்த கயிலாயநாத ஐயர் ஜெயந்திநாதன் மேற்படி விடயமாக செய்யும் எச் செயல்களுக்கும் நாங்கள் பொறுப்பாளிகளாக மாட்டோம் என்றும் இத்தால் வெளிப்படுத்தி குறித்த அற்றோனி தத்துவத்தை இரத்துச் செய்து விடுகிறோம்.

2012ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி

சி.துரைராஜா(413480132 V)
து.தவமணி (21499)(5-6-7)

---

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
26 ★ 08 ★ 1939

இறப்பு
23 ★ 07 ★ 2011

அமரர்
## தில்லையம்பலம்-செல்வராஜா

திதி: 10.08.2012

ஆண்டொன்று ஆனதுவோ?
அன்பழிந்து போனதுவோ?
ஆண்டிருந்தீர்...... உம் வீடு
அழகிழந்து போனதப்பா!
ஏழு ஜென்மம் எடுத்தாலும்
எத்தனை யுகம் போனாலும்
உம்மைப்போல ஓர் உறவை
இனிக்காணல்.... அரிதப்பா!

35/2, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

[21491][5-6-7]

---

## சுற்று வட்டத்தூபி திறந்து வைப்பு

மன்னார், ஓக. 10

மன்னாரில் அமைக்கப்பட்ட சுற்று வட்டத் தூபி நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சாரணர் இயக்கச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் வைத்திய சாலை வீதியில் இந்தச் சுற்று வட்டத் தூபி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை அமைப்பதற்கான நிதியை மன்னார் மாவட்ட சாரண இயக்கத்தின் உறுப்பினரான எஸ்.அருட்சீலன் ஒதுக்கியிருந்தார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மன்னார் நகரபிதா, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-12)

## சிவப்பு நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள்

அக்கராயன், ஓக.10

பூநகரி கரியாலை நாகபடுவான் விவசாயிகள் தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட சிவப்பு நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் இயங்கிவரும் நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தம்மிடமிருந்து சிவப்பு நெல்லைக் கொள்வனவு செய்வதில்லை யெனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அறுவடை செய்யப்பட்ட நெல் வீடுகளில் முடங்கிக் கிடப்பதால் பயிர்ச் செய்கைக்கென வங்கிகளில் பெற்ற கடன்களைச் செலுத்த முடியாத அவலநிலையில் தாம் இருப்பதாகவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை இம்முறை சிறுபோகத்தின்போது கரியாலை நாகபடுவான் குளத்திலிருந்து போதிய நீர் கிடைத்ததாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் குளத்திலிருந்து போதிய நீர் கிடைக்காமையால் பயிர்கள் எரியுண்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

தற்போது இந்தக் குளத்தின் கீழ் 260 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

---

**வாகனம் விற்பனைக்கு/வாடகைக்கு**

கன்ரர் (பைவர் பொடி) நீளம் $10\frac{1}{2}$ அடி வாகனம் விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 634 3649
077 396 2846
(18714)(5-6-7)

**தவறிவிட்டது**

அந்தோனிப்பிள்ளை ஜெயதாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (622422271V) 07.08.2012 பருத்தித்துறை-கேவில் நோக்கி பயணித்த தனியார் பேருந்தில் தாளையடிக் கிடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர் அடையாள அட்டையின் முகவரிக்கு அல்லது கீழ் உள்ள நம்பருடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 987 6109
(21613)(5-6-7)

**விற்பனை பிரதிநிதிகள் தேவை**

பிரபல விற்பனை நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. தகுதியுடையோர் தங்கள் தொலைபேசி இலக்கத்துடன் கூடிய சுயவிவரக் கோவை யை 18.08.2012 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். கவர்சிகரமான சம்பளமும்+ கொமிசனும் வழங்கப்படும்.

மே/ப. உதயன்
விளம்பர இல:4388
இல361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(21662)(9.14)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரிய வழிகாட்டலும், ஆலோசகருமாகிய க.சிவஞானம் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி புஸ்பவதி கனகரத்தினம் அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு மிக்க துயருறுவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவர்களது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(இ/2196)(5-6-7)

---

# சேவை நலன் பாராட்டு



## திரு. பூரன்னானந்தம் குகதாசன்

(உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆரம்பக்கல்வி யாழ். கல்வி வலயம்)

இன்று 10.08.2012 இல் தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) பூரனானந்தம் குகதாசன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் தம் ஓய்வுக்காலத்தில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வளர,வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(21615)(6.7.8)

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
சக உத்தியோகத்தரும், யாழ். கல்வி வலயம்

---

## தசாகமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



நிகழும் நந்தன வருஷம் ஆடித்திங்கள் 15ஆம் நாள் (30.07.2012) திங்கட்கிழமை ஸ்ரீ நலகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஸ்வாமி திருவடி நிழலில் சரண் புகுந்த எங்கள் குடும்ப தீபம் அமரர் ஸ்ரீமதி நகுலேஸ்வரக் குருக்கள் வேதநாயகி அம்மா அவர்களின் ஆத்ம சாந்தி தசாகக் கிரியைகள்

*ஆடி 24 ஆம் நாள் (08.08.2012) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்றன.*

நாளை மறுதினம் ஆடி 28 ஆம் நாள் (12.08.2012) ஞாயிறு நகுலேஸ்வர சுவாமி சந்நிதியில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அமரர் நினைவாக நகுலேஸ் வரம் வரலாற்று நூல் வெளியீடும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சேந்தான்குளம் வீதி,
இளவாலை.

ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர்.
நகுலேஸ்வர ஆதீனம்.

(21460)(5-6-7)

---

# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பவதி கனகரத்தினம் (நயினாதீவு)



நயினாதீவு 5A வட்டாரம், கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல. 17/12, சந்தனமாதா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி கனகரத்தினம் நேற்று முன்தினம் (08.08.2012) புதன்கிழமை இரவு கால மானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நல்லையா - தங்கமுத்து தம்பதியரின் மக ளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரெத்தினத்தின் பாசமிகு மனைவியும் திருஞானவதி (ஆசிரியை -யா/துரையப்பா ம.வி), சிவஞானம் (ஆசிரியர்- யாழ். இந்து ஆரம்பபாடசாலை), மகேந்திரன் (ஆசிரியர் - லண்டன்), ரோகினி (ஆசிரியை - லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், கணேஸ்வரன் (அதிபர்- யா/ அரியாலை பூம்புகார் அ.த.க.வித்), கலாவதி (ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரேமலதா (லண்டன்), பஞ்சானந்தராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், உமாலக்சி, அமுதீசன், கஜானன், சிந்துரா, லக்சனா, சந்தியா, ஆதித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இரகுப்பிள்ளை (தர்மகர்த்தா, நயினாதீவு காட்டுக் கந்தசாமி கோயில்), கார்த்திகேசு (பிரபல வர்த்தகர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகேசு, சதாசிவம், நல்லையாபிள்ளை, கோபாலபிள்ளை, சிவசிதம்பரம், கனகாம்பிகை, செல்வராணி மற்றும் யோகம்மா, புனிதவதி, சுந்தராம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணபதிப்பிள்ளை - இலட்சுமி, காலஞ் சென்றவர் களான முத்தையா - இலக்குமியம்மா, பழனிச்சாமி - தங்கமணி, அம்பலவாணர் - நாகம்மா தம்பதியரின் அருமைச் சம்பந்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/12, சந்தனமாதா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,

தகவல்:
க. கணேஸ்வரன் (மருமகன்),
க. திருஞானவதி (மகள்),
க. சிவஞானம் (மகன்),
க. மகேந்திரன் (மகன்),
ப. ரோகினி (மகள்).

(21602) (45.6.7)

# சுகாதாரத் தொண்டர்கள் வாழ்வில் ஒளிவீச விடுங்கள்

"சுத்தம் சுகம் தரும்'' அந்த சுத்தத்தை எமது சுற்றாடலில் மேற்கொள்வதற்குத்தான் சுகாதாரப் பிரிவு செயற்படுகிறது. கண்டிப்பாக இந்தப் பிரிவு செயற்படுவது எமது பிரதேசத்தை சுத்தமாக வைத்திருக்கவும் அதேவேளை டெங்கு, மலேரியா போன்ற நோய்களில் இருந்து நம்மை பாதுகாக்கவும் உதவுகிறது. மேலும் பிள்ளை பெற்ற தாய் சேய் நலன் கவனிப்பும் முக்கியமாகிறது. இந்தப் பிரிவில் தொழில் செய்பவர்கள் அனைவரையும் பாராட்டவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆனால் இந்தத் தொழிலை சேவையாக சம்பளமே இல்லாமல் மேற்கொள்ளும் சுகாதாரத் தொண்டர்களைப் பற்றி அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா ?

வடமராட்சிப் பகுதி ஒன்றில் வசிக்கும் ஒரு யுவதி பல வருடங்களாக சுகாதார தொண்டராக பணியாற்றி வருகிறாள். ஒவ்வொரு நாளும் கஷ்டத்துடன் வேலைக்கு வந்து போகிறாள். எவ்வளவு கஷ்டமான விடயம் என்றாலும் சேவை நோக்காகக் கொண்டு இதனைச் செய்வதால் அடிக்கடி அவளது மனம் ஆறுதலடையும். அவள் தன்னால் முடிந்த சேவையை வடமராட்சிப் பகுதியில் உள்ள ஒரு சுகாதாரப் பிரிவுப் பணிமனையில் இருந்து வழங்கி வருகிறாள். அந்தப் பிரதேசங்களில் இருக்கும் அனைத்து இடங்களுக்கும் சென்று அந்த ஊரினை துப்புரவாக இருக்க வைப்பதற்கான பணியினையும், பிள்ளை பெற்ற தாய் சேய் கவனிப்பினையும் செய்து வருகிறாள்.

பிள்ளைகளுக்கு நிறை எடுப்பதில் இருந்து, ஊட்டச் சத்து மா கொடுப்பது, அவர்களது வீடுகளுக்கு செல்வது வரை அவள் பணி தொடர்கிறது. அந்தப் பணிக்கு உணவுப்பொருள்கள்தான் ஊதியமாகக் கிடைக்கிறது. 6 வருடங்கள் கடந்து விட்டன . இந்தத் தொழிலே அவளின் வாழ்வாதாரத் தொழிலாகும். மற்றும்படி அவளுக்கு என்று பணம் சம்பாதிக்கக் கூடிய வழியில்லை. அவளால், காண்பவர்கள் எல்லோருக்கும் தன் நிலைமையை சொல்வதும் கண்ணீர் விடுவதும் தான் கூடவாக இருக்கிறது.........

கடந்த திங்கட்கிழமை புதிதாக சுகாதார பணியாளர்கள் யாழ். மாவட்டத்தில் சகல சுகாதாரப் பணிமனை அலுவலகங்களிலும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களுக்கு 6,000 ரூபா சம்பளமும் வழங்கப்படவுள்ளது. சில அரசியல்வாதிகளால் இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அரசியல்வாதிகளுக்கு வேண்டப்பட்டவர்கள் போலும் . 6 வருடங்கள் சம்பளமே எடுக்காமல் உணவுப் பொருள்களையே ஊதியமாக பெற்று வந்த இவள் போன்ற பலருக்கு இந்த நியமனம் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே 10 வருடங்களுக்கு மேல் சுகாதாரத தொண்டர்களாகப் பணியாற்றிய சுமார் 150 பேர் சுகாதாரப் பணியாளர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர். உள்வாங்கப்படாமல் சுமார் 100 பேருக்கு மேல் இது வரை சுகாதாரத் தொண்டர்களாக பல வருடங்களாக பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் விடயத்தில் அரசியல் வாதிகளோ, அரச அதிகாரிகளோ அக்கறை எடுக்காமல் இருப்பதுதான் கவலை தரும் விடயமாகும். கைவிடப்பட்ட சுகாதார தொண்டர்கள் தம்மை உள்வாங்குவார்களா என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் தனது சேவையை செய்வதற்காக அலுவலகத்துக்கு வந்து செல்லும் அவளின் வாழ்வில் வெளியே சொல்ல முடியாத சோகங்கள் இழையோடி இருக்கின்றன. திருமணம் ஆகவேண்டிய வயதில் இதுவரையில் தனக்கென்று ஒன்றுமே சேர்க்க முடியாமல் இந்த சமுகத்துக்கு சேவை செய்திருக்கிறாள். ஒன்றுமே இல்லாமல் ஒரு பெண் ஒரு ஆணை எப்படி திருமணம் செய்ய முடியும்? அவள் வயதில் இதனை நினைத்தால் எதிர்வரும் நாள்களே பிரளயமாகத் தோன்றும். அதை நினைக்காமல் இருக்கவும் முடியாமல் அவள் வாழ் நாள் ரணகளப்படுகின்றது.

தாதியருடன் கூட நின்று ஒத்தாசை செய்து பிறந்த குழந்தைகளின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றும் இவளைப் போன்ற பல பெண்களின் வாழ்வில் ஒரு வளர்ச்சியை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்? இது சொல்லித் தெரிவதில்லை. பொறுப்பு வாய்ந்தவர்கள் பொறுப்புடன் நடந்தால் இவர்களின் வாழ்வில் ஒளி வீசும். ஒரு சில அரசியல் வாதிகளுக்கு இவர்களின் கண்ணீர் பெறுமதியாகத் தெரியவில்லையா? சமுகத்துக்கு நல்லது செய்ய வந்த அரசியல்வாதிகள் இவர்களின் தொழில் சம்பந்தமாக ஒரு நல்ல முடிவு எடுப்பார்களா?

சுகாதாரத் தொண்டர்கள் எனும் போர்வையில் 105 பேருக்கு இரகசிய முறையில் மன்னாரில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் அறிந்தோம். அரச தரப்பு அமைச்சர் ஒருவரின் அனுசரணையிலேயே இந்த நியமனங்கள் அவரின் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற இந்த நியமனம் வழங்கும் நிகழ்வில் ஒரு சில அரச அதிகாரிகள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். கடந்த தேர்தல் காலங்களில் குறித்த அரசியல்வாதிக்கு ஆதரவாகப் பணியாற்றியோருக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

மன்னாரில் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் உரிய தகமைகள் இருந்தும் வேலை வாய்ப்பின்றி வருடக்கணக்கில் காத்திருக்கின்ற நிலையில் இவ்வாறு உள்வீட்டு முறையில் இரகசியமாய் தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் நியமனங்களை ஒரு சில அரசியல்வாதிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதேபோல தான் நியமனங்களில் குளறுபடிகள் யாழ்ப் பாணத்திலும் இடம்பெறுகின்றன.

## கோப்பாய் சண்முகம்

### கதையோடு செய்தி

உலகின் தலைசிறந்த சுகாதார தொண்டர்கள் 10 பேரில் ஒருவராக இலங்கையர் ஒருவர் தெரிவாகி இருந்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயம். மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான மெதகமவில் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக குடும்ப நல உத்தியோகத்தராக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறார் அவர். Global health work force Alliance என்கிற அமைப்புத்தான் உலகின் தலை சிறந்த சுகாதார தொண்டர்கள் 10 பேரை தெரிவு செய்து விருது வழங்குகின்றது. 27 நாடுகளில் இருந்து 58 பேர் இறுதித் தேர்வில் பரிசீலிக்கப்பட்டனர்.

இப்படியாக சுகாதார தொண்டர் சேவையை பாராட்டியும் அதன் மதிப்பை வெளியுலகுக்கு கொண்டு வருவதில் பல அமைப் புக்கள் முயற்சி செய்து வருகின்ற போது, இந்த சேவையின் தார்ப்பரியம் தெரியாதவர்கள் அந்தச் சேவையில் ஈடுபடுபவர்களின் வாழ்வில் விளையாடுகின்றனர்.

தமக்குத் தெரிந்தவர் என்று பாராமல் இந்தச் சமுகத்துக்கு வேண்டப்பட்டவர்கள் என்று பார்த்து இவர்களின் நியமனங்களில் அக்கறை கொண்டு செயற்படுவார்களாயின் இவர்களின் வாழ்வில் ஒளிவீசும்.

## கிராம அபிவிருத்தி சங்கங்களில் கணக்காய்வுப் பணி ஆரம்பம்

நவாலி, ஓக.10

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப் பட்டு வருகின்றது. இந்தப் பணிகளை பிரதேச செயலகத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது கணக்கு அறிக்கைகளை தயார் செய்து வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(3-100)

## மணிவிழா வாழ்த்து



யாழ்.கல்விவலய ஆரம்பக்கல்வி
உதவிக்கல்விப் பணிப்பாளர்
திரு.பூ.குகதாசன்
அவர்களுக்கு எமது மணி விழா வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பாடசாலைச்சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
(21437) (2-6-7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் விதையாய்
20 ★ 01 ★ 1993

விண்ணில் விருட்சமாய்
22 ★ 08 ★ 2011

### செல்வன் செல்வராசா ஜனகன்

(A/L 2011 மாணவன் - யாழ். இந்துக்கல்லூரி)

செல்வச் சிரிப்பில் நனையவைத்து
நல் உள்ளமதில் உருக வைத்து
கல்விச் செல்வத்தை அள்ளிப்பருகும் வேளை
காலனின் அழைப்பு ஒலித்ததேனோ
இளமை எனும் இன்பப்பருவமதில்
இனித்திடும் இத்தருணத்தில்
கொடியநோய் உன் உயிரைப் பறித்து
ஆண்டொன்று ஆகியும் ஆறவில்லை எம் துயரம்

கலைமகள் வீதி, அரியாலை.
குடும்பத்தினர்.
(21610)(6.7.8)

## துர்க்கையம்மன் திருவிழாவில் மருத்துவ வசதிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.10

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் திருவிழாக்காலத்தில் பக்தர்களின் மருத்துவ வசதிகளைக் கவனிப்பதற்கான நடவடிக்கைகள் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிமருத்துவர் ப. நந்தகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்திருவிழாவும், 28 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் நாள்களில் இந்த மருத்துவச் சிகிச்சை வழங்கப்படவுள்ளது. இந்த இரு நாள்களும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இங்கு வைத்திய சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.(3-300)

## ஒன்றுகூடல்

கடந்த 2011 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிக்கான நேர் முகத்தேர்வில் தோற்றி தேவையான தகுதி இருந்தும் நியமனக் கடிதம் கிடைக்காத அனைவரையும் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடுமாறு வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு இணைப்பாளர் பி.என். சுதர்சன் அறிவித்துள்ளார். இவர்கள் இந்த ஒன்று கூடலுக்கு சமுகமளிக்கும்போது நேர்முகத் தேர்வுக்கான கடிதம், கல்விச் சான்றிதழ்களுடன் வருகைதரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (3)

## வீடு விற்பனைக்கு

இல.807, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணத்தில் 3 பரப்புக்
காணியுடன் கூடிய வீடு உடனடியாக
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
0775095202, 0773893953
(21601) (2-6-7)

## மணமகன் தேவை

1969 இல் பிறந்த உயர் இந்து கௌரவ குடும்பம் ரேவதி நட்சத்திரம், கிரகபாவம் 44 ¼, 2 இல் செவ்வாயுடைய அரச சுருக்கெழுத்தாளருக்குத் தகுதியான மணமகனை எதிர்பார்க்கின்றனர். சகோதரர்கள் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளனர். போவதற்கிடையில் ஒழுங்கொன்றை மேற்கொள்வதற்கு முன் வந்துள்ளனர்.
தொடர்பு:-0779013850, 021 2053065
(21490) (2-6-7)

## மூன்றாண்டு நினைவுகளுடன்



தோற்றம்
18 ★ 07 ★ 1936

மறைவு
13 ★ 08 ★ 2009

### அமரர் சுப்பையா வைத்திலிங்கம்

மூன்று ஆண்டுகள் சென்றதப்பா
மூவுலகு தான் சென்றீரோ
எண்ணம் எல்லாம் எமக்காக இருந்து
மூவிரண்டு செல்வங்களையும் முத்தாக்கினீரே
வருடம் மூன்று அனாலும் அப்பா
உங்கள் பிரிவின் துயரம் மாறாது அப்பா
ஆண்டு எத்தனை சென்றாலும்
அன்பு உயிர் அப்பாவைத் தேடுகின்றோம்
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனடி வேண்டுகின்றோம்.

கோபுரம் அரிசி ஆலை (வவுனியா),
கோயில் வாசல், இணுவில் மேற்கு, இணுவில்.
குடும்பத்தினர்
(21500)(6.7.8)

# ஆற்றல்மிகு கஸியோ கமரா




கஸியோ நிறுவனம் அதிவேக கமரா ஒன்றை மிக விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது. இந்த கமராவுக்கு எக்ஸீலிம் இ.எக்ஸ். ஸட்ஆர்300 மினி ரி.வி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கமரா மிகவும் அகலமான 24எம்.எம். வகை லென்ஸைக் கொண்டிருக்கிறது. அத்துடன் இதில் ஒரு 12.5எக்ஸ் சூம் மற்றும் ரேபிட் சட்டரும் இருக்கின்றன.

இந்த கமராவில் தொடர் ரிலீஸ் தொழில் நுட்பம் உள்ளதால், இடைவெளியில்லாமல் இந்தக் கமராவில் போட்டோ எடுக்க முடியும். இந்தபற்றரி 500 புகைப்படங்களை எடுக்கும் அளவுக்கு மின் திறனைக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த பற்றரியில் ஐ-பை மற்றும் ப்ளாஷ் ஏர் போன்ற தொழில் நுட்பங்கள் உள்ளதால் இது எடுக்கும் புகைப்படங்களை வயர்லஸ் வழியாக ஸ்மார்ட்போன்கள் மற்றும் கணினிகளுக்கு பரிமாற்றம் செய்ய முடியும்.

இந்தக்கமரா அதிவேகமாகப் பதிவு செய்யும் திறன் கொண்டது. அதோடு இதில் ப்ரீமியம் தானியங்கி மூவி பங்சன் மற்றும் எச்.டி.ஆர். தொழில் நுட்பம் ஆகியவை உள்ளதால் இது எடுக்கும் புகைப்படங்ளை மிக எளிதாக செம்மையாக்கம் செய்ய முடியும். மேலும் இந்த கமரா எச்.எஸ். நைட் சீன் தொழில் நுட்பம் கொண்டிருப்பதால் இருட்டிலும் மிகத் தெளிவான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுக்க உதவும்.

குறிப்பாக மிகத் தூரத்தில் உள்ளவற்றைக் கூட இந்தக் கமரா மிகத் துல்லியமாகப் படம் பிடிக்கும். மேலும் இது ஸ்லைட் பனோரமா கொண்டிருப்பதால் 360 டிகிரி கோணத்தில் படங்களை எடுக்க முடியும். இந்த கமராவில் எச்.டி. வீடியோ பதிவு செய்யும் வசதியும் உண்டு. மேலும் இந்த கமரா கறுப்பு, வெள்ளை, தங்கம் மற்றும் சிவப்பு ஆகிய நிறங்களில் உள்ளது.

# நொக்கியாவின் புதிய அறிமுகம்




பிரபல கைப்பேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் நொக்கியா கோப்பரேசன் அண்டச் 305 எனும் டுவல் சிம் கைப்பேசிகளை புதிதாக அறிமுகம் செய்துள்ளது. தொடுதிரை வசதியைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக் கைப்பேசிகளை பயன்படுத்தும் போது, அன்ரோயிட் இயங்குதளங்களில் செயற்படும் கைப்பேசிகளை பயன்படுத்துவதற்கு இணையான அனுபவத்தை பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பெயர்மாறும் ஹொட்மெயில்

Windows Live Hotmail

உலகப் புகழ்பெற்ற மைக்ரோசொப்ட் நிறுவனம் 32.4 கோடி பேர் பயன்படுத்தும் மின்னஞ்சல் சேவையான ஹொட்மெயிலுக்கு, அவுட்லுக் என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. இதுமட்டுமல்லாமல் புதிய வசதிகளை யும் அறிமுகப்படுத்தி உள்ளது.

இன்று அனைவராலும் எளிதாகப் பயன்படுத்தப்படுவது பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்கள் தான். இந்த அவுட்லுக் மின்னஞ்சல் சேவையில் பேஸ்புக் சாட் வசதியைப் பெறலாம். அத்துடன் பேஸ்புக், டுவிட்டரில் இருந்து வரும் தகவல்களையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

வேர்ட்ஸ், எக்ஸெல், பவர்பொய்ன்ட் போன்ற பக்கங்களில் அவுட்லுக் மூலம் எளிதாக செம்மை யாக்கம் செய்யவோ, ஷேர் செய்யவோ முடியும். அவுட்லுக்கில் இணைக்கப்படும் புகைப்படங்களை ஸ்லைடு ஷோவில் பார்க்க முடியும். இன்னும் ஒரு முக்கிய வசதியாக ஸ்கைப் வீடியோ அழைப்பு வசதியை இந்த மைக்ரோசாஃப்ட் அவுட்லுக்கில் பெறலாம். ஆனால் இந்த ஸ்கைப் வீடியோ அழைப்பு வசதியை, இன்னொரு ஸ்கைப் வீடியோ அழைப்பு வசதி கொண்டவருடன்தான் பயன்படுத்த முடியும். சபீர் பாட்யா மற்றும் ஜேக் ஸ்மித் ஆகிய இருவரும் 1996ஆம் ஆண்டில் உருவாக்கிய இந்த ஹொட்மெயில் சேவையை, மைக்ரோசொப்ட் நிறுவனம் 1997ஆம் ஆண்டில் 40 கோடி டொலருக்கு வாங்கியது குறிப்பிடத் தக்கது.




சமூக வலைத்தளங்கள் மத்தியில் சிகரமாகத் திகழும் பேஸ்புக் இணையத்தளமானது சம கால இடைவெளியில் அதன் பயனர்களுக்கு பல்வேறு புதிய நுட்பங்களையும், புதிய அம்சங்களையும் அறிமுகப்படுத்தி வருகின்றது.

அதன் அடிப்படையில் தற்போது Facebook Stories எனும் புதிய இணையத்தளம் ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்துகின்றது.

இந்தத் தளத்தில் பேஸ்புக் தளத்தில் பல்வேறு பயனர்களால் பகிரப்படும் சுவாரஸ்யமான செய்திகளை அல்லது கதைகளை ஒன்றிணைத்து ஒவ்வொரு மாதங்களும் வேறுபட்ட கருப்பொருள்களை உள்ளடக்கியவாறு வெளியிட தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாதனை படைக்கிறது சாம்ஸங் கலக்ஸி

ஏனைய ஸ்மார்ட் போன்களை விடவும் சாம்ஸங் கலக்ஸி எஸ் 3 கைத் தொலைபேசிகள் விற்பனையில் சாதனை படைத்து வருகின்றன.

சாம்ஸங் நிறுவனத்திற்கு எதிரான அப்பிள் நிறுவனத்தின் வழக்கு, அப்பிள் நிறுவனத்தின் அடுத்த புதிய ஐபோன் வர இருப்பது குறித்த தகவல் என எத்தனை சிரமங்கள் இருந்தாலும் சாம்ஸங் கலக்ஸி எஸ் 3 தன் விற்பனையில் புதிய இலக்குகளை எட்டியுள்வது.

நாளொன்றுக்கு ஏறத்தாழ ஒரு லட்சத்து 90 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் கலக்ஸி எஸ் 3 விற்பனையாகிறது.

மே மாதம் 29ஆம் திகதி அறிமுகமாகி, சர்வதேச அளவில் இரண்டே மாதங்களில், ஒரு கோடி என்ற இலக்கினை எளிதாக அடைந்து தொடர்ந்து இதன் விற்பனை உயர்ந்து வருகிறது.

அடுத்த அப்பிள் ஐ போன் வர குறைந்தது ஒரு மாதம் ஆகும் என்பதால் இதன் விற்பனை பல புதிய இலக்குகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை அடைய சாம்ஸங் கேலக்ஸி எஸ் 2 ஸ்மார்ட் போனுக்கு ஐந்து மாதங்கள் ஆயின என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்ரோயிட்டின் புதிய பதிப்பு

ஏனைய இயங்குதளங்களுக்குப் போட்டியாக கூகுள் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அன்ரோயிட் இயங்குதளத்தின் புதிய பதிப்பு வெளிவரவுள்ள நிலையில் சில தகவல்கள் கசிந்துள்ளன.

இந்நிலையில் Android 4.1 Jelly Bean என அழைக்கப்படும் இப்புதிய பதிப்பில் முன்னயை பதிப்புக்களில் காணப்படாத பல் பயனர்கள் நுழைவுக்குரிய கணக்குகளை உருவாக்கும் வசதி விசேடமாகத் தரப்பட்டுள்ளது.

இப்புதிய வசதி காரணமாக இவ் இயங்குதளத்தை பயன்படுத்துவதற்கான கேள்வி அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களின் பாதுகாப்பும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எல்.ஜியின் புதிய வரவு




ஏனைய முன்னணி கைப்பேசிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்குப் போட்டியாக கைப்பேசிகளை உற்பத்தி செய்து வருவதில் முனைப்புக்காட்டும் நிறுவனமான LG ஆனது டுவல் சிம் வசதிகளை உள்ளடக்கிய புதிய Optimus L3 கைப்பேசிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.


டுவல் சிம் தவிர 3 மெகாபிக்சல் கமரா, 800 மெகா ஹேர்ட்ஸ் புரோசசர், 384 மெகாபைட் அளவுகொண்ட RAM ஆகியவற்றையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் Android 2.3 Gingerbread இயங்கு தளத்தில் செயற்படவுள்ளது.

# குரோமின் சூழலை மாற்றியமைப்பதற்கு

அதிகளவான இணையப் பாவனையாளர்களால் பயன்படுத்தப்படும் உலாவிகளில் ஒன்றான குரோம் உலாவியின் சூழலை (theme) மாற்றியமைப்பதற்கான வசதி குறித்த உலாவியில் தரப்பட்டுள்ள போதும் அதில் பயனர் விரும்பியவாறு மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. எனினும் தற்போது இவ்வசதியை ஏற்படுத்தித்தரும் Theme Creator எனும் குரோம் நீட்சி ஒன்று காணப்படுகின்றது. இதனைத் தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிக் கொள்வதன் மூலம் பயனர் விரும்பியவாறு தீம்களை உருவாக்கிக் கொள்ள முடியும். அதாவது பின்னணிப் படங்கள், வர்ணங்கள் போன்றவற்றை மாற்றியமைக்க முடிவதோடு frame, tab ஆகியவற்றின் நிறங்களையும் விரும்பியவாறு மாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இணையத் தள முகவரி https://chrome.google.com






பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தமிழக மீனவர்கள் ஒத்துழைத்தால் பிரச்சினையின்றி தொழில் செய்யலாம்

இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினையின்றி தொழில் செய்வது தமிழக மீனவர்களின் கையில் தான் உள்ளது.

இவ்வாறு இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசகர் அந்தோனி முத்து தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை இராமேஸ்வரத்தில் அனைத்து மீனவர் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்ததை அடுத்து இப்போது தான் இலங்கை மீனவர்கள், மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழக மீனவர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

பாக்கு நீரிணையில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதை வீடியோ ஆதாரத்துடன் நிரூபித்து காண்பிக்கப்பட்டது. எனினும் இந்தப் பிரச்சினை இப்பொழுதும் தொடர்கிறது. தடை செய்யப்பட்ட வலைகள், கண்ணி வெடிகளுக்குச் சமம். இதனால் கடல் வளம் அழிவதுடன் எதிர்காலத்தில் கடலில் பல ஆபத்துக்கள் உருவாகும்.

இதனால் தடை செய்யப்பட்ட வலைகளை மீனவர்கள் கைவிட வேண்டும். இந்திய - இலங்கை மீனவர்களின் ஒத்துழைப்பில் 'சமுதாய மேடை' எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. எனினும் அந்த அமைப்பு தூங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அமைப்பை மீள இயங்க வைக்க வேண்டும்.

இரு நாட்டு மீனவர்களும் கடற்பகுதியில் பிரச்சினையின்றி தொழில் செய்வது தமிழக மீனவர்கள் கையில் தான் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (3)



ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் போது பிடாரி அம்மன் வீதி வலம் வருகின்றார். (3-555)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற வருடாந்த தேவி பெருந்திருவிழாவில் அம்பாள் தேரிலே பவனி வருகின்றார். (3-250)

## சாதாரணதர மாணவருக்கு இலவசக்கருத்தரங்கு

கொழும்பு அருள்கல்வி வட்ட அனுசரணையுடன் வலி.மேற்கில் சாதாரணதர மாணவருக்கான இலவசக் கருத்தரங்கு நாளை சனிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலை சீருடையில் காலை 8 மணிக்கு பொறுப்பு வாய்ந்த ஆசிரியர் சகிதம் கல்லூரியின் ஒட்லி மண்டபத்துக்கு வருகை தருமாறு இணைப்பாளர் ஐங்கரன் தெரிவித்துள்ளார். (ம-115)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லை ஆதீனகுருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் 'செந்தில் வேலவன்' இடம் பெறவுள்ளது. (3)

* * *

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் பதினெட்டாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ எஸ். சிவகுமாரசர்மாவின் மெண்டலின் கச்சேரி நடைபெறவுள்ளது. வயலின் - ஆர்.ராதா கிருஷ்ணன், மிருதங்கம்- கே. கண்ணதாசன்,தவில் - எஸ். அஜந்தன். (3-14-86)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பேராசிரியர் ஆர். சண்முகதாஸ் "திருப்பெரும் வடிவம்' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் கலாபூஷணம் சிவ மகாலிங்கம் 'தெய்வ வாசகம்' என்னும் கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து மல்லாகம் பழம்பதி அறநெறிப்பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலைநிகழ்வுகளும், சிறப்பு நிகழ்ச்சியாக செல்வி கங்கா நந்தியின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

(3-7-86)


* * *

இசையால் வசமாக இதயமேது என்ற தலைப்பில் தெய்வீக இசையரங்கு நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (3)

* * *

யாழ். சின்மிய மிஷன் சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கும் ஆன்மீக அருளுரைகள் ஆரம்ப நிகழ்வு மாலை 7 மணிக்கு மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "கார்த்திகேயா! கலியுகவரதா! கருணை புரிந்திடுவாய்" எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ஜாக்ரத சைதன்யா ஆன்மீக உரை நிகழத்துவார். (3-14)



மட்டுவில் வடக்கு தான்தோன்றி மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவில் விநாயகப் பெருமான் தேரில் வீதியுலா வருகிறார். (3-9)

## ஆசிரிய ஆலோசகர்களுக்கு விண்ணப்பம்

வலிகாமம், வலயக்கல்வி அலுவலகத்தால் ஆரம்பக் கல்வி, தமிழ், சுகாதாரமும் உடற்கல்வியும், தொழில் நுட்பம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு ஒன்று, அல்லது வகுப்பு 2-1 ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம். விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் பாடத்தில் 7 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவத்தை கொண்டிருப்பதோடு பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராகவும் இருக்க வேண்டும். அல்லது விண்ணப்பிக்கும் பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்கு குறையாது தரம் 6-11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கவேண்டும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# நல்லூரில் தயார் நிலையில் அம்புலன்ஸ்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிலையத்தால் ஆலயத்தின் மேற்கு வீதியில் 24 மணிநேர முதலுதவி சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

ஆலயச் சூழலில் உண்டாகும் விபத்துகள் மற்றும் பொதுமக்களுக்கு உண்டாகும் திடீர் நோய்களுக்கு உடனடி மருத்துவத் தேவையை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் நிலையத்தைச் சேர்ந்த 35 தொண்டர்கள் சுழற்சி முறையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திருவிழாக் காலத்தில் 24 மணி நேரமும் அம்புலன்ஸ் வாகனம் ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முதலுதவி நிலையத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலயச் சுற்றாடலில் வசிக்கும் மக்களின் மருத்துவத் தேவையை இலகுபடுத்தும் நோக்குடனும் இந்த அம்புலன்ஸ் சேவை வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் மாற்று வழிப் பாதைகள் தற்போது போக்குவரத்து தேவைக்காக விடப்பட்டுள்ளதால் உடனடி மருத்துவம் தேவைப்படுபவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளுக்கு இந்த சேவை பயனுடையதாக இருக்கும்.

எனவே ஆலயத்தில், ஆலயச் சுற்றாடலில் உள்ள மக்கள் 021-3214444 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அவசர அம்புலன்ஸ் சேவையைப் பெறமுடியும் என நிலைய ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-14)



கீரிமலை வலிதூண்டல் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருப்பலி உற்சவத்தின்போது, அன்னம்மா திருச்சொரூப பவனி வருகிறார். (3-86)

## வழிகாட்டல் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு இளைஞர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 2.30மணி வரை மானிப்பாயில் அமைந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-100)

## ஆனந்தமே வாழ்க்கை

ஆனந்தம் என்ற அடித்தளம் உறுதியாக இருந்தால்தான் அதன்மீது உங்கள் வாழ்வு என்ற மாளிகை மலர முடியும். வாழ்வின் அடித்தளமான ஆனந்தம் உங்களிடம் தான் உருவாகவேண்டும். இந்த உண்மையை உணராமல், அதைத் தேடி எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

அடித்தளமே இல்லாத ஒரு வீட்டில் குடியிருப்பது எவ்வளவு ஆபத்தான விடயம் அல்லவா? வீட்டின் கூரையை கையில் தாங்கிக் கொண்டே உங்களால் எவ்வளவு நேரம் இருக்கமுடியும்? சற்றுநேரம் நீங்கள் தளர்ந்தால், உங்கள் தலை மேலேதான் எல்லாம் வந்து விழும்... இல்லையா? நிலையான அத்திபாரம் அமைந்தால் அதன்மீது எவ்வளவு பெரிய மாளிகையையும் நீங்கள் கட்டிக்கொள்ளலாம். வாழ்க்கையும் இப்படித்தான். நீங்கள் ஆனந்தமாக இருந்தால், உங்கள் விருப்பப்படியான ஒரு வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ளலாம்.




## இந்திய குடியரசு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்- பலாலி வீதியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இந்தியாவின் குடியரசு தின நிகழ்வு எதிர் வரும் 15 ஆம்திகதி புதன் கிழமை காலை9மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் இங்குள்ள இந்தியப் பிரஜைகளையும் கலந்து கொள்ளுமாறு இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைச் செயலர் சுரேஸ் கே. மேனன் தெரிவித்துள்ளார். (3)



பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழாவின்போது புனித அன்னம்மாளின் திருச்சொரூபம் பவனியாக எடுத்து வரப்படுகிறது. (3-135)

# மின்னொளி வி.க. கரப்பந்து இறுதியாட்டங்கள் இன்றிரவு



புத்தூர் கலைமதி வி.க.

யாழ்ப்பாணம்,ஓக.10

கைதடி தெற்கு சனமுக நிலையத்தின் 57 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியிலும்,தென்மராட்சிபிரதேச ரீதியிலும் நடத்தி வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மின்னொளி விளையாட்டக் கழகத்தின் தலைவர் வே. இராகுலன் தலைமையில் இடம் பெறவுள்ளது.வடமாகாண ரீதியாக இடம்பெறவுள்ள கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங் கால் இந்து இளைஞர் விளையாட்டக்கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதவுள் ளது. தொடர்ந்து இடம்பெறும் தென்மராட்சி ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட் டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டமெய்வன்மை பயிற்றுனர் கே. முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக நுணாவில் இராணுவ கட்டளை அதிகாரி கேணல் பண்டார, கிளிநொச்சிமாவட்ட கரப்பந் தாட்ட பயிற்றுனர் எஸ். சதீஸ்குமார், யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கி.மனோகரன் மற்றும் திருமதி உதயச் சந்திரன், சி.சின்னத்துரை, கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி விளையாட்டு உத்தியோகஸ்தர் எல்.அனுராகாந்தன், யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் ரி.நித்திலநாயகம், யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் எஸ். அப்புத்துரை, ஆசிரியர் எஸ் மதியழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ங-23)



ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.10

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந் தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையி லான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம்பெறும் லீக் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணி களின் விவரம் வருமாறு -

**பிற்பகல் 3.30 மணி**

வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்

**பிற்பகல் 4.30 மணி**

இளவாலை சென். லூட்ஸ்விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் .

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையு டன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையி லான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப. 4 மணி**

நக்கீரன் விளையாட்டுக் கழகம் எதிர் கலைவாணி விளையாட்டுக் கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப. 3.30 மணி**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி எதிர் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக ''பி'' அணி

**பி.ப 4.30 மணி**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி எதிர் அராலி சில்வெஸ்ரா '' பி'' அணி

* * *

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் பாஷையூர் மக்கள் படை அணி நடத்தும் உள்ளூர் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பாஷையூர் சென். அன்ர னிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

முதலாவதாக இடம் பெறும் ஆட்டத்தில் வீனஸ் அணி யையை எதிர்த்து தண்டர்ஸ் அணி மோதவுள்ளது.

இரண்டாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் யூப்பிற்றர்ஸ் அணியை எதிர்த்து ஆதவன் அணி மோதும். (ங-23)

# நாமகள் வெற்றிக் கிண்ண உதைபந்து முடிவுகள் சில

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத் தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் சில வற்றின் முடிவுகள் வருமாறு -

அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஆனைக்கோட்டை யூனி யன் 1:0 என்ற கோல்க ணக்கில் வெற்றிபெற்றது.

விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக் கும் நவாலி சென்.பீற்றஸ் அணிக்கும் இடையில் இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் விளான் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 7:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

குப்பிளான் ஞானகலா விளையாட்டுக்கழக அணிக் கும்,இளவாலை சென். லூட் விளையாட்டுக்கழக அணிக் கும் இடையிலான ஆட்டத் தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

குப்பிளான் ஞான கலா விளையாட்டுக்கழக''பி'' அணி அராலி மாவத்தை விளை யாட்டுக்கழக அணிகளுக் கிடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோலை மாத்திரமே பெற்றதினால் ஆட்டம் சமநி லையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண் பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

விளான் சென். அன்ரனிஸ் விளையாட் டுக்கழக அணிக்கும் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

(ங-23)

# றோயல்,ஹென்றிஸ் வென்றன அபாரமாக

யாழ்ப்பாணம்,ஓக10

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந் தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையி லான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு -

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் போட்டியில் சம பலத்துடன் மோதிக் கொண்டன. எனினும் அனுபவ் வீரர்களை அதிகமாகக் கொண்டுள்ள ஊரெழு றோயல் அணி, ஆட்டத்தை தன் கைக்கு எடுத்துக் கொண்டது. 3 கோல்களை அந்த அணி அடித்து ஆட்டத்தில் முன்னிலை பெற்றது. பதிலுக்கு ஒரு கோல் அடித்த போதும், வெற்றியை நோக்கி நகர முடி யவில்லை. இறுதியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 3: 1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்திலும் அனல் பறந்தது. ஆயினும் இறுதியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 6:3 என்ற கோல்கணக்கில் சென்.லூட்ஸ் அணியை தோற்கடித்தது

(ங-8-23)

# கலக்கியது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம்,ஓக 10

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையு டன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையி லான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

போட்டியின் ஆரம்பத்தில் இருந்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியின் ஆட்டத்துக்கு முன்னால் அல்வாய் நண்பர்கள் அணி திணறத் தொடங்கியது. எதிர் அணியின் தடுமாற்றத்தை தமக்குச் சாதகமாகப்பயன் படுத்திக் கொண்ட யங்கம்பன்ஸ் அணியினர் அடுத்தடுத்து கோல்களை அடித்து அசத்தினர்.

ஆட்ட நேர நிறைவில் யங்கம்பன்ஸ் அணி 4:0 என்ற கோல்கணக்கில் அல்வாய் நண்பர்கள் அணியை வீழ்த்தி,வெற்றியைச் சுவைத்தது. (ங-23)



வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்துறையை வளர்க்கும்முகமாக நேற்று வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ''உதைபந்தாட்ட விழா-2012'' நிகழ்வு இடம்பெற்றது.ஆரம்ப நிகழ்வில் யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் அன்ரனிப்பிள்ளை உரையாற்றுவதையும் , நிகழ்வில் கலந்து கொண்ட

# தகர்ந்தது தங்கக் கனவு

லண்டன் ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டியின் அரையிறுதியில் இந்திய வீராங்கனை மேரிகோம் தோல்வியுற்றதால் இந்திய அணியின் தங்கப்பதக்கக் கனவு சிதறியது. எனினும் மேரிகோம் வெண்கலப்பதக்கம் வென்று இந்தியாவுக்கு ஆறுதல் அளித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இதுவரை 1 வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றிருந்தது.

இந்நிலையில் மகளிருக்கான குத்துச்சண்டை போட்டியின் 51 கிலோ பிரிவின் அரையிறுதி போட்டி நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் இந்திய வீராங்கனை மேரி கோம், பிரிட்டன் வீராங்கனை நிகோலா அடம்சுடன் மோதினர்.

இதில் ஆரம்பம் முதலே பிரிட்டன் வீராங்கனை நிக்கோலா அடம்ஸ் ஆதிக்கம் செலுத்தினார். இதனால் மேரிகோம் புள்ளிகள் எடுக்கத் திணறினார். 4 சுற்றுகள் கொண்ட போட்டியில் 1-3, 1-2, 2-3, 2-3 (6-11) என மேரிகோம் தோல்வியடைந்தார்.

இந்திய வீராங்கனை மேரிகோம் அரையிறுதியில் தோல்வியடைந்ததன் மூலம் வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார். இதன்மூலம் இந்தியாவின்பதக்கங்களின்எண்ணிக்கை 4ஆக உயர்ந்துள்ளது.(ங)






# ஏன் இந்தத் தோல்வி....?

லண்டன் ஒலிம்பிக் ஆடவர் ஹொக்கியில் இந்திய அணியின் மீதான எதிர்பார்ப்பு அதிக அளவில் இருந்தது. ஆனால் இந்திய அணி பங்கேற்ற அனைத்து போட்டிகளிலும் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து ரசிகர்களை மிகுந்த ஏமாற்றமடையச் செய்துள்ளது.

இந்திய ஹொக்கி அணி தான் பங்கு கொண்ட முதலாவது ஆட்டத்தில் நெதர்லாந்திடம் 2-3 என்ற கணக்கிலும், நியூசிலாந்திடம் 1-3 என்ற கணக்கிலும், ஜேர்மனியிடம் 2-5 என்ற கணக்கிலும் தோல்வியைத் தழுவி அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை கோட்டைவிட்டது.

அதன் பின்னர் ஆறுதல் வெற்றி கூட பெறாமல் மீண்டும் படுதோல்வியடைந்துள்ளது. தென்கொரியாவிடம் 1-4 என்ற கணக்கிலும் கடைசி ஆட்டத்தில் நேற்று முன் [illegible]னம் பெல்ஜியத்திடம் 0-3 என்ற [illegible]ணக்கிலும்இந்திய ஹொக்கி அணி படுதோல்வியடைந்துள்ளது. ஒலிம்பிக் வரலாற்றில் லீக் ஆ[illegible]ங்களில் இந்திய அணி ஒரு [illegible]த்தில்கூட வெற்றி பெறாமல் படுதோல்வியடைந்தது இதுவே [illegible]தல் [illegible] மொத்தம் 12 அணிகள் கலந்து கொண்டுள்ளஒலிம்பிக் ஹொ[illegible]து இடத்தை பிடிப்பதற்கான ஆட்டத்தில் இந்திய அணி நாளை தென்னாபிரிக்காவை ச[illegible]திக்கவுள்ளது.(ங)

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

09.08.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 36 | 22 | 19 | 77 |
| அமெரிக்கா | 34 | 23 | 25 | 82 |
| பிரிட்டன் | 23 | 13 | 14 | 50 |
| தென்.கொரியா | 12 | 7 | 6 | 25 |
| ரஷ்யா | 11 | 19 | 23 | 53 |
| ஜேர்மனி | 9 | 15 | 10 | 34 |
| பிரான்ஸ் | 8 | 9 | 11 | 28 |
| ஹங்கேரி | 8 | 4 | 3 | 15 |
| இத்தாலி | 7 | 6 | 5 | 18 |
| ஆஸ்திரேலியா | 6 | 12 | 9 | 27 |

# சீனாவை மடக்கிய ஜப்பான்

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் 63 கிலோ பெண்கள் மல்யுத்த இறுதிப் போட்டி நேற்று மூன் தினம் நடைபெற்றது.


இதில் ஜப்பான் வீராங்கனை கௌரி இச்சோ 3-0 என்ற கணக்கில் சீன வீராங்கனை ரிக்கூ சிங்கை வீழ்த்தி தங்கத்தை வென்றார். தோல்வியுற்ற சீன வீராங்கனை ரிக்கூ சிங் வெள்ளிப் பதக்கத்தை பெற்றார்



# அரங்கில் உயிர் துறந்த ரசிகர்

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்ப நாள் நிகழ்விலிருந்து தொடர்ச்சியாகக் கண்டுகளித்து வந்த ரசிகர் ஒருவர், அரங்கத்திலேயே உயிரிழந்த சம்பவம் ஒலிம்பிக் திருவிழாவில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளைக் காண உலகம் முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் லண்டனில் குவிந்துள்ளனர். இவர்களுடன் லண்டன் கோல்செஸ்டர் பகுதியைச் சேர்ந்தவரான கான்ராட் ரீட்மேன் (வயது 49) என்ற ரசிகர் ஒருவரும் ஒலிம்பிக் போட்டிகளை தினமும் பார்த்து வந்தார். குறைந்தபட்சம் தினமும் 3 போட்டிகளையாவது கண்டுகளிப்பது இவரது வழக்கமாக இருந்தது. குறிப்பாக பிரிட்டன் வீரர்கள் பங்கேற்கும் போட்டிகளை காண்பதில் இவருக்கு அலாதி பிரியம். டைவிங் வீரர் டாம் டேலி, நீச்சல் வீராங்கனை ரெபேக்கா மற்றும் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் ஆகியோர் பங்கேற்ற போட்டிகளை பார்க்க இவர் தவறவில்லை. தினமும் போட்டிகள் முடிந்தபின்னர் வீட்டுக்கு செல்லும் ரீட்மேன், தனது தாயாரிடம் தன் நாட்டு வீரர்,வீராங்கனைகள் செய்த




சாதனைகள் ஒவ்வொன்றையும் கூறிப் பெருமைப்பட்டுள்ளார். இந்தநிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு பிரிட்டன் சைக்கிள் பந்தய வீராங்கனை விக்டோரியா பென்ட்ல்தான் பங்கேற்ற போட்டி மற்றும் பிரிட்டன் அணிகள் பங்கேற்ற டிராக் சைக்ளிங் போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்தார் அவர்.

அப்போது அவர் கழிவறைக்கு சென்றபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# ஒலிம்பிக் கிளிக்ஸ்










## மணல் விற்பனைக்கு

பூச்சு மணல், கண்டாவளை மணல்
விற்பனைக்குண்டு.
தொடர்பு- சண் 0770194786
(2186)(3.6.14)

## Colour Print

Colour Print Colour Photo copy
A4,A3 அளவுகளில் தரமான பிரதிகள்
30ரூபாவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
Online Uthayan
359, Kasthuriyar Road,
Jaffna.
T.P- 0215676722
(சி/2217)(3.14)



கணக்கீடு
திரு.பாலகஜன் B.Com
A/L 2014 & 2013
"வங்கி இணக்கக்கூற்று"
(இரு இடங்களிலும்)
(சி/2215)(3.6.14)

| புதிய பொருளியல் கல்லூரி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். Sat, Sun-8.00-9.00am | NEC - ஆனைப்பந்தி. Sat, Sun-7.00-8.00am |
| --- | --- |

ஆரம்பம்:- 11.08.2012 நாளை (சனி)
தனிப்பாட அனுமதி உண்டு

A/L 2014
தமிழ்
பத்மநாதன்
ஆரம்பம்:- 11.08.2012 சனி
(7.00 மணி)
ACADEMY OF LOGIC
பலாலிவீதி, இலுப்பையடிசந்தி.
(2193)(3.6.7)

## SPOKEN ENGLISH

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர்,
பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்,
A/L எடுத்த மாணவர், இளைஞர், யுவதிகளுக்கு
புதிய பிரிவு ஆரம்பம்
சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் 11.08.2012
பிரிவு 1 : காலை 9 – 10 பிரிவு 2 : காலை 11 – 12
பிரிவு 3 : மாலை 3 – 4 பிரிவு 4 : மாலை 5 – 6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
கட்டணம் : ரூபா 3000 காலம் : 1 – 3 மாதம்
பயிற்சி முடிவில் ஆங்கிலம் கதைக்க முடியாதோருக்கு
பயிற்சிக்கட்டணம் முழுமையாக திருப்பித்தரப்படும்
முதல் நாள் வகுப்புக்கு
அனுமதி, பயிற்சி புத்தகம், DVD
மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்
(21424)
MyWay 182, Stanley Rd, Jaffna
077 520 2747

யாழ்ப்பாணத்தில்...
IELTS BRITISH COUNCIL
பரீட்சை நாள்கள் வரை விசேட
வகுப்புகள் நடைபெறும்
(சி/2198)
பரீட்சைகள் October 27th
IELTS FOR UK
STUDENT VISA APPLICANTS
புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 11.08.2012
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road,
Thirunelvely - Jaffna.
Tel. 021 222 0384
077 8803887

## அனுசரணை வழங்குமாறு ஆடையில்லாப் போராட்டம்

தமது அணி வீரர்களுக்கான ஜேர்சிக்கான (சீருடைக்கான ) அனுசரணையை எந்தவொரு நிறுவனமும் வழங்காததால் அதிருப்தி அடைந்த பிரிட்டன் உதைபந்து அணி ஒன்று தனது வீரர்களை மேற் சட்டை இல்லாமல் புகைப்படம் எடுத்து பத்திரிகைகளில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனின் முதல் தர உதைபந்து அணிகளில் ஒன்று இயோவில் அணி. சோமர்செட்டில் உள்ள இந்த அணிக்கு மேல்சட்டைக்கான அனுசரணையாளர்கள் எவரும் கிடைக்கவில்லை. இதனால் அணி வீரர்கள் மனம் நொந்து போய் விட்டனர்.

இதையடுத்து தங்களது அணிக்கு சட்டை வாங்க நிதியுதவி கிடைக்காமல் இருப்பதை வெளியுலகுக்குத் தெரிவிக்க முடிவு செய்த அணியின் மேலாளர் கேரி ஜான்சன், அத்தனை வீரர்களையும் சட்டை போடாமல் வெற்று உடம்புடன் நிற்க வைத்து புகைப்படம் எடுத்து வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தப் புகைப்படத்தில் மேலாளர் கேரி, உதவி பயிற்சியாளர் டெர்ரி ஸ்கிவெர்டன், இன்னொரு உதவிப் பயிற்சியாளர் மட்டுமே முழு உடையில் உள்ளனர். வீரர்கள் அனைவரும் காற்சட்டை மட்டும் போட்டு சட்டையில்லாமல்வெறும் உடலுடன் காணப்படுகின்றனர்.

தற்போது இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியதையடுத்து பல்வேறு நிறுவனங்கள் அந்த அணியின் சீருடைக்கு நிதியுதவி செய்ய முன்வந்துள்ளனர்.

(ந)

## அலங்காரப்பந்தல் உரிமையாளர்களே!

எல்லாம் புதிசு

இந்த சந்தர்ப்பத்தை
நழுவ விடாதீர்கள்...
உங்களுக்காகவே
நாம் வழங்கும்
பிரத்தியேக சேவை

இந்தியாவிலிருந்து புதிதாக
இறக்குமதி செய்யப்பட்டு,
அனைவரையும் வியக்கவைக்கும்
வகையில் அழகிய வர்ணங்களில்
வேறுபட்ட டிசைன்களில்
வடிவமைக்கப்பட்ட
அலங்காரப் பந்தல் பனர்கள்,
பந்தல் தட்டிகள் மற்றும்
வளைவு முகப்புக்கள்
அனைத்தையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளுங்கள்.



அதிரடி
விலைக்கழிவு!!
ANDRA
DIGITAL PRINTING
(சி/2199)
#179, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
0212228929 / 0777481696

## விற்பனையாகிறது

புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இறுதி நேரத்தில் பயன்படுத்தி பயன் பெறத்தக்க வகையில் முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கிய 24 வினாப்பத்திரங்களின் தொகுப்பு.
வெற்றிக்கு வழிகாட்டி
ஆக்கம்- M.சுகந்தன் (யாழ்ற்ரன் கல்லூரி)
நாடெங்கிலும் கிடைக்கும்
யாழ்ப்பாணத்தில் - அன்னை புத்தகசாலை
வெளியீடு - யுனிலங்காஸ்
தொலைபேசி இல - 0776258778
(21511)(3.6.7)

## துரித மீட்டல் விரிவுரைகள்

G.A.Q, B.A. (யாழ், பேராதனை)
B.A. Part I,II யாழ்.
1 St in Com, B.Com I,II, III
பரீட்சைக்கு தோற்ற உள்ளோருக்கான விசேட விரிவுரைகள்
ஆரம்பம்: 11.08.2012 சனி, காலை 9 மணி
மேலதிக தொடர்பு: தொ.பே. 072 680 7756, 077 175 3838
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
58/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக) (சி/2190) (45.6.7)



## காரைநகர் திக்கரை முருகன் அடியார்களுக்கு ஓர் அறிவித்தல்

1) காரைநகர் களபூமி திக்கரையில் முருகன் எழுந்தருளியிருக்கும் திக்கரை முருகமூர்த்தி கோயிலின் சட்டபூர்வமான நம்பிக்கைப் பொறுப்பாளர் (அறங்காவலர்) நானே ஆவேன்

2) அண்மைக்காலமாக எமது ஆலய நிர்வாகத்தை சீரழிக்கும் நோக்கில் சிலர் செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இந் நோக்கத்துடன் எமது ஆலயத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும் மணிமண்டபத்தில் எனது அனுமதியின்றி அத்துமீறி பிரவேசித்து 12.08.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பொதுமக்களை அழைத்து கூட்டமொன்றை நடத்த இருப்பதாக கையெழுத்து இடப்படாத துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

03) ஆலயத்தின் இரண்டாம் வீதி எல்லையினுள் எவரும் முருகனை வழிபடும் நோக்கத்தை தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் பிரவேசித்து கூட்டம் எதனையும் நடத்தியோ அல்லது வேறு எந்த வித நடவடிக்கையிலும் ஈடுபட்டாலோ அவர்கள் மீது காவல்துறையினர் ஊடாகவும் நீதிமன்றத்தின் ஊடாகவும் கடுமையான குற்றவியல் குடியியல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென இத்தாள் அறியத்தருகின்றேன்

04) ஆலய முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை கடிதம் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ முருகன் மெய்யடியார்கள் என்னுடன் தொடர்பு கொண்டால் என்னால் இயன்றளவு அந்த ஆலோசனைகளை செயற்படுத்துவேன்

5) முருகன் மெய்யடியார்கள் எமது ஆலயத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு இயன்ற உதவிகளையும் ஆசீர்வாதத்தையும் எனக்கு நல்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

6) இந்த அறிவித்தல் எமது ஆலய சட்டத்தரணியின் சட்ட ஆலோசனையின் பிரகாரம் வெளியிடப்படுகிறது.

P. உமாசங்கர் , அறங்காவலர்,
திக்கரை முருகமூர்த்தி ஆலயம்,
காரைநகர்

தொடர்புகளுக்கு: 071 8130390, 0112 334027
(21456)(6.8.7)

## Arul Study Circle
## G.C.E. (O/L) 2012

மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு
முழு அனுரசணை: திரு.வே. தேவசேனாதிபதி (LLB)
நடைபெறும் இடமும் திகதியும்

### யாழ். வீரசிங்கம் மண்டபம்

12.08.2012 (ஞாயிறு காலை 6 – மாலை 5.30 (மாணவிகள் மட்டும்)
13.08.2012 (திங்கள் காலை 6 – மாலை 5.30 (மாணவர்கள் மட்டும்)
14.08.2012 (செவ்வாய் காலை 6 – மாலை 5.30 (இருபாலாரும்)

### வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

11.08.2012 (சனி காலை 8மணி – மாலை 5.30) (இருபாலாரும்)

### பூநகரி

17.08.2012 (வெள்ளி காலை 7.30 –மாலை 5.30) (இருபாலாரும்)

* வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம்,யாழ்ப்பாணம், தீவகம் அனைத்து வலய மாணவர்களும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் நூல்கள்

- கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 2008, 2009, 2010, 2011 ஆகிய வருட க.பொ.த. (சா.த) பரீட்சை வினா- விடை புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
- கணிதம் கடந்த 15 வருட க.பொ.த. (சா.த) பரீட்சை வினா - விடை புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
- அனைத்து பாடங்களிலும் மாதிரி வினாக்கொத்து (tutes) வழங்கப்படும்.
- விஞ்ஞான வினாவிடை நூல் இலவசமாக வழங்கப்படும். (21480) (45.6.7)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.